# 8

# நிதியியல்துறை செயலாற்றம் மற்றும் முறைமை உறுதித்தன்மை

## 8.1 பொதுநோக்கு

*இலங்கையின் நிதியியல் முறைமையின் உறுதித்தன்மை 2020 ஆண்டு காலப்பகுதியில் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றினால் ஏற்படுத்தப்பட்ட உள்நாட்டு மற்றும் உலகளாவிய சவால்மிக்க நிலைமைகளுக்கு மத்தியிலும் பேணிப் பாதுகாக்கப்பட்டிருக்கிறது. தற்போதைய உலகளாவிய நோய்த்தொற்றிலிருந்து தோன்றிய சவால்மிக்க பொருளாதாரச் சூழல் மற்றும் வியாபார நடவடிக்கைகளைப் பெருமளவிற்கு தடங்கலுறச் செய்த மாகாண ரீதியான அல்லது நாடளாவிய முடக்கல் காலம் என்பனவற்றிற்கு மத்தியிலும் வங்கித்தொழில் துறை கடன்கள் மற்றும் முற்பணங்கள், முதலீடுகள் மற்றும் வைப்புத் தளம் என்பனவற்றின் நியதிகளில் மிதமான வளர்ச்சியை எடுத்துக்காட்டியது. எனினும், நோய்த்தொற்றின் காரணமாக கொடுகடனின் தரம் மோசமடைந்தமை, நாட்டிற்கான தரமிடல் குறைக்கப்பட்டமை மற்றும் வெளிநாட்டு நிதியியல் உட்பாய்ச்சல்கள் குறைவுற்றமை என்பன வங்கித்தொழில் துறை தொழிற்பாடுகளின் மீது அழுத்தமொன்றினைத் தோற்றுவித்தன. பொருளாதாரத்திலுள்ள மோசமாகப் பாதிக்கப்பட்ட துறைகளுக்கு புத்துயிரளிப்பதன் முக்கியத்துவத்தினை அடையாளம் கண்டு கொண்ட மத்திய வங்கி நோய்த்தொற்றினால் பாதிக்கப்பட்ட வியாபாரங்களுக்கும் தனிப்பட்டவர்களுக்கும் ஆதரவளிக்கின்ற விதத்தில் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கு நெகிழ்ச்சித்தன்மையினை வழங்குவதற்காக பல அதிவிசேட ஒழுங்குமுறைப்படுத்தல் வழிமுறைகளை நடைமுறைப்படுத்தியது. கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றுடன் தொடர்புபட்ட விதத்தில் வளர்ச்சி தடங்கலுற்றமை மற்றும் ஒரு சில உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் தொடர்பில் தற்பொழுது இடம்பெற்றுவரும் கரிசனைக்குரிய பிரச்சனையின் விளைவாக பொதுமக்களின் நம்பிக்கை குறைவடைந்தமை என்பனவற்றின் முக்கிய காரணமாக, இவ்வாண்டுப்பகுதியில் சொத்துத் தளம் கடன்கள் மற்றும் முற்பணங்கள் மற்றும் வைப்புக்களில் ஏற்பட்ட வீழ்ச்சி அதேபோன்று செயற்படாக் கடன்களில் ஏற்பட்ட அதிகரிப்பு மற்றும் வீழ்ச்சியடைந்து செல்லும் இலாபத்தன்மை என்பனவற்றினால் பிரதிபலிக்கப்பட்டவாறு உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் துறை மந்தமான செயலாற்றமொன்றினைப் பதிவுசெய்தன. இத்துறையின் உறுதித்தன்மையினைப் பேணும் பொருட்டும் வைப்பாளர்களின் நலவுரித்துக்களைப் பாதுகாக்கும் விதத்திலும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் நிதியியல் நிலைமை மேலும் மோசமடைவதனைத் தவிர்ப்பதற்காகவும் மத்திய வங்கி நிதியியல் துறையினை ஒன்றிணைக்கும் முதன்மைத் திட்டத்தினை அறிமுகப்படுத்தியதுடன் சேர்த்து பல ஒழுங்குமுறைப்படுத்தல் நடவடிக்கைகளையும் முன்னெடுத்தது. நிதியியல் முறைமையிலுள்ள மற்றைய துறைகள் கலப்பான செயலாற்றத்தினைப் பதிவுசெய்தன. அதேவேளை, கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றுக் காலப்பகுதியில் நிதியியல் முறைமைக்கு ஆதரவளிப்பதன் அவசியத்தினைப் பரிசீலனையில் கொண்டும் பொருளாதார நடவடிக்கைகளுக்கு வசதியளிப்பதற்காகவும் 2020இல் பல நாணயக் கொள்கை தளர்த்தல் வழிமுறைகளை அறிமுகப்படுத்தியதன் மூலம் மத்திய வங்கி பணச் சந்தையில் திரவத்தன்மையின் கிடைப்பனவின் நிச்சயத்தன்மையினை உறுதிப்படுத்தியது. மாச்சு - ஏப்பிறல் காலப்பகுதியில் செலாவணி வீதத்தில் அழுத்தம் அவதானிக்கப்பட்ட போதும் இன்றியமையாதனவல்லாத இறக்குமதிகள் மற்றும் தெரிவுசெய்யப்பட்ட வெளிமுக பணவனுப்பல்கள் மீது தற்காலிகக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டமை, மேம்பட்ட தொழிலாளர் பணவனுப்பல்கள், மிதமான வெளிநாட்டுச் செலாவணித் தலையீடுகள் என்பனவற்றினைத் தொடர்ந்து பிற்பட்ட காலப்பகுதியில் அது தளர்த்தப்பட்டது.சந்தைக்கான வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சலின் குறைந்த மட்டம், கட்டுப்பாடுகள் படிப்படியாக தளர்த்தப்பட்டமை மற்றும் வெளிநாட்டுச் செலாவணிகள் மீண்டும் அனுப்பப்பட்டமை என்பனவற்றின் காரணமாக செலாவணி வீதத்தின் மீது மீண்டும் அழுத்தம் அவதானிக்கப்பட்டது.*

*இந்நிலைமை உலகளாவிய தரமிடல் முகவர்களினால் நாட்டிற்கான தரமிடல் தொடர்ச்சியாக தரம் குறைக்கப்பட்டமையின் மூலம் மேலும் தீவிரமடைந்தது. எனினும், மிதமான வெளிநாட்டுச் செலாவணி தலையீடுகள் மற்றும் மத்திய வங்கியினால் எடுக்கப்பட்ட அநேக கொள்கை வழிமுறைகள் என்பனவற்றின் காரணமாக செலாவணி வீதம் 2020 இறுதியில் ஏறத்தாழ ரூ.185 மட்டத்தில் காணப்பட்டது. கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை கொவிட்-19 நோய்த்தொற்றின் காரணமாக காணப்பட்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சியிலிருந்து அனைத்து விலைச் சுட்டெண் தொடர்பில் கூடிய பதிவை மேற்கொள்வதற்கு மீட்சியுற்றது. வெளிநாட்டு வெளிப்பாய்ச்சல் தொடர்ந்தும் காணப்பட்ட போதும் தாழ்ந்த வட்டி வீதச் சூழலொன்றில் உள்நாட்டு முதலீட்டாளர்களின் பங்குரிமை மூலதன முதலீடுகளை நோக்கி நகர்வதனை அவதானிக்க முடிந்தது. அதேவேளை, கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் மத்தியிலும் மத்திய வங்கி கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு தொடர்பான தடங்கலற்ற தொடர்ச்சியான பணிகள் வழங்கப்படுவதை நிலைநாட்டியது.*

## 8.2 வங்கித்தொழில் துறையின் செயலாற்றம்

**கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றலிருந்து தோன்றிய நீடித்த சவால்களுக்கு மத்தியிலும் கடந்த ஒரு சில ஆண்டுகளாக மூலதனம் மற்றும் திரவத்தன்மை தாங்கிருப்பு கட்டியெழுப்பப்பட்டமை என்பனவற்றின் முக்கிய காரணமாக வங்கித்தொழில் துறை தொடர்ந்தும் தாக்குப்பிடிக்கக்கூடியதாக இருந்ததுடன் 2019 உடன் ஒப்பிடுகையில் 2020 காலப்பகுதியில் குறிப்பிடத்தக்க வேகத்தில் தொடர்ந்தும் விரிவடைந்தது.** மேலும், நோய்த்தொற்றின் தாக்கத்தினை ஒழித்துவிடும் விதத்தில், மத்திய வங்கி, உலகளாவிய நோய்த்தொற்றினால் பாதிக்கப்பட்ட வியாபாரங்களுக்கும் தனிப்பட்டவர்களுக்கும் ஆதரவளிக்கின்ற விதத்தில் உரிமம்பெற்ற வங்கிகளுக்கு நெகிழ்ச்சித்தன்மையினை வழங்குவதற்காக அதிவிசேடத்துவமான ஒழுங்குமுறைப்படுத்தல்களை நடைமுறைப்படுத்தியது.

**நிதியியல் துறையில் ஆதிக்கம் பெற்றிருந்த வங்கிகள் தொழில்துறை 2020 இறுதியிலுள்ளவாறான மொத்தச் சொத்துக்களில் 72.5 சதவீதத்திற்கு வகைகூறியது.** தற்போதைய உலகளாவிய நோய்த்தொற்றிலிருந்து தோன்றிய சவால்மிக்க பொருளாதாரச் சூழல் மற்றும் வியாபார நடவடிக்கைகளைப் பெருமளவிற்கு தடங்கலுறச் செய்த மாகாண ரீதியான அல்லது நாடளாவிய முடங்கல் காலம் என்பனவற்றிற்கு மத்தியிலும் வங்கித்தொழில் துறையின் கொடுகடன் வளர்ச்சி 2019 உடன் ஒப்பிடுகையில் 2020இல் மேம்பட்டது. நிதியிடலின் ஆதிக்கம் கொண்ட மூலமாக வைப்புக்கள் காணப்பட்ட வேளையில், உலகளாவிய நோய்த்தொற்றின் விளைவாக வெளிநாட்டு நிதியிடல் உட்பாய்ச்சல்கள் குறைவடைந்தமையின் காரணமாக 2020 காலப்பகுதியில் வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகள் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்ததுடன் நாட்டிற்கான தரமிடல் குறைப்பினாலும் பாதிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் வங்கித்தொழில் துறையின் இலாபத்தன்மை மேம்பட்டமைக்கு வெளிநாட்டு நாணய மாற்று வீதத்திலும் வட்டி வீதத்திலும் ஏற்பட்ட அசைவுகளின் விளைவாக வட்டியல்லா வருமானத்தில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பும் வட்டியல்லா செலவினங்களில் ஏற்பட்ட குறைப்பும் வரிகளின் குறைப்புக்களுமே காரணங்களாக அமைந்தன.

அட்டவணை 8.1
நிதியியல் முறைமையின் மொத்தச் சொத்துக்கள்

| நிறுவனங்கள் | 2019 (அ) | | 2020 (ஆ) | |
|---|---|---|---|---|
| | ரூ. பில் | பங்கு (%) | ரூ. பில் | பங்கு (%) |
| **வங்கித்தொழில்துறை** | **14,442.1** | **72.0** | **17,087.9** | **72.5** |
| மத்திய வங்கி | 1,919.4 | 9.6 | 2,421.6 | 10.3 |
| உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் | 10,944.0 | 54.5 | 12,828.8 | 54.4 |
| உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் | 1,578.7 | 7.9 | 1,837.5 | 7.8 |
| **வைப்புக்களை ஏற்கும் ஏனைய நிதியியல் நிறுவனங்கள்** | **1,553.2** | **7.7** | **1,637.6** | **6.9** |
| உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் | 1,390.8 | 6.9 | 1,367.9 | 5.8 |
| கூட்டுறவு கிராமிய வங்கிகள் (இ) | 161.7 | 0.8 | 268.9 | 1.1 |
| சிக்கன மற்றும் கொடுகடன் கூட்டுறவுச் சங்கம் | 0.8 | 0.0 | 0.8 | 0.0 |
| **சிறப்பியல்பு வாய்ந்த நிதியியல் நிறுவனங்கள்** | **286.7** | **1.4** | **415.3** | **1.8** |
| சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகள் | 41.9 | 0.2 | 33.7 | 0.1 |
| உரிமம்பெற்ற நுண்கடன் கம்பனிகள் | 5.8 | 0.0 | 6.8 | 0.0 |
| முதனிலை வணிகர்கள் | 77.5 | 0.4 | 87.2 | 0.4 |
| பங்குத்தரகர்கள் (இ) | 9.7 | 0.0 | 17.1 | 0.1 |
| நம்பிக்கைக் கூறுகள் / நம்பிக்கை கூறு முகாமைத்துவக் கம்பனிகள் (இ) | 113.8 | 0.6 | 190.5 | 0.8 |
| சந்தை இடையீட்டாளர்கள் (ஈ) | 18.4 | 0.1 | 60.1 | 0.3 |
| துணிகர மூலதனக் கம்பனிகள் | 19.5 | 0.1 | 19.9 | 0.1 |
| **ஒப்பந்த அடிப்படையிலான சேமிப்பு நிறுவனங்கள்** | **3,787.5** | **18.9** | **4,429.8** | **18.8** |
| காப்புறுதிக் கம்பனிகள் | 689.6 | 3.4 | 790.1 | 3.4 |
| ஊழியர் சேம நிதியம் | 2,540.4 | 12.7 | 2,824.3 | 12.0 |
| ஊழியர் நம்பிக்கை நிதியம் | 343.3 | 1.7 | 380.4 | 1.6 |
| அனுமதியளிக்கப்பட்ட ஓய்வூதியம் மற்றும் சேம நிதியங்கள் (உ) | 149.1 | 0.7 | 364.9 | 1.5 |
| அரச பணி சேம நிதியம் | 63.7 | 0.3 | 70.1 | 0.3 |
| **மொத்தம்** | **20068.2** | **100.0** | **23,570.6** | **100.0** |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) 2020இன் 4ஆம் காலாண்டிற்கான தரவு கிடைக்காமையால், 2020இன் 3ஆம் காலாண்ற்கான காலாண்டுகளுக்கிடையிலான வளர்ச்சி, 2020இன் சொத்துத்தளத்தை கணிக்க பயன்படுத்தப்பட்டது.
(ஈ) முதலீட்டு முகாமையாளர்கள், கடன் வசதிகள் வழங்குவோர் மற்றும் கொடுகடன் தரமிடல் முகவர்கள் உள்ளடங்கலான தரவு. 2020இன் 4ஆம் காலாண்டிற்கான தரவு கிடைக்காமையால், 2020ஆம் ஆண்டின் 3ஆம் காலாண்டிற்கான காலாண்டுகளுக்கிடையிலான வளர்ச்சி 2020இன் சொத்துத் தளத்தை மதிப்பிடப் பயன்படுத்தப்பட்டது.
(உ) அனுமதியளிக்கப்பட்ட மற்றும் சேமலாப நிதியங்களின் சொத்துத்தள தரவு கிடைக்காத காரணத்தால் முன்னைய ஆண்டின் பெறுமதி 2019ஆம் ஆண்டிற்கும் பாவிக்கப்பட்டுள்ளது.

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி
கூட்டுறவு அபிவிருத்தி திணைக்கலளம்
தொழில் திணைக்களம்
ஓய்வுதியத் திணைக்களம்
ஊழியர் நம்பிக்கை நிதியசபை
இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு
சணச கூட்டமைப்பு
இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு
இலங்கை கூறு நம்பிக்கை சங்கம்
துணிகர மூலதன கம்பனிகள்

**வியாபார விரிவாக்கம்:** 2020 இறுதியளவில், வங்கித்தொழில் துறையானது, 11 வெளிநாட்டு வங்கிகளின் கிளைகள் உட்பட, 24 உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளையும் 6 உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளையும்

8

வரைபடம் 8.1
நிதியியல்துறையின் செயலாற்றம்



**உள்ளடக்கி 30 வங்கிகளாகக் காணப்பட்டது.** ஐசிஐசிஐ வங்கி லிமிடெட் மற்றும் எக்சிஸ் பாங்க் லிமிடெட் என்பனவற்றின் தலைமை அலுவலகத்தினால் எடுக்கப்பட்ட தீர்மானங்களின் அடிப்படையில் இவ்விரு வங்கிகளுக்கும் இலங்கையில் தொழிற்படுவதற்கு வழங்கப்பட்ட வங்கித்தொழில் உரிமங்கள் 2019இல் ஆரம்பிக்கப்பட்ட மூடுதலுக்கான நடவடிக்கைகளுக்கமைய 2020ஆம் ஆண்டுப்பகுதியில் இரத்துச் செய்யப்பட்டன. வங்கித்தொழில் பணிகளை அதிகரித்தமையின் மூலமும் வங்கித்தொழில் வலையமைப்பினை விரிவுபடுத்தியதன் மூலமும் வங்கித்தொழில் துறை, பொருளாதார வளர்ச்சிக்கும் நிதியியல் வசதிக்குட்படுத்தலுக்கும் தொடர்ந்தும் ஆதரவளித்தது. 2020இல் கொவிட்-19 பரவலைத் தடுக்கும் பொருட்டு விதிக்கப்பட்ட ஊரடங்கு மற்றும் முடங்கல்களின் காரணமாக வங்கிகளை நேரடியாக அணுகுவதன் மீதான கட்டுப்பாடுகளின் மத்தியில் நிதியியல் வசதிக்குட்படுத்தலுக்கு வசதியளிப்பதற்காக பெரும்பாலான வங்கிகள் தொழில்நுட்பங்களை அடிப்படையாகக் கொண்ட சாதனங்கள்/ பணிகளை அறிமுகப்படுத்தின.

அட்டவணை 8.2

வங்கிகள், வங்கிக் கிளைகள் மற்றும் ஏனைய வங்கி பணிநிலையங்களின் பரம்பல்கள்

| வகை | 2019 முடிவில் (அ) | 2020 முடிவில் (ஆ) |
|---|---|---|
| உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் | | |
| **I.** உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் மொத்த எண்ணிக்கை | 26 | 24 |
| உள்நாட்டு வங்கிகள் | 13 | 13 |
| வெளிநாட்டு வங்கிகள் | 13 | 11 |
| **II.** உரிமம்பெற்ற வர்த்தக வங்கிப்பணி நிலையங்களின் மொத்த எண்ணிக்கை | 6,690 | 6,703 |
| கிளைகள்(இ) | 2,907 | 2,916 |
| உள்நாட்டு வங்கிகள் | 2,842 | 2,854 |
| வெளிநாட்டு வங்கிகள் | 50 | 47 |
| மாணவர் சேமிப்பு பிரிவுகள் | 3,783 | 3,787 |
| **III.** தன்னியக்க கூற்றுப் பொறிகள் | 5,393 | 5,744 |
| உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் | | |
| **I.** உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் மொத்த எண்ணிக்கை | 6 | 6 |
| தேசிய மட்ட சேமிப்பு வங்கிகள் | 1 | 1 |
| வீடமைப்பு நிதி நிறுவனங்கள் | 2 | 2 |
| ஏனைய உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் | 3 | 3 |
| **II.** உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிப்பணி நிலையங்களின் மொத்த எண்ணிக்கை | 700 | 703 |
| கிளைகள் (இ) | 700 | 703 |
| தேசிய மட்ட சேமிப்பு வங்கி | 262 | 265 |
| வீடமைப்பு நிதி நிறுவனங்கள் | 64 | 64 |
| ஏனைய உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் | 374 | 374 |
| தன்னியக்க கூற்றுப் பொறிகள் | 401 | 432 |
| வங்கிக் கிளைகளினதும் ஏனைய பணி நிலையங்களினதும் மொத்த எண்ணிக்கை | 7,390 | 7,406 |
| தன்னியக்க கூற்றுப் பொறிகளின் மொத்த எண்ணிக்கை | 5,794 | 6,176 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) மாணவர் சேமிப்புப் பிரிவுகள் தவிர்ந்த அனைத்து வங்கிப் பணிநிலையங்கள்.

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

**சொத்துக்கள்: இவ்வாண்டுப்பகுதியில் வங்கித்தொழில் துறையின் சொத்துத் தளம் ரூ.2.1 றில்லியனால் அதிகரித்து, 2020 திசெம்பர் இறுதியில் ரூ.14.6 றில்லியனை விஞ்சியதன் மூலம் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 2019 இறுதியில் பதிவுசெய்யப்பட்ட 6.2 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 17.1 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்தது.** தற்பொழுது நிலவும் உலகளாவிய நோய்த்தொற்றின் காரணமாக தோன்றிய சவால்மிக்க பொருளாதார மற்றும் வியாபாரச் சூழலுக்கு மத்தியிலும் முதலீட்டிலும் கொடுகடனிலும் ஏற்பட்ட வளர்ச்சி சொத்துக்களின் வளர்ச்சிக்குப் பங்களித்தது. கடன்கள் மற்றும் முற்பணங்களில் ஏற்பட்ட வளர்ச்சி 2019இன் 5.6 சதவீதத்திலிருந்து 2020இல் 11.9 சதவீதத்திற்கு மேம்பட்டது. 2020இல் கடன் சொத்துப்பட்டியலில் ஏற்பட்ட அதிகரிப்பில் ஏறத்தாழ 83 சதவீதம் கொண்ட அதிகரிப்பிற்கு ரூபாக் கடன்களில் ஏற்பட்ட அதிகரிப்பே காரணமாக அமைந்தது. கொடுகடனில் ஏற்பட்ட அதிகரிப்பு பொருளாதாரத்தின் முக்கிய அனைத்துத் துறைகளிலும் பன்முகப்படுத்தப்பட்டிருந்தது. சாதனங்களின் நியதிகளில் மீள்அட்டவணைப்படுத்தப்பட்ட கடன்கள் (38.0 சதவீதம்) வீடமைப்புக் கடன்கள் (18.0 சதவீதம்) தவணைக் கடன்கள் (14.1 சதவீதம்) என்பன முக்கிய சாதனங்களாக காணப்பட்டதுடன் இவை 2020இல் உயர்ந்த வளர்ச்சி வீதங்களைப் பதிவுசெய்தன. அதேவேளை முதலீடுகளின் ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சி, இவ்வாண்டிற்கான கொடுகடனை விஞ்சி 2019 இறுதியின் 12.2 சதவீதத்திலிருந்து 2020 இறுதியில் 40.0 சதவீதத்திற்கு அதிகரித்தது. 2020ஆம் ஆண்டுப்பகுதியில் முதிர்ச்சிக்காக வைத்திருக்கப்பட்ட சொத்துப்பட்டியல் 41.8 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு திறைசேரி முறிகளும் திறைசேரி உண்டியல்களும் முறையே ரூ.804.7 பில்லியனாலும் ரூ.55.9 பில்லியனாலும் அதிகரித்த வேளையில் இலங்கை அபிவிருத்தி முறிகளில் செய்யப்பட்ட முதலீடுகள் ரூ.73.3 பில்லியனால் வீழ்ச்சியடைந்தமையே காரணமாகும். திறைசேரி

அட்டவணை 8.3

வங்கித் தொழில் துறையின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் உள்ளடக்கம்

| விடயம் | 2019 (அ) ரூ.பில் | 2019 (அ) பங்கு (%) | 2020 (ஆ) ரூ.பில் | 2020 (ஆ) பங்கு (%) | மாற்றம் (%) 2019 (அ) | மாற்றம் (%) 2020 (ஆ) |
|---|---|---|---|---|---|---|
| சொத்துக்கள் | | | | | | |
| கடன்கள் மற்றும் முற்பணங்கள் | 8,122.4 | 64.9 | 9,091.7 | 62.0 | 5.6 | 11.9 |
| முதலீடுகள் | 2,996.7 | 23.9 | 4,195.8 | 28.6 | 12.2 | 40.0 |
| ஏனையவை (இ) | 1,403.6 | 11.2 | 1,378.8 | 9.4 | -1.8 | -1.8 |
| பொறுப்புக்கள் | | | | | | |
| வைப்புக்கள் | 9,162.3 | 73.2 | 11,140.9 | 76.0 | 7.9 | 21.6 |
| கடன் பெறுகைகள் | 1,679.4 | 13.4 | 1,692.2 | 11.5 | -4.8 | 0.8 |
| முதலீட்டு நிதிகள் | 1,129.9 | 9.0 | 1,254.2 | 8.6 | 9.7 | 11.0 |
| ஏனையவை | 551.1 | 4.4 | 578.9 | 3.9 | 8.5 | 5.0 |
| மொத்த சொத்துக்கள்/ பொறுப்புக்கள் | 12,522.7 | 100.0 | 14,666.3 | 100.0 | 6.2 | 17.1 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) காசு மற்றும் வங்கி மீதிகள், வைப்புகள், நேர்மாற்று மீள்கொள்வனவு உடன்படிக்கைகள் மற்றும் நிலையான சொத்துக்கள் உள்ளடங்கலாக

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

8

சிறப்புக்குறிப்பு 07
வங்கித்தொழில் துறையில் புதியதோர் சகாப்தம் : பசுமையும் அதைத்தாண்டியும்

**அறிமுகம்**

நிலைபெறத்தக்க நிதி என்பது நிறுவனங்களுக்கு, வாடிக்கையாளர்களுக்கு அதேபோன்று பரந்தளவில் சமூகத்திற்கு நீண்ட காலம் நிலைத்திருக்கும் நன்மைகளை நோக்காகக் கொண்டு நிறுவனங்களின் தீர்மானம் எடுத்தல் செயன்முறை மற்றும் வியாபார நடவடிக்கைகள் ஆகியவற்றினுள் சுற்றாடல் சார்ந்த, சமூக மற்றும் ஆளுகைப் பிரமாணத்தை ஒருங்கிணைக்கின்ற நிதியியல் பணிகள் என பரந்தளவில் வரைவிலக்கணம் செய்யப்படக் கூடியது. எவ்வாறாயினும், நிலைபெறத்தக்க நிதி என்பதற்கு உருக்கொடுப்பது எது என்பது பற்றி தனியொரு, உலகளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட வரைவிலக்கணம் காணப்படவில்லை.

பசுமை நிதி என்பது நிலைபெறத்தக்க நிதியிடலின் கூறொன்றாகும். பசுமை நிதி என்பது பொதுவாக காலநிலை மாற்றம் மற்றும் குறைந்த காபன் பொருளாதாரமொன்றிற்கு மாறுதலுடையும் சவால்களை எதிர்கொள்வதை நோக்கி நிதியியல் பாய்ச்சலை வழிப்படுத்துவதைக் குறிப்பிடுகின்றது. பொருளாதார வளர்ச்சியினை அடைகின்ற அதேவேளை, மாசாக்கத்தையும் பச்சை வீட்டு வாயு வெளியேற்றத்தையும் குறைத்தல், கழிவுகளைக் குறைத்தல் மற்றும் இயற்கை மூலவளங்களைப் பயன்படுத்துவதில் வினைத்திறனை அதிகரித்தல் என்பவற்றிற்கான நிதி என பசுமை நிதிக்கு பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்திக்கான அமைப்பு வரைவிலக்கணம் தருகின்றது.

தற்காலத்தில் சனத்தொகை வளர்ச்சி, சுற்றாடல் சீர்குலைதல், காலநிலை மாற்றம், வறுமை மற்றும் சமத்துவமின்மை என்பவற்றின் விளைவாக நிலைபெறத்தக்க நிதி நடைமுறைகள், வங்கித்தொழில் துறையின் எதிர்காலமாக துரிதமாகத் தோற்றம்பெறுகின்றன. ஐக்கிய நாடுகளும் நிலைபெறத்தக்க அபிவிருத்தியின் முக்கியத்துவத்தினை இனங்கண்டு அத்தகைய சவால்களை எதிர்கொள்வதற்கு மற்றும் சுபீட்சத்தினை ஊக்குவிக்கின்ற அதேவேளை, புவியினைப் பாதுகாப்பதற்கு அனைத்து நாடுகளினதும் நடவடிக்கைகளுக்கு அழைப்பு விடுப்பதற்கு நிலைபெறத்தக்க அபிவிருத்தி இலக்குகளை அறிமுகம் செய்துள்ளது.

**இலங்கை மத்திய வங்கியின் நிலைபெறத்தக்க நிதி பயணமும் வழிகாட்டலும்**

இலங்கையில் நிலைபெறத்தக்க நிதியினை தொடங்குவதன் முக்கியத்துவம் நிதியியல் துறையின் ஆர்வலர்கள் மத்தியில் பரந்தளவில் ஆராயப்படுகின்றது. 2016இல் இலங்கை மத்திய வங்கி பன்னாட்டு நிதிக் கூட்டுத்தாபனத்துடன் கூட்டிணைந்து நிலைபெறத்தக்க வங்கித்தொழில் வலையமைப்பிற்கு ஆதரவளித்தது. இது, வளர்ந்து வருகின்ற சந்தைகளிலுள்ள வங்கித்தொழில் சொத்துக்களின் 86 சதவீதத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்துக்கின்றது.

2017இல் இலங்கை மத்திய வங்கி, தொடர்புடைய அரசாங்க முகவராண்மைகள், வங்கித்தொழிற் துறை மற்றும் பல வகையான நிதியியல் துறை ஆர்வலர்களுடனான ஆலோசனையுடன் நிலைபெறத்தக்க நிதியியல் நடைமுறைகளை வசதிப்படுத்தி ஊக்குவிப்பதற்கு இலங்கையில் நிலைபெறத்தக்க நிதிக்கான வழிகாட்டலொன்றினை உருவாக்கும் செயன்முறையொன்றினை தொடங்கி வைத்தது. வசதிக்குட்படுத்துகின்ற அத்துடன் பல்துறை ஆர்வலர் செயன்முறையொன்றினூடாக இலங்கையில் நிதியியல் துறைக்கு நிலைபெறத்தக்க நிதி வழிகாட்டலை உருவாக்குவதனை வசதிப்படுத்துவதற்கு இலங்கை மத்திய வங்கி வழிநடாத்தல் குழுவொன்றினையும் நியமித்தது. பன்னாட்டு நாணயக் கூட்டுத்தாபனத்தின் தொழில்நுட்ப உதவியுடன் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் உயிர் பல்லினத்தன்மை நிதி முயற்சியின் நிதியியல் உதவியுடன் 2019 யூனில் நிலைபெறத்தக்க நிதிக்கான வழிகாட்டல் தொடங்கிவைக்கப்பட்டது. வரையறுக்கப்பட்ட இலங்கை வங்கியாளர் அமைப்பு (உத்தரவாதம்), இலங்கை நிதி நிறுவனங்களின் அமைப்பு, இலங்கைக் காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு மற்றும் இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு உள்ளடங்கலாக ஆர்வலர்களுடனான ஆலோசனையுடன் இவ் வழிகாட்டல் உருவாக்கப்பட்டது.

இவ்வழிகாட்டலானது, நிதியியல் ஒழுங்குமுறைப்படுத்துனர்களுக்கும் நிதியியல் நிறுவனங்களுக்கும் அவர்கள் நிதியளிக்கின்ற கருத்திட்டங்களுடன் இணையப்பெற்ற சுற்றாடல் சார்ந்த, சமூக மற்றும் ஆளுகை இடர்நேர்வுகளைச் செயற்திறன்மிக்கவாறு முகாமை செய்வதற்கான பரந்தளவிலான நோக்கொன்றினை வழங்குவதுடன் பசுமையான, காலநிலை நட்புமிக்க அத்துடன் சமூக ரீதியாக வசதிக்குட்படுத்துகின்ற தொழில்களுக்கு உதவுவதனை ஊக்குவிக்கின்றது. இது வங்கித் தொழில் மற்றும் நிதி, மூலதனச் சந்தைகள் அத்துடன் காப்புறுதித் தொழிற்துறை உள்ளடங்கலாக நிதியியல் துறையின் பங்களிப்பினை அதிகரிக்க முனைவதுடன் மிகவும் தாக்குப்பிடிக்கத்தக்க அத்துடன் நிலைபெறத்தக்க பசுமைப் பொருளாதாரத்தினைக் கட்டியெழுப்புவதற்கு உதவுகின்றது.

வரையறுக்கப்பட்ட இலங்கை வங்கியாளர் அமைப்பு (உத்தரவாதம்) 2015 யூலையில் நிலைபெறத்தக்க வங்கித்தொழில் முயற்சியொன்றினைத் தொடங்கியது. அதன் நோக்கம் இலங்கையில் நிலைபெறத்தக்க பொருளாதார வளர்ச்சியினை வசதிப்படுத்தக் கூடிய பொறுப்புமிக்க வங்கித்தொழில் நடத்தைகள் பற்றி முன்னேற்றகரமான புரிந்துகொள்ளலுக்கும் நடவடிக்கைக்கும் தளமொன்றினை வழங்குவதாகும். அதன் நிலைபெறத்தக்க வங்கித்தொழில் முயற்சி, தொடக்கத்திலிருந்து வெற்றிகரமான வடிவம் பெற்றதுடன் 11 நிலைபெறத்தக்க வங்கித்தொழில் கோட்பாடுகளைக் கொண்ட தொகுதியொன்றினைத் தொடங்கியது. பங்கேற்கின்ற வங்கிகளின் குழுவொன்றின் மூலம் உருவாக்கப்பட்ட இக் கோட்பாடுகள் மிகவும் நிலைபெறத்தக்க பொருளாதார வளர்ச்சியினை உள்நாட்டில் வசதிப்படுத்துவதற்கு இலங்கையின் வங்கித்தொழில் துறை தொழிலினை எவ்வாறு நடாத்துவது என்பதனை வரைவிலக்கணம் செய்கின்றது.

ஒவ்வொரு நாடும் அதன் உள்நாட்டு அமைப்பிற்கும் முன்னுரிமைகளுக்கும் பதிலிறுத்தும் விதத்தில் நிலைபெறத்தக்க நிதியினை ஊக்குவிப்பதற்காக தனித்துவமிக்க வழிகளை தேர்ந்தெடுத்துள்ளன. வங்காளதேசம், பிரேசில், சீனா, இந்தோனேசியா, மொறோக்கோ, நைஜீரியா, வியட்நாம் போன்ற நாடுகளில் கொள்கை அடிப்படையிலமைந்த முயற்சிகளூடாக ஒழுங்குமுறைப்படுத்துனர்கள் தலைமையேற்றுள்ளனர். இதற்கு

8

மாறாக கம்போடியா, ஈக்குவடோர், கென்யா, மெக்சிகோ, மொங்கோலியா, தென்னாபிரிக்கா, துருக்கி போன்ற நாடுகளில் வங்கித்தொழில் அமைப்புகள் தன்னார்வ, தொழிற்துறை முன்னிலையான முயற்சிகளை ஒருங்கிணைத்துள்ளன. இலங்கையில், இலங்கை வங்கியாளர் அமைப்பு நிலைபெறத்தக்க வங்கித்தொழில் முயற்சியினை தொடங்கி இலங்கை மத்திய வங்கி ஆர்வலர்களுடன் கூட்டிணைகின்ற அத்துடன் வழிகாட்டலைத் தொடங்கிவைக்கின்ற இரு அணுகுமுறைகளும் ஒன்றுசேர்ந்துள்ள தனித்துவமிக்க நிலை காணப்படுகின்றது.

ஏற்கனவே, இலங்கையில் மிகப்பெரிய உரிமம்பெற்ற வங்கிகள் நிலையான நிதி வங்கிப் பிரிவுகளை நிறுவியுள்ளன மற்றும் புதிப்பிக்கத்தக்க சக்தி, தொழில்முனைவோர் அபிவிருத்தி, சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் பெண்கள் வலுப்படுத்தல் போன்றவற்றை மையமாகக் கொண்ட நிலையான முயற்சிகளைத் தொடங்கியுள்ளது. இலங்கை உரிமம்பெற்ற வங்கிகளில் பல ஒரு தசாப்தத்திற்கும் மேல் உலகளாவிய அறிக்கையிடல் முயற்சியின் மூலம் வெளியிடப்பட்ட வழிகாட்டல்களைப் பயன்படுத்தி அவற்றின் ஆண்டறிக்கைகளின் "நிலைபெறு தன்மை" பற்றி ஏற்கனவே அறிக்கையிடுகின்றன. மேலும், இலங்கை வங்கியாளர் அமைப்பின் தலைமையிலான முன்முயற்சிகளும் வங்கிக் கற்கைகளுக்கான ஆய்வு நிலையமும் வங்கித் தொழில் துறையினுள் நிலைபெறத்தக்க நிதி பற்றிய விழிப்புணர்வினையும் இயலளவினையும் அதிகரிப்பதற்கு பல நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தியுள்ளதுடன் நிலைபெறத்தக்க வங்கித்தொழில் முயற்சியானது நிலைபெறத்தக்க நிதி மீதான இயலளவு விருத்தியினை வசதிப்படுத்துவதற்கு இ-கற்றல் தளமொன்றினையும் தொடங்கியது.

### வங்கித்தொழில் ஒழுங்குமுறைப்படுத்தலும் நிலைபெறத்தக்க நிதியும்

இலக்காகக் கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை அடைந்துகொள்வதற்கு வழிகாட்டலில் குறிப்பிடப்பட்டவாறு இலங்கை மத்திய வங்கி, தொடர்புடைய ஆர்வலர்களின் ஆதரவுடன் தற்போது நடவடிக்கைத் திட்டத்தினை நடைமுறைப்படுத்தும் செயன்முறையினை முன்னெடுக்கின்றது.

பசுமை மற்றும் நிலைபெறத்தக்க நிதி முயற்சிகள் பலவற்றில் இனங்காணப்பட்ட முக்கிய பிரச்சினையாக விளங்குவது நியமமான வரைவிலக்கணங்களையும் நிலைபெறத்தக்க நிதியினை உள்ளடக்குகின்ற பகுப்பியல் அத்துடன் நிலைபெறத்தக்க நிதித் தாக்கங்களை அளவிடுவதற்கான ஒப்பிடத்தக்க கணியங்கள் மற்றும் முறையியல்கள் போன்ற இரண்டினையும் உருவாக்குவதற்கான தேவையாகும். நிலைபெறத்தக்க பகுப்பியல் என்பது சுற்றாடல் ரீதியாக நிலைபெறத்தக்க பொருளாதாரச் செயற்பாடுகளைக் கொண்ட அட்டவணையொன்றைத் தாபிக்கின்ற வகைப்படுத்தல் முறைமையொன்றாகும்.

வழிகாட்டலின் நடவடிக்கைகளை இயங்கச் செய்வதில், இலங்கை மத்திய வங்கியானது நிலைபெறத்தக்க நிதியினை நோக்கி நிதியியல் துறையை வசதிப்படுத்துவதில் முக்கிய தேவைப்பாடொன்றாக விளங்குகின்ற ஏற்புடைய பகுப்பியலினை உருவாக்குவதற்கான தேவையினை இனங்கண்டுள்ளது. தற்போது இலங்கை மத்திய வங்கி, காலநிலை மாற்றத் தணிப்புகளிலும் அத்துடன் இலங்கையின் அமைப்பை ஏற்றுக்கொள்வதிலும் முக்கிய வகிபாகங்களை ஆற்றுகின்ற பொருளாதார நடவடிக்கைகள்/ துறைகளின் பகுப்பினை இயலச்செய்கின்ற வகைப்படுத்தல் முறைமையொன்றாக செயற்படுவதற்கு இலங்கை நிதியில் துறைக்கான பகுப்பியலொன்றினை உருவாக்கும் செயன்முறையினை முன்னெடுக்கின்றது.

நிலைபெறத்தக்க நிதி மீது ஒழுங்குமுறைப்படுத்துனர்களுக்காக கிடைக்கப்பெறுகின்ற ஒழுங்குமுறைப்படுத்தல் கருவித்தொகுதி பின்வரும் கருவிகளை உள்ளடக்குகின்றது.

- சில காபன் செறிவுமிக்க அல்லது மாசுபடுத்தும் செயற்பாடுகளுக்கு கொடுகடன் வழங்குவதன் மீதான உச்சத்தினை அறிமுகப்படுத்தல்
- பசுமை நிதி வழிகாட்டல்கள் மற்றும் கட்டமைப்புகள்
- காலநிலை தொடர்புபட்ட அழுத்தப் பரிசோதனை
- காலநிலை தொடர்புபட்ட அத்துடன் பசுமை நிதியிடல் இடர்நேர்வுகள் மீதான வெளிப்படுத்தல் தேவைப்பாடுகள்
- பணிக்கப்பட்ட பசுமைக் கொடுகடன் கொள்கைச் சாதனங்கள் அத்துடன்
- பசுமை வேறுபடுத்தப்பட்ட ஒதுக்குத் தேவைப்பாடு.

இலங்கை மத்திய வங்கியின் வழிகாட்டலுக்கமைவாக சந்தை அபிவிருத்திகள் மற்றும் தேவைகளை பரிசீலனையிற்கொண்டு நிலைபெறத்தக்க நிதியினை ஊக்குவிக்கும் நோக்கத்திற்காக, பொருத்தமான சாதனங்களைத் தொடங்குவதற்கு இலங்கை உத்தேசிக்கின்றது. பசுமை நிதி வழிகாட்டல்கள் மற்றும் கட்டமைப்புகள் போன்ற நிலைபெறத்தக்க நிதிக் கருவிகள் உரிய மேற்பார்வை பரிசீலனைகளின் பின்னர் எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்துவதற்கு கருத்திற்கொள்ளப்படும்.

உலகம் பூராகவுமுள்ள ஒழுங்குமுறைப்படுத்துனர்கள் தாம் உணர்ந்துள்ள இடர்நேர்வுத் தன்மையினைக் கணிக்கின்ற போது துணையளிக்கின்ற சொத்துக்களின் சூழலைக் காக்கின்ற அல்லது சூழலைப் பாதிக்கின்ற தன்மைகளை திட்டவட்டமாகக் கருத்தில் எடுக்கவில்லை. சில மத்திய வங்கிகளும் மேற்பார்வையாளர்களும் தமது மேற்பார்வை எதிர்பார்க்கைகளை சரிப்படுத்தி தொடர்பூட்டுவதன் மூலம் மேற்பார்வைக் கட்டமைப்பினுள் காலநிலை தொடர்புபட்ட இடர்நேர்வுகளை மேலும் ஒருங்கிணைத்துள்ளனர்.

முன்னோக்கிய பார்வையில், காலப்போக்கில் சுற்றாடல் ரீதியாக நிலைபெறாத அல்லது நிலைபெறத்தக்க நடவடிக்கைக்கு கொடுகடனை வழங்குவதிலிருந்தான நிதியியல் உறுதிப்பாட்டின் மீது சாத்தியமான தாக்கத்தினை மதிப்பிடுகின்ற சூழ்நிலைகளை பாசல் மூலதனக் கட்டமைப்பின் கீழ் வங்கிகளின் தூண் 2 மேற்பார்வை மீளாய்வினுள் கூட்டிணைப்பதற்கான சாத்தியத்தினையும் வங்கிகள் கண்டறியலாம்.

### சவால்கள்

தற்போது, ஒரேசீர்மையான நிலைபெறத்தக்க நிதிப் பகுப்பியல் எதுவும் உலகளவில் நடைமுறைப்படுத்தப்படவில்லை. நிலைபெறத்தக்க நிதி பற்றிய மதிப்பீட்டில் சுற்றாடல் ரீதியான சமூக மற்றும் ஆளுகைக் காரணிகள் முரண்பட்டதாகவும் இணையற்றதாகவும் கருதப்படுவதற்கு இது வழிவகுத்துள்ளது.

நிபுணத்துவம் போதாமை மற்றும் இயலளவு என்பன

ஒழுங்குமுறைப்படுத்துனர்கள் உள்ளடங்களாக அனைத்து ஆர்வலர்களாலும் முகங்கொடுக்கப்படுகின்ற தடையொன்றாக விளங்கும். விசேடமாக, புதிய பசுமை உற்பத்திகளும் தொழில்நுட்பங்களும் இயக்கவாற்றல்மிக்கதாக பரிணமிக்கும் என்பதுடன் வெற்றிகரமான இயக்கத்தைக் கணிப்பதற்கு நிபுணத்துவமும் அனுபவமும் தேவையாகவிருக்கும். எனவே, நிலைபெறத்தக்க நிதி முயற்சியினை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதற்கு இயலளவு விருத்தி முயற்சிகளும் தொழில்நுட்ப வழிகாட்டலும் இன்றியமையாததாகும்.

கடன் தோற்றம்பெறுதல் மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவம் இரண்டிலிருந்தும் வருகின்ற நிலைபெறத்தக்க நிதி பற்றிய தகவல் சமச்சீரின்மை நிலைபெறத்தக்க நிதி முயற்சிகளைத் தடைப்படுத்தலாம். எனவே, பரிணமிக்கின்ற நிலைபெறத்தக்க நிதித் தேவைகளை நிறைவேற்றுவதற்கு தகவல் முறைமைகளும் தகவல் பாய்ச்சல்களும் மேம்படுத்தப்பட வேண்டும்.

இடர்நேர்வு முகாமைத்துவ நடைமுறைகளில் சுற்றாடல் சார்ந்த சமூக, ஆளுகை இடர்நேர்வுகள், முழுமையாகக் கருத்திற்கொள்ளப்படுவதை உறுதிசெய்வதற்கு எதிர்காலத்தில் சுற்றாடல் சார்ந்த சமூக, ஆளுகை இடர்நேர்வுகளை அனைத்தையுமுள்ளடக்கிய விதத்தில் இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பினுள் ஒருங்கிணைப்பதற்கு நிதியியல் நிறுவனங்கள், எதிர்பார்க்கப்படும். அதற்கமைய, முன்னோக்கிய பார்வையில் இலங்கையின் அமைப்பில் நிலைபெறத்தக்க நிதியியல் முயச்சிகளைத் வெற்றிபெறச் செய்வதற்கு சரியான செயன்முறையினைக் கண்டறிவது ஈடுபட்டுள்ள அனைத்து ஆர்வலர்களுக்கும் சவால்மிக்கதாக அமையலாம்.

**முன்னோக்கிய பார்வை**

இலங்கை மத்திய வங்கியின் வழிகாட்டல், இலங்கையில் நிலைபெறத்தக்க நிதியினை அமுல்படுத்துவதற்கான உபாய ரீதியான செயற்பாடுகளின் தொடரொன்றினை குறித்துரைக்கின்ற அதேவேளை, பொறுப்புடைய ஆர்வலர்கள் மூலம் குறுகிய, நடுத்தர மற்றும் நீண்ட காலத்தில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய நடவடிக்கைத் திட்டமொன்றினை விவரிக்கின்றது. இலங்கை மத்திய வங்கி, 2021 இன் இறுதியளவில் ஆர்வலர்களுடனான கூட்டிணைப்புடன் நிலைபெறத்தக்க நிதி மீதான பகுப்பியலொன்றினை வெளியிடுவதற்கு எதிர்பார்க்கின்றது. நிலைபெறுதன்மை பற்றிய முக்கிய தகவல்கள் தொடர்பான நிதியியல் நிறுவனங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களின் வெளிப்படுத்தல்கள் அனைத்து சுற்றாடல் சார்ந்த, சமூக மற்றும் ஆளுகை நோக்குகளுக்கும் உரியவாறு கவனம்செலுத்தப்பட்டு மேலும் வலுப்படுத்தப்பட வேண்டும்.

கொவிட் - 19 உலகளாவிய நோய்த்தொற்றிலிருந்து தோன்றுகின்ற பொருளாதார அதிர்ச்சி, உலகளாவிய பொருளாதாரத்தின் தாக்குப்பிடிக்கும் தன்மையினை அதிகரிப்பதற்கான தேவையினை எடுத்துக்காட்டியுள்ளது. அதற்கமைய, உலகம் முழுவதுமுள்ள கொள்கை வகுப்பாளர்கள் உலகளாவிய நோய்த்தொற்றிலிருந்தான மீட்சி நிலைபெறத்தக்க விதத்தில் மேற்கொள்ளப்படுவதனை உறுதி செய்வதை கவனத்திற் கொள்வர். முன்னோக்கிய பார்வையில் பிராந்தியங்கள் அதேபோன்று நாடுகள் முழுவதும் நிலைபெறத்தக்க நிதி முயற்சிகளுக்கான அதிகரித்த தயார்நிலையினை உறுதிசெய்வதற்கு ஒருங்கிணைக்கப்பட்ட கொள்கை நடவடிக்கைகள் தேவைப்படுகின்றன. அதற்கமைய, உலகளாவிய நோய்த்தொற்றுக்குப் பிந்திய வங்கித்தொழிலின் புதிய சகாப்தத்தில் நிலைபெறத்தக்க நிதி என்பது பொருளாதாரம் ஒன்றின் சமூக, பொருளாதார மற்றும் சுற்றாடல் சார்ந்த இலக்குகளை அடைவதற்கு அத்தியாவசியமான நெம்புகோலாக தோற்றம்பெறும்.

உசாத்துணைகள்

- இலங்கையின் நிலைபெறத்தக்க நிதிக்கான வழிகாட்டல் (https://www.cbsl.gov.lk/en/roadmap-for-sustainable-finance-in-sri-lanka-2019)
- நிலைபெறத்தக்க வங்கித்தொழில் வலையமைப்பு வெப்தளம் (https://www.ifc.org/wps/wcm/connect/topics_ext_content/ifc_external_ corporate_ site/sustainability-at-ifc/company-resources/sustainable-finance/sbn)
- இலங்கையின் நிலைபெறத்தக்க வங்கித்தொழில் அமைப்பின் தொடக்க வெப்தளம் (https://sustainablebanking.lk/)

உண்டியல், திறைசேரி முறிகள் மற்றும் அபிவிருத்தி முறிகள் மீதான முதலீடுகள் முறையே ரூ.78.8 பில்லியனாலும் ரூ.68.3 பில்லியனாலும் ரூ.35.5 பில்லியனாலும் அதிகரித்தமையின் மூலம் வர்த்தகப்படுத்தல் சொத்துப்பட்டியல் 32.4 சதவீதத்தினால் அதிகரித்தது.

**பொறுப்புக்கள்: வைப்புக்கள் நிதியிடலின் முக்கிய மூலமாகத் தொடர்ந்தும் காணப்பட்டதுடன் அதனைத் தொடர்ந்த கடன்பாடுகள் காணப்பட்டன.** இவ்வாண்டுப்பகுதியில் வைப்புக்களின் அதிகரிப்பில் தவணை வைப்புக்கள் 47.0 சதவீதத்திற்கு வகைகூறிய போதும் மொத்த வைப்புக்களில் அதன் பங்கு 2019 இறுதியின் 66.5 சதவீதத்திலிருந்து 2020 இறுதியில் 63.0 சதவீதத்திற்கு குறைவடைந்தது. அதேவேளை, 2020 இறுதியில் மொத்த வைப்புக்களில் சேமிப்பு மற்றும் நடைமுறை வைப்புக்கள் முறையே 28.3 சதவீதத்திற்கும் 6.2 சதவீதத்திற்கும் வகைகூறின. இதன்படி, தொடர்பான காலப்பகுதியில் நடைமுறை மற்றும் சேமிப்பு கணக்கு விகிதம் 2019 இறுதியில் 31.4 சதவீதத்திலிருந்து 2020 இறுதியில் 34.5 சதவீதத்திற்கு அதிகரித்தது. வங்கித்தொழில் துறையின் மொத்தக் கடன்பாடுகள் 2019இன் ரூ.84.0 பில்லியன் (4.8 சதவீதம் கொண்ட எதிர்க்கணியமான வளர்ச்சி) கொண்ட வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2020இல் ரூ.12.8 பில்லியனால் (0.8 சதவீதம்) அதிகரித்தன. இவ்வதிகரிப்பிற்கு 2020இல் 14.3 சதவீதம் (ரூ.99.4 பில்லியன்) கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்த இலங்கை ரூபாவிலான கடன்பாடுகள் முக்கிய காரணமாக இருந்த வேளையில், வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகள் நாட்டிற்கான தரமிடல் குறைவடைந்தமையுடன் சேர்ந்து 2020இல் 11.1 சதவீதத்தினால் (ஐ.அ.டொலர் 603.1 மில்லியன்) வீழ்ச்சியடைந்தன.

**ஐந்தொகைக்கு வெளியேயான வெளிப்படுத்துகை: சவால்மிக்க வியாபாரச் சூழ்நிலைக்கு மத்தியிலும் ஐந்தொகைக்கு வெளியேயான வெளிப்படுத்துகை 2019ஆம்**

**ஆண்டுப்பகுதியின் 5.3 சதவீதம் (ரூ.233.5 பில்லியன் கொண்ட வீழ்ச்சி) கொண்ட எதிர்மறையான வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2020ஆம் ஆண்டுப்பகுதியில் 16.1 சதவீதம் கொண்ட வளர்ச்சியை (ரூ.675.2 பில்லியன்) அறிக்கையிட்டது.** 2020இன் முக்கிய அதிகரிப்புக்கள் எடுப்பனவு செய்யப்படாத கொடுகடன்கள் (ரூ.279.9 பில்லியன்) வெளிநாட்டுச் செலாவணி வெளிப்படுத்துகை (ரூ.278.3 பில்லியன்) உத்தரவாதங்கள் மற்றும் முறிகள் (ரூ.66.8 பில்லியன்) என்பனவற்றில் காணப்பட்டன.

## வங்கித்தொழில் துறையிலுள்ள இடர்நேர்வுகள்

**கொடுகடன் இடர்நேர்வு: கொவிட்-19 உலகளாவிய நோய்தொற்றின் காரணமாக கடன்பாட்டாளர்களினால் எதிர்நோக்கப்பட்ட இடர்ப்பாடுகளைப் பரிசீலனையில் கொண்டு, பொருளாதாரத்தின் வெவ்வேறுபட்ட துறைகளுக்காக ஆரம்பத்தில் சட்ட இசைவுத் தாமதங்கள் அறிமுகப்படுத்தப்பட்டதுடன் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றினால் பாதிக்கப்பட்ட அத்துறைகளுக்கான நீண்ட மீண்டெழும் காலத்தினை கருத்திற்கொண்டு பின்னர் குறிப்பிட்ட துறைகளுக்கு மேலும் நீடிக்கப்பட்டது** சட்ட இசைவுத்தாமதத்தின் கீழான காலப்பகுதியில் கடன்களைச் செயற்படா வகைகளுக்கு வகைப்படுத்தல் முடக்கப்பட்டிருந்ததுடன் சட்ட இசைவுத்தாமதம் நிறுத்தப்பட்டதும் வழமையான வகைப்படுத்தல் விதிகள் பிரயோகிக்கப்படும். சட்ட இசைவுத்தாமத்தின் கீழ் கொடுகடன் வசதிகளின் வகைப்படுத்தல் முடக்கப்பட்ட போதும், 2020இன் கணிசமான காலப்பகுதியில் நிலவிய சவால்மிக்க வியாபாரச் சூழ்நிலைகளின் காரணமாக 2020இல் செயற்படாக் கடன்கள் 2019இல் ரூ.118.5 பில்லியன் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 66.4 பில்லியனால் அதிகரித்தமை மொத்த செயற்படாக் கடன் விகிதத்தை 2020 இறுதியில் 4.9 சதவீதத்திற்கு அதிகரிப்பொன்றினைத் தோற்றுவித்தது. எனினும், உயர்ந்த ஏற்பாட்டு காப்பு விகிதத்தினை தேவைப்படுத்துகின்ற வகைகளுக்கான செயற்படாக் கடன்களின் கீழ் நோக்கிய

அட்டவணை 8.4

வங்கித்தொழில் துறையின் வைப்புக்களின் உள்ளடக்கம்

| விடயம் | 2019 (அ) | | 2020 (ஆ) | | மாற்றம் (%) | |
|---|---|---|---|---|---|---|
| | ரூ.பில் | பங்கு (%) | ரூ.பில் | பங்கு (%) | 2019 (அ) | 2020 (ஆ) |
| கேள்வி வைப்புக்கள் | 528.8 | 5.8 | 693.7 | 6.2 | -2.8 | 31.2 |
| சேமிப்பு வைப்புக்கள் | 2,344.1 | 25.6 | 3,153.2 | 28.3 | 8.0 | 34.5 |
| தவணை வைப்புக்கள் | 6,092.5 | 66.5 | 7,022.1 | 63.0 | 9.5 | 15.3 |
| ஏனைய வைப்புக்கள் | 196.9 | 2.1 | 271.9 | 2.4 | -7.5 | 38.1 |
| **மொத்த வைப்புக்கள்** | **9,162.3** | **100.0** | **11,140.9** | **100.0** | **7.9** | **21.6** |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

பெயர்வு 2020 ஆண்டுப்பகுதியில் தேறிய செயற்படாக் கடன் விகிதத்தினைக் குறைத்திருக்கிறது. இருப்பினும் கூட, உண்மையான செயற்படாக் கடன்களின் நிலைமை, பொருளாதாரத்தின் குறிப்பிட்ட துறைகளில் இன்னமும் செயற்பாட்டிலுள்ள கடன் இசைவுத்தாமதம் நிறுத்தப்படுவதனைத் தொடர்ந்து மாத்திரமே பிரதிபலிக்கப்படும். 2020ஆம் ஆண்டுப்பகுதியில் மொத்த ஏற்பாடுகள் ரூ.74.9 பில்லியனால் அதிகரித்ததுடன் இதில் சிறப்பு பாதுகாப்பு ஏற்பாடுகள் 93.5 சதவீதத்திற்கு வகைகூறின. செயற்படாக் கடன்களில் வளர்ச்சி காணப்பட்ட போதும் பாதுகாப்பு ஏற்பாடுகளில் ஏற்பட்ட உயர்ந்த அதிகரிப்பு குறித்துரைக்கப்பட்ட மற்றும் மொத்தப் பாதுகாப்பு ஏற்பாடுகளின் விகிதத்தில் அதிகரிப்புக்களைத் தோற்றுவித்தது.

**கொடுகடன்களில் 73.1 சதவீதம் 6 பொருளாதாரத் துறைகளில் முக்கியமாகக் குவிந்திருந்த போதும், தனிப்பட்ட வங்கிகள் அவற்றின் வியாபாரங்களை பொருளாதாரத்தின் பல்வேறு துறைகளுக்கும் பன்முகப்படுத்தியுள்ளன.** முக்கியமான துறைகளில் தயாரிப்பு, மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகம், வேளாண்மை, காடாக்கம் மற்றும் மீன்பிடி, சுற்றுலா மற்றும் கட்டடவாக்கத் துறைகள் 2020 இறுதியில் மொத்த வங்கித்தொழில் துறையின் சராசரியான 4.9 சதவீதத்திலும் பார்க்க உயர்ந்த செயற்படாக் கடன் விகிதத்தினைப் பதிவுசெய்தன. 2020இல் செயற்படாக் கடன்

வரைபடம் 8.2

வங்கித்தொழில் துறையின் ஐந்தொகைக்கு வெளியேயான வெளிப்படுத்துகைகள் - (2020 இறுதியில் உள்ளவாறு)




*மூலம்* : இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 8.3

வங்கித்தொழில் துறையின் செயற்படாக்கடன்கள்




*மூலம்* : இலங்கை மத்திய வங்கி

விகிதத்தில் அதிகரிப்பு காணப்பட்ட போதும் வங்கித்தொழில் துறை மோசமான தாக்கங்களை ஈர்த்துக் கொள்ளும் விதத்தில் போதுமான பாதுகாப்பு ஏற்பாடுகளுடனும் மூலதன தாங்கிருப்புக்களுடனும் தொழிற்படுவதனால், இன்னமும் முகாமைப்படுத்தத்தக்க மட்டத்திலேயே காணப்படுகிறது.

## சந்தை இடர்நேர்வு

**வட்டி வீதம்: வட்டி வீத உணர்திறன் விகிதம் (12 மாதங்களைவிடக் குறைவான முதிர்வுகளுடன் கூடிய வட்டியுடைய பொறுப்புகளின் பங்கொன்றாக வட்டியை உழைக்கும் சொத்துக்கள்) 2019இன் இறுதியில் 76.5 சதவீதத்திலிருந்து 2020 இறுதியில் 74.9 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தமை 2019 இறுதியுடன் ஒப்பிடும் போது 2020 இறுதியில் வட்டி வீதங்களுக்கான இடர்காப்பின்மையை அதிகரித்துள்ளது.** 2020 காலப்பகுதியில் திறைசேரி முறிகள் மீதான மூலதன இலாபம் ரூ.12.2 பில்லியனாக விளங்கி, 2019இல் பதிவுசெய்யப்பட்ட ரூ.3.4 பில்லியனை விட உயர்வாகக் காணப்பட்டது. இதற்கு 2019 உடன் ஒப்பிடுகையில் 2020இல் அரச பிணையங்களுக்குக் கூடுதலான நிதிகள் நெறிப்படுத்தப்பட்டமையும் வட்டி வீதங்களில் ஏற்பட்ட கீழ் நோக்கிய அசைவுமே காரணமாகும்.

**பங்குரிமை விலைகள்: வங்கித்தொழில் துறையின் பங்குரிமை இடர்நேர்வு 2020ஆம் ஆண்டு முழுவதும் குறைவாகவே காணப்பட்டது.** பங்குரிமைச் சந்தைகளுக்கான வங்கிகளின் வர்த்தகப்படுத்தல் சொத்துப்பட்டியலின் வெளிப்படுத்துகை ரூ.11.7 பில்லியனாகக் காணப்பட்டது. இது 2020 இறுதியில் வர்த்தப்படுத்தலுக்காக வைத்திருக்கப்பட்ட மொத்தச் சொத்துக்கள் மற்றும் முதலீடுகளில் முறையே 0.1 சதவீதமாகவும் 1.5 சதவீதமாகவும் மாத்திரம் காணப்பட்டன.

**செலாவணி வீதங்கள்: வெளிநாட்டு நாணயச் சொத்துக்களில் ஏற்பட்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் வெளிநாட்டு நாணயப் பொறுப்புக்கள் உயர்ந்த அதிகரிப்பினைக் கொண்டிருந்தமையின் காரணமாக, வங்கித்தொழில் துறையின் தேறிய வெளிநாட்டு நாணய வெளிப்படுத்துகை 2019 இறுதியின் ஐ.அ.டொலர் 90.3 மில்லியன் கொண்ட நீண்ட நிலைமையுடன் ஒப்பிடுகையில் 2020 இறுதியில் ஐ.அ.டொலர் 30.0 மில்லியன் கொண்ட குறுகிய நிலைமைக்கு வீழ்ச்சியடைந்தது.** வங்கிகளின் ஐந்தொகையிலான வெளிநாட்டு நாணயச் சொத்துக்களின் சதவீதமாக தேறிய வெளிநாட்டு நாணய வெளிப்படுத்துகை, 2019 இறுதியின் 1.1 சதவீதத்திலிருந்து குறைவடைந்து 2020 இறுதியில் 0.3 சதவீதமாகக் காணப்பட்டது. 2020ஆம் ஆண்டுப்பகுதியில் ஐந்தொகையிலான வெளிநாட்டு நாணயச் சொத்துக்கள் அதிகரித்தமைக்கு வங்கிகளிலும் முதலீடுகளிலும் செய்யப்பட்ட வைப்புக்களில் ஏற்பட்ட அதிகரிப்பு முக்கிய காரணமாக அமைந்த வேளையில், ஐந்தொகைக்கு வெளியேயான சொத்துக்களில் ஏற்பட்ட அதிகரிப்பு முன்னோக்கிய கொள்வனவுகள் மற்றும் பெறுதிச் சாதனங்களிலிருந்து தோன்றியது. ஐந்தொகையிலான வெளிநாட்டு நாணயப் பொறுப்புக்களில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு வாடிக்கையாளர் வைப்புக்களில் ஏற்பட்ட அதிகரிப்பு காரணமாக இருந்த வேளையில் ஐந்தொகைக்கு வெளியேயான பொறுப்புக்களில் ஏற்பட்ட அதிகரிப்பு முக்கியமாக முன்னோக்கிய விற்பனைகளிலிருந்து ஏற்பட்டது. வங்கித்தொழில் துறை 2019இன் ரூ.14.2 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2020இல் ரூ.16.5 பில்லியன் கொண்ட தேறிய வெளிநாட்டு நாணய மீள்மதிப்பீட்டு இலாபத்தினைப் பதிவுசெய்தது.

அட்டவணை 8.5

### வங்கித்தொழில் துறையின் கடன்கள் மற்றும் முற்பணங்களின் துறைசார் உள்ளடக்கம் (2020 இறுதியில் உள்ளவாறு)

| துறைகள் | தொகை ரூ.பில் (அ) | மொத்த கடன்களில் பங்கு (%) | செயற்படாக் கடன்களின் விகிதம் (%) |
|---|---|---|---|
| நுகர்வு | 1,664.2 | 18.3 | 4.3 |
| கட்டவாக்கம் | 1,481.9 | 16.3 | 6.4 |
| மொத்த மற்றும் சில்லறை வாணிபம் | 1,126.8 | 12.4 | 7.4 |
| தயாரிப்பு | 860.9 | 9.5 | 8.7 |
| உட்கட்டமைப்பு அபிவிருத்திகள் | 815.6 | 9.0 | 1.8 |
| வேளாண்மை, காடாக்கம் மற்றும் மீன்பிடி | 697.9 | 7.7 | 6.9 |
| நிதி அமைச்சுக்கான கடன் வழங்கல்கள் | 603.4 | 6.6 | - |
| சுகாதார நலன், சமூக சேவைகள் மற்றும் துணைச் சேவைகள் | 376.7 | 4.1 | 2.8 |
| வெளிநாட்டு நிறுவனங்களுக்கான கடன் வழங்கல் | 365.5 | 4.0 | 2.0 |
| நிதியியல் சேவைகள் | 338.2 | 3.7 | 1.2 |
| சுற்றுலா | 331.2 | 3.6 | 6.8 |
| போக்குவரத்து மற்றும் களஞ்சியப்படுத்தல் | 200.6 | 2.2 | 3.9 |
| தொழில்சார், விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப செற்பாடுகள் | 115.2 | 1.3 | 3.1 |
| தகவல் தொழில்நுட்பம் மற்றும் தொடர்பாடல் சேவைகள் | 53.0 | 0.6 | 5.0 |
| கல்வி | 48.1 | 0.5 | 3.3 |
| கலைகள், பொழுதுபோக்கு மற்றும் மனமகிழ்வு | 12.3 | 0.1 | 6.4 |
| **மொத்தக் கடன்கள்** | **9,091.7** | **100.0** | **4.9** |

(அ) தற்காலிகமானது

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

**திரவத்தன்மை இடர்நேர்வு: 2020ஆம் ஆண்டுப்பகுதியில் நிதியங்களின் பெரும்பகுதி திரவச் சொத்துக்களை நோக்கி நெறிப்படுத்தப்பட்டமை காரணமாக வங்கித்தொழில் துறை போதுமான திரவத்தன்மை மட்டங்களுடன் தொழிற்பட்டது.** உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவுகள் 20.0 சதவீதத்திற்கு அதிகமாகக் கொண்ட நியதி திரவச் சொத்து விகிதத்தினைப் பேணுவது அவசியம். உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவின் நியதி திரவச் சொத்து விகிதம் 2019 இறுதியின் 31.0 சதவீதத்திலிருந்து 2020 இறுதியில் 37.3 சதவீதத்திற்கு அதிகரித்த வேளையில் கரைகடந்த வங்கித்தொழில் பிரிவின் நியதி திரவச் சொத்து

வரைபடம் 8.4
வங்கித்தொழில் துறையின் செயற்படாக் கடன்களுக்கான ஏற்பாடுகள்



*மூலம்* : இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 8.5
வங்கித்தொழில் துறையின் திரவத்தன்மை விகிதங்கள்



*மூலம்* : இலங்கை மத்திய வங்கி

விகிதம் இதே காலப்பகுதியில் 47.1 சதவீதத்திலிருந்து 43.2 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. மேலும், 2020ஆம் ஆண்டுப்பகுதியில் முதலீடுகளில் ஏற்பட்ட வளர்ச்சி வைப்புக்கள் மற்றும் கடன்பாடுகளுக்கான கொடுகடனின் விகிதத்தில் வீழ்ச்சியைத் தோற்றுவித்த வேளையில் வைப்புக்களுக்கான திரவச் சொத்துக்கள் மற்றும் மொத்தச் சொத்துக்களுக்கான திரவச் சொத்துக்களின் விகிதம் அதிகரித்தன.

**2020 இறுதியில் வங்கித்தொழில் துறையின் ரூபா மற்றும் அனைத்து நாணய திரவத்தன்மை காப்பு விகிதம் முறையே 255.9 சதவீதமாகவும் 202.1 சதவீதமாகவும் விளங்கி 2021 யூன் இறுதிவரை ஏற்புடைத்தான குறைந்தபட்ச ஒழுங்குமுறைப்படுத்தல் வீதமான 90.0 சதவீதத்தினை விட மிக உயர்வாகக் காணப்பட்டன.** மேலும், 2019இல் அறிமுகப்படுத்தப்பட்ட தேறிய உறுதிப்பாட்டு நிதியிடல் விகிதம் 140.7 சதவீதமாக விளங்கி 2021 யூன் இறுதிவரை ஏற்புடைத்தான 90 சதவீத ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாட்டினைவிட மிக உயர்வாகக் காணப்பட்டது. 2020 இறுதியில் மொத்தத் திரவத்தன்மை சொத்துக்கள் ரூ.4.9 றில்லியனாக விளங்கியதுடன் இதில் அரச பிணையங்களிலான முதலீடுகள் 69.6 சதவீதத்தினை பிரதிபலித்தன. 12 மாத முதிர்ச்சிகளுக்கும் குறைவான முதிர்ச்சிக் கூடைகளுக்கான வங்கித்தொழில் துறையின் ஒன்றுசேர்ந்த பொறுப்புக்களின் சதவீதமாக ஒன்றுசேர்ந்த முதிர்ச்சி இடைவெளி 2019 இறுதியுடன் ஒப்பிடுகையில், 2020 இறுதியில் விரிவடைந்து, சொத்துக்களுடன் ஒப்பிடுகையில் பொறுப்புக்கள் குறைந்த வட்டி வீதங்களில் கூடியளவு பொறுப்புக்கள் மீள்விலையிடப்பட்ட வட்டி வீதங்களின் வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கினைப் பரிசீலனையில் கொண்ட சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் சிறந்த முகாமைத்துவத்தினை எடுத்துக்காட்டின. எனினும், முதிர்ச்சி இடைவெளியின் மிகையான விரிவு திரவத்தன்மை இடர்நேர்வுகளின் அதிகரிப்பிற்கு வழிவகுக்கலாம்.

**இலாபத்தன்மை: முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2020ஆம் ஆண்டுப்பகுதியின் வட்டிச் செலவினங்களுடன் ஒப்பிடுகையில் (6.0 சதவீதம்) வங்கித்தொழில் துறையின் வட்டி வருமானம் குறைந்த வீதத்தில் (4.2 சதவீதம்) சுருக்கமடைந்த போதும் தேறிய வட்டி வருமானம் சிறிதளவினால் மாத்திரம் (0.9 சதவீதம்) சுருக்கமடைந்தது.** இதன் விளைவாக, தேறிய வட்டி வருமானம் 2019 இறுதியின் 3.6 சதவீதத்திலிருந்து 2020 இறுதியில் 3.1 சதவீதத்திற்கு குறைவடைந்தது. தேறிய வட்டி வருமானம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2020இல் ரூ.3.8 பில்லியனால் வீழ்ச்சியடைந்த வேளையில், வட்டியல்லா வருமானம் ரூ.9.8 பில்லியனால் அதிகரித்தமைக்கு 2020இல் திறைசேரி முறிகள் மீதான உயர்ந்த மூலதன இலாபங்களும் ஐ.அ.டொலருக்கெதிராக இலங்கை ரூபா தேய்வடைந்தமையின் விளைவாக உயர்ந்த வெளிநாட்டு நாணய மீள்மதிப்பீட்டு இலாபங்களும் முக்கிய காரணங்களாக அமைந்தன. வட்டியல்லாச் செலவினங்கள் ரூ.12.1 பில்லியனால் வீழ்ச்சியடைந்தமைக்கு பணிமனைகள், சாதனங்கள் மற்றும் நிருவாகச் செலவினங்கள் ரூ.7.7 பில்லியனால் குறைவடைந்தமை பெருமளவிற்குக் காரணமாக அமைந்த வேளையில் கடன் இழப்பு ஏற்பாடுகள்

வரைபடம் 8.6
திரண்ட பொறுப்புகளின்
சதவீதமாக திரண்ட முதிர்ச்சி இடைவெளி



*மூலம்* : இலங்கை மத்திய வங்கி

அட்டவணை 8.6
வங்கித்தொழில் துறையின் திரவச் சொத்துக்களின் உள்ளடக்கம்

| விடயம் | 2019 (அ) | | 2020 (ஆ) | | மாற்றம் (ரூ.பில்) | |
|---|---|---|---|---|---|---|
| | ரூ.பில் | பங்கு (%) | ரூ.பில் | பங்கு (%) | 2019 (அ) | 2020 (ஆ) |
| திறைசேரி உண்டியல்கள் | 871.2 | 24.1 | 1,111.8 | 22.5 | 186.2 | 240.6 |
| திறைசேரி முறிகள் | 1,203.4 | 33.2 | 1,685.3 | 34.1 | 262.1 | 481.8 |
| இலங்கை அபிவிருத்தி முறிகள் | 569.7 | 15.7 | 638.7 | 12.9 | 26.7 | 69.1 |
| காசு | 196.9 | 5.4 | 203.1 | 4.1 | 13.0 | 6.2 |
| அழைப்புப் பணம் | 168.8 | 4.7 | 337.7 | 6.8 | 48.0 | 168.9 |
| வெளிநாட்டிலுள்ள வங்கிகளுடனான மீதிகள் | 427.5 | 11.8 | 471.3 | 9.5 | 41.4 | 43.8 |
| ஏனையவை | 183.8 | 5.1 | 490.5 | 9.9 | 7.9 | 306.7 |
| மொத்த திரவச் சொத்துக்கள் | 3,621.2 | 100.0 | 4,938.3 | 100.0 | 585.3 | 1,317.1 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

2020 காலப்பகுதியில் ரூ.22.6 பில்லியனால் அதிகரித்தன. இதன் விளைவாக. கம்பனி வரிக்கு முன்னரான ஒழுங்குமுறைப்படுத்தல் இலாபம் 2020இல் ரூ.190.0 பில்லியனாகக் காணப்பட்டது. இது முன்னைய ஆண்டினை விட ரூ.18.2 பில்லியன் உயர்வானதாகும்.

**2020ஆம் ஆண்டுப்பகுதியில் வங்கித்தொழில் துறையின் வரிக்குப் பின்னரான இலாபம் ரூ.136.0 பில்லியனாக விளங்கி முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 21.7 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு 2020/21 வரி மதிப்பீட்டாண்டிலிருந்து ஆரம்பமான வரிக் கொள்கைகளில் ஏற்பட்ட மாற்றங்களே காரணமாகும்.** இலாபத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு சொத்தில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு ஈடானதாகக் காணப்பட்டதுடன் சொத்துக்கள் மீதான வருவாய் வரிக்கு முன்னரான 2019 இறுதியிலும் 2020 இறுதியிலும் 1.4 சதவீதமாகத் தொடர்ந்தும் பிரதிபலிக்கப்பட்டது. அதேவேளை, வரிக்குப் பின்னரான பங்குரிமை மீதான வருவாய், தொடர்பான காலப்பகுதியில் 10.3 சதவீதத்திலிருந்து 11.4 சதவீதத்திற்கு மேம்பட்டது. தொழிற்பாட்டுச் செலவினத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி வினைத்திறன் விகிதம் 2019இன் 52.6 சதவீதத்திலிருந்து 2020இல் 51.8 சதவீதத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியின் மூலம் பிரதிபலிக்கப்பட்டது.

அட்டவணை 8.7
வங்கித்தொழில் துறையின் இலாபம்

| விடயம் | 2019 (அ) | | 2020 (ஆ) | |
|---|---|---|---|---|
| | தொகை (ரூ.பில்) | சராசரி சொத்தின் % ஆக | தொகை (ரூ.பில்) | சராசரி சொத்தின் % ஆக |
| **தேறிய வட்டி வருமானம்** | **431.1** | **3.6** | **427.4** | **3.1** |
| வட்டி வருமானம் | 1,212.0 | 10.1 | 1,161.4 | 8.5 |
| வட்டிச் செலவினம் | 780.8 | 6.5 | 734.0 | 5.4 |
| **வட்டியல்லா வருமானம்** | **132.3** | **1.1** | **142.1** | **1.0** |
| வெளிநாட்டு செலாவணி வருமானம் | 26.7 | 0.2 | 31.7 | 0.2 |
| **வட்டியல்லா செலவினம்** | **264.7** | **2.2** | **252.6** | **1.9** |
| ஊழியர் செலவுகள் | 126.5 | 1.1 | 128.0 | 0.9 |
| **கடன் இழப்பீட்டு ஏற்பாடுகள்** | **60.9** | **0.5** | **83.5** | **0.6** |
| வரிக்கு முன்னரான இலாபம் (பெறுமதி சேர் வரிக்குப் பின்னரான) | 173.0 | 1.4 | 190.0 | 1.4 |
| வரிக்கு பின்னரான இலாபம் | 111.7 | 0.9 | 136.0 | 1.0 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

**மூலதனம்: 2020ஆம் ஆண்டுப்பகுதியில் வங்கித்தொழில் துறை மூலதனத் தேவைப்பாடுகளுடன் இணைந்து ஒழுங்குவதாகக் காணப்பட்டது.** கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் காரணமாக வங்கித்தொழில் துறையினால் எதிர்நோக்கப்பட்ட இடர்ப்பாடுகளை எடுத்துக்காட்டுகின்ற விதத்தில் உள்நாட்டு முறைமையியல் ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த வங்கிகளுக்கான மூலதனப் பாதுகாப்பு தாங்கிருப்பினை 100 அடிப்படைப் புள்ளிகளினாலும் உள்நாட்டு முறையியல் ரீதியாக முக்கியத்துவம் பெறாத வங்கிகளுக்கான மூலதனப் பாதுகாப்பு தாங்கிருப்பினை 50 அடிப்படைப் புள்ளியினாலும் குறைப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்த போதும் வங்கித்தொழில் துறை மூலதனப் பாதுகாப்பு தாங்கிருப்பினைக் குறைக்காமலேயே தேவையான விகிதத்துடன் இணங்கியொழுகக் கூடியதாகவிருந்தது.

வரைபடம் 8.7
வங்கித்தொழில் துறையின் இலாபத்தன்மை விகிதங்கள்




*மூலம் :* இலங்கை மத்திய வங்கி

8

வரைபடம் 8.8

**வங்கித்தொழில் துறையின் மூலதனப் போதுமாந்தன்மை**




*மூலம்* : இலங்கை மத்திய வங்கி

**தற்போதைய சூழ்நிலையின் கீழ், புதிய மூலதனத்தினைத் திரட்டுவதில் காணப்படும் சவால்களைப் பரிசீலனையில் கொண்டு, தற்பொழுது மூலதனப் பற்றாக்குறையினைக் கொண்டிருக்கும் வங்கிகளுக்கான அதிகரிக்கப்பட்ட குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்கான இறுதித் திகதி 2022 திசெம்பர் வரை நீடிக்கப்பட்டது.** 4 ஆண்டு காலப்பகுதியொன்றிற்குள் படிப்படியானதொரு அடிப்படையில் மூலதனத்திற்காகக் கருத்திற் கொள்ளப்படுகின்ற இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் 9இன் நடைமுறைப்படுத்தலிருந்தான முதல் நாள் தாக்கமும் பாசல் III மூலதனத் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுக வேண்டிய தேவைப்பாடுகளும் உயர்தரம் வாய்ந்த மூலதனத்தினைத் திரட்டுவதற்கு வங்கிகளை ஊக்குவித்தன. இதன் விளைவாக, வங்கிகள் 2020இல் புதிய பங்குகளை வழங்கியதனூடாகவும் (ரூ.10.2 பில்லியன்) ஒதுக்கினைக் கட்டியெழுப்பியதனூடாகவும் (ரூ.8.2 பில்லியன்) அடுக்கு 1 மூலதனத்தினை உயர்த்திக் கொண்டன. வங்கித்தொழில் துறையின் ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனம் இவ்வாண்டு காலப்பகுதியில் 3.3 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்ததுடன் இதில் அடுக்கு 1 மூலதனம் 63.2 சதவீதத்திற்குப் பங்களித்தது.

## மேற்பார்வை மற்றும் ஒழுங்குமுறைப்படுத்துதல் அபிவிருத்திகள்

**2020ஆம் ஆண்டு காலப்பகுதியில், மத்திய வங்கி, வங்கித்தொழில் துறையின் பாதுகாப்பினையும் ஆற்றல்வாய்ந்த தன்மையினையும் மேலும் வலுப்படுத்துவதற்காக முன்மதியுடைய கொள்கை வழிமுறைகளையும் ஒழுங்குவிதிகளையும் தொடர்ந்தும் அறிமுகப்படுத்தியதுடன் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றினால் பாதிக்கப்பட்ட பொருளாதாரத் துறைகளுக்கு நிவாரண வழிமுறைகளை வழங்கவும் புதிய சாதாரண விதிகளுக்கேற்ப செயற்படவும் வங்கித்தொழில் துறை மீதான சில ஒழுங்குமுறைகளை அவதானத்துடன் தளர்த்தி வசதியளித்தது.**

8

அட்டவணை 8.8

**வங்கித்தொழில் துறையின் ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனத்தின் உள்ளடக்கம்**

| விடயம் | தொகை (ரூ.பில்) | | உள்ளடக்கம் (%) | |
|---|---|---|---|---|
| | 2019 (அ) | 2020 (ஆ) | 2019 (அ) | 2020 (ஆ) |
| **அடுக்கு I மூலதனம்** | **974.6** | **999.8** | **100.0** | **100.0** |
| பங்கு மூலதனம் | 323.3 | 333.5 | 33.2 | 33.4 |
| நியதி ஒதுக்கு நிதிகள் | 61.0 | 62.3 | 6.3 | 6.2 |
| பிடித்து வைத்திருக்கப்பட்ட இலாபம் | 387.0 | 385.0 | 39.7 | 38.5 |
| பொது மற்றும் ஏனைய ஒதுக்குகள் | 239.2 | 247.4 | 24.5 | 24.7 |
| ஏனையவை | 10.8 | 30.7 | 1.1 | 3.1 |
| ஒழுங்குமுறைப்படுத்தல் சீராக்கங்கள் | -46.6 | -59.1 | -4.8 | -5.8 |
| **அடுக்கு II மூலதனம்** | **251.0** | **265.6** | **100.0** | **100.0** |
| மீள் மதிப்பீட்டு ஒதுக்குகள் | 26.1 | 26.5 | 10.4 | 10.0 |
| கீழ்மட்ட தவணை படுகடன் | 173.8 | 167.4 | 69.2 | 63.0 |
| பொது ஏற்பாடுகள் மற்றும் ஏனையவை | 55.6 | 73.1 | 22.2 | 27.5 |
| ஒழுங்குமுறைப்படுத்தல் சீராக்கங்கள் | -4.6 | -1.4 | -1.8 | -0.5 |
| **மொத்த ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனத் தளம்** | **1,225.5** | **1,265.4** | | |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

**அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்ட இறை ஊக்குவிப்புக்களை முழுமை பெறச்செய்யும் விதத்தில் பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்துவதற்காக சிறிய மற்றும் நடுத்தர நிறுவனக் கடன்பெறுநர்களுக்கான கொடுகடன் ஆதரவுத்திட்டமொன்று, அறிமுகப்படுத்தப்பட்டது.** கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றினால் பாதிக்கப்பட்ட வியாபாரங்களுக்கும் தனிப்பட்டவர்களுக்கும் ஆதரவளிக்கின்ற விதத்தில் ஆறு மாத சட்ட இசைவுத்தாமதத் திட்டம் மற்றும் ரூ.50 பில்லியன் மீள்நிதியிடல் திட்டம் என்பனவற்றினைத் தொடர்ந்து இக்கொடுகடன் ஆதரவுத் திட்டம் 2020 மாச்சில் அறிமுகப்படுத்தப்பட்டது. இது தொடர்பில், மத்திய வங்கியும் உரிமம்பெற்ற வங்கிகள் மீதான கொவிட்-19இன் சாத்தியமான தாக்கங்களைப் பரிசீலனையில் கொண்டு, பாதிக்கப்பட்ட வியாபாரங்களுக்கும் தனிப்பட்டவர்களுக்கும் ஆதரவளிப்பதற்கும் வங்கிகளுக்குத் திரவத்தன்மையினை வழங்கும் பொருட்டும் விசேடத்துவமான ஒழுங்குமுறைப்படுத்தல் வழிமுறைகளின் தொடரொன்றினையும் அறிமுகப்படுத்தியது. கொவிட்-19 நோய்த்தொற்றினால் ஏற்பட்ட அலைகளைத் தொடர்ந்து தற்பொழுது இடம்பெற்றுவரும் பயணக் கட்டுப்பாடுகள் மற்றும் பொருளாதார நடவடிக்கைகளுக்கான இடையூறுகள் என்பனவற்றைப் பரிசீலனையில் கொண்டு, தேவையின் அடிப்படையில் பாதிக்கப்பட்ட பொருளாதாரத் துறைகளான சுற்றுலா மற்றும் பயணிகள் போக்குவரத்து என்பவற்றிற்கு 2021 இலும் சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன.

**விளிம்பு நிலையிலுள்ள கடன்பாட்டாளர்களுக்கு உதவியளிக்கும் விதத்தில் கடன்வழங்கல் சாதனங்கள் மீதான உயர்மட்ட வட்டி வீதங்கள் குறைக்கப்பட்டன.** கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றிலிருந்து தோன்றிய மோசமான பொருளாதார நிலைமைகளின் காரணமாக குறுங்கால நிதியியல் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக தங்க நகைகளை

அடகுவைத்த குறைந்த வருமானம் பெறும் தனிப்பட்டவர்களுக்கு நிவாரணங்களை வழங்கும் அவசியத்தினைப் பரிசீலனையில் கொண்டு அடகுபிடித்தல் முற்பணங்கள் மீது ஏற்புடைத்தான உயர்ந்தபட்ச வட்டி வீதங்கள் விதிக்கப்பட்டன. சிறிய கடன்பாட்டாளர்களுக்கு உதவியளிப்பதற்காக உரிமம்பெற்ற வங்கிகளின் கடன்வழங்கல் சாதனங்கள் மீதான வட்டி வீதங்கள் 2020 ஓகத்தில் மேலும் குறைக்கப்பட்டன. மேலும், 2020 திசெம்பரில் கொள்கை வட்டி வீதங்களின் குறைப்பு, உள்நாட்டு பணச் சந்தையில் நிலவுகின்ற கணிசமானளவு மிகையான திரவத்தன்மை மற்றும் பொருளாதாரத்திற்கு புத்துயிரளிக்கும் விதத்தில் கடன் வழங்கும் வீதங்களில் தொடர்ச்சியான கீழ் நோக்கிய சீராக்கங்களின் அவசியம் என்பனவற்றினைப் பரிசீலனையில் கொண்டு அரச மற்றும் தனியான துறைகளிலுள்ள பணி உறுதிப்படுத்தப்பட்ட மாதச் சம்பளம் பெறும் ஊழியர்களினால் பெறப்பட்ட ஈட்டினால் உத்தரவாதப்படுத்தப்பட்ட வீடமைப்புக் கடன்களுக்கான உயர்ந்தபட்ச வட்டி வீதம் ஆண்டொன்றிற்கு 7 சதவீதத்தில் வரையறுக்கப்பட்டது. இவ்வழிமுறையானது இலங்கை மக்களின் வீட்டுச் சொத்துடமையினை விரிவுபடுத்துவதற்கு ஆதரவாக அமையும் எனவும் இது உள்நாட்டு கட்டவாக்கத் துறைக்கும் அதன் வழங்கல் சங்கிலிகளுக்கும் மேலதிகத் தூண்டல்களை வழங்குமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

**2020ஆம் ஆண்டுப்பகுதியில் பொருளாதாரத்தினால் எதிர்நோக்கப்பட்ட பல தரப்பட்ட சவால்களைப் பரிசீலனையில் கொண்டு, மத்திய வங்கி நிதியியல் துறையிலிருந்த உறுதிப்பாட்டினை உறுதிப்படுத்துவதற்காகப் பரந்த வீச்சிலான கொள்கை வழிமுறைகளை அறிமுகப்படுத்தியது.** இக்கொள்கை வழிமுறைகள் ஏற்றுமதிப் பெறுகைகளிலிருந்து ஏற்றுமதிக் கொடுகடன் வசதிகளைத் தீர்ப்பனவு செய்வதற்கான உயர்ந்தபட்சக் காலம் கப்பலேற்றப்பட்ட நாளிலிருந்து 180 நாட்களுக்கு நீடிக்கப்பட்டமை, இறக்குமதிகளைக் கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகள், கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் தாக்கம் காரணமாக செலாவணி வீதத்தின் மீதான இறுக்கத்தினையும் நிதியியல் சந்தைகள் மீதான அழுத்தத்தினையும் இலகுபடுத்துவதற்காக உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் தேசிய சேமிப்பு வங்கியினாலும் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டு முறி முதலீடுகள் உரிமம்பெற்ற வங்கிகளின் பங்குடமையிலுள்ள பல்புடை நிதியியல் அமைப்புக்களினால் செய்யப்படும் முதலீடுகளுக்கூடாக வங்கித்தொழில் முறைமைக்குக் கிடைக்கும் நன்மைகள் பரிசீலனையில் கொண்டு உரிமம்பெற்ற வங்கிகளுக்கான வாக்களிக்கும் உரிமையினைக் கொண்டுள்ள வழங்கப்பட்ட மூலனத்தின் மீதான சொத்துரிமையினை மட்டுப்படுத்துவதன் மீதான ஒழுங்குவிதிகளின் திருத்தம் நாட்டிற்கான வெளிநாட்டு உட்பாய்ச்சல்களை ஊக்குவிக்கும் அவசியத்தினைப் பரிசீலனையில் கொண்டு உரிமம்பெற்ற வங்கிகளின் நிதியியல் பெறுதிக் கொடுக்கல்வாங்கல்களுக்கு வசதியளிப்பதற்காக ஒழுங்குவிதிகளுக்கு திருத்தங்கள் அறிமுகப்படுத்தப்பட்டமை என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன.

**2020ஆம் ஆண்டுப்பகுதியில் உரிமம்பெற்ற வங்கிகள் மீதான குறிப்பிடத்தக்க ஒழுங்குமுறைப்படுத்தல்கள் மீது திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.** கொவிட்-19 சூழலுக்கு மத்தியிலும் வங்கிகளால் கணக்கீட்டு முறைகளுடன் இசைந்து செல்லும் நடைமுறைகளை நிறுவுவதற்காக உரிமம்பெற்ற வங்கிகளால் இலங்கை கணக்கீட்டு நியமம்-9 இனைப் பின்பற்றுவதற்கான வழிமுறைகள்: அறிமுகப்படுத்தப்பட்டது. உரிமம்பெற்ற வங்கிகளின் ஒழுங்குமுறைப்படுத்தல் நோக்கங்களுக்காக சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கான வருடாந்த மொத்தப் புரள்வினை ரூ.1 பில்லியனுக்கு அதிகரித்தல், உரிமம்பெற்ற வங்கிகளின் அசையாச் சொத்துக்களின் மதிப்பீடு மீதான ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பின் கீழ் உரிமம்பெற்ற வங்கிகளின் மதிப்பீட்டாளர்களுக்கான தகைமைப் பிரமாணங்கள் இற்றைப்படுத்தப்பட்டமை என்பன அவ்வாறான திருத்தங்களாகும். கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றிற்கு மத்தியில் எடுக்கப்பட்ட அதிவிசேட வழிமுறைகள் உட்பட, 2020 காலப்பகுதியில் உரிமம்பெற்ற வங்கிகளுக்கு விடுக்கப்பட்ட அனைத்து முன்மதியுடைய ஒழுங்குவிதிகளும் இவ்வறிக்கையின் பகுதி IIIஇல் தரப்பட்டுள்ளன.

**2020ஆம் ஆண்டுப்பகுதியில், இலங்கை மத்திய வங்கி உள்ளக தரமிடல் மாதிரி: வங்கி உறுதிப்பாட்டுத் தன்மை தரமிடல் குறிகாட்டியின் தரமிடல் பெறுபேறுகளின் அடிப்படையில், கூடுதலான உத்வேகம் மிக்க இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட பரீட்சிப்பு பொறிமுறைகளையும் அனைத்தையுமுள்ளடக்கிய மேற்பார்வை வழிகாட்டல் கட்டமைப்பினையும் மேற்கொண்டது.** வங்கித்தொழில் குழுமங்களிலுள்ள நிறுவனங்களிலிருந்து தோன்றுகின்ற ஏதேனும் இடர்நேர்வுகள் உரிமம்பெற்ற வங்கிகளுக்கு பரவக்கூடிய தன்மையினைக் கட்டுப்படுத்துவதன் தேவையினைப் பரிசீலனையில் கொண்டு, வங்கித்தொழில் குழுமங்களின் குழும அடிப்படையில் ஒன்றிணைப்பதற்கான இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட மேற்பார்வைக்கான கட்டமைப்பொன்றினை வடிவமைப்பதற்கான வேலைகளை மத்திய வங்கி தொடங்கியதுடன் தேவையான திருத்தங்களை புதிய வங்கித்தொழில் சட்டத்தில் உள்ளடக்குவதற்கான நடைமுறையை மேற்கொண்டது.

**மேலும், வங்கிகள் மற்றும் வங்கித்தொழில் அல்லா நிதியியல் நிறுவனங்கள் இரண்டினதும் செயற்படாச் சொத்துக்களைத் தீர்மானமொன்றின் மூலம் கொள்வனவு செய்வதற்கும் முகாமைப்படுத்துவதற்குமான அர்ப்பணிப்பு மிக்க சொத்து முகாமைத்துவக் கம்பனியொன்றினை**

சிறப்புக்குறிப்பு 08

## கொவிட்-19 நோய்ப்பரவலின் மத்தியில் 'புதிய வாழ்க்கை முறைக்கான' வங்கிகளின் ஒழுங்குபடுத்தலும் மேற்பார்வையும்

### அறிமுகம்

### கொவிட்-19 நோய்ப்பரவலின் மூலம் ஏற்பட்ட பொருளாதாரத் தாக்கம்

பல பாதகமான சமூக மற்றும் பொருளாதாரத் தாக்கங்களுக்கு வழிவகுத்துள்ள 2019 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் ஏற்பட்ட எதிர்பாராத உலக சுகாதார நெருக்கடியான கொவிட்-19 நோய்ப்பரவலின் மூலம் ஏற்பட்ட தற்போதைய மோசமான சூழ்நிலையிலிருந்து மீள்வதற்கு நாடுகள் புதிய உபாயங்கள் மற்றும் பொருளாதார வழிமுறைகளை அறிமுகப்படுத்துவது இன்றியமையாததாகும். உலகளாவிய ரீதியில், பொருளாதார மற்றும் வர்த்தக நடவடிக்கைகளுக்கு இடையூறாக காணப்படுகின்ற பொது மக்கள் மற்றும் பொருட்களின் இட நகர்வை, கொவிட்-19 நோய்ப்பரவலை தடுப்பதற்கு நடைமுறைப்படுத்திய முடக்கல் வழிமுறைகள் மட்டுப்படுத்தியுள்ளன. மேலும், வெளிநாட்டு நேரடி முதலீடு போன்ற குறைந்த முதலீடு, மற்றும் பணவனுப்பல்கள் என்பன வளர்ந்து வரும் பொருளாதாரத்தில் பாதாகமான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளன. ஆகையால், உலகளாவிய ரீதியில் வைரஸ் இன்றுவரை பன்மடங்கில் வியாபித்து இருப்பதனால், கொவிட்-19 நோய்ப்பரவலின் மத்தியில் உலக உள்நாட்டு உற்பத்தியில் உருவாகிய கடுமையான வீழ்ச்சியானது மெதுவானதொரு மீட்சியையே ஏற்படுத்தும். ஆகவே, கொவிட்-19 நோய்ப்பரவலின் நிச்சயமற்ற மற்றும் நீடித்த தன்மையினை கருத்தில் கொண்டு, தனிநபர், மற்றும் வங்கிகள் உள்ளடங்கலாக வணிக நிறுவனங்கள் 'புதிய வாழ்க்கை முறைக்கு' பொருத்தமாக அவர்களின் வர்த்தக செயற்பாடுகளை மாற்றுதல் மற்றும் பின்பற்றுதல் அவசியமாகும்.

### வங்கித்தொழில் துறையில் ஏற்பட்ட தாக்கம்

கடன்பெறுநர்களின் வருமானம் மற்றும் வருவாய் ஈட்டக்கூடிய இயலுமை, கொவிட்-19 நோய்ப்பரவலினால் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருப்பதன் விளைவாக வங்கிகளிடமிருந்து பெற்ற கடனைத் திருப்பிச் செலுத்துவதில் கடன்பெறுநர்களுக்கு சிரமம் ஏற்பட்டுள்ளது. மேலும், கடன்பெறுநர்களின் குறிப்பிட்ட கடன்மதிப்புக்கள் நீண்ட காலத்திற்கு பாதிப்படையலாம், அதன்படி வங்கித்தொழில் துறையின் கொடுகடன் வழங்கல் தரமானது பொருளாதார மீட்சியின் தன்மை மற்றும் கட்டத்தில் தங்கியிருக்கும். ஆகையால், கொவிட்-19 நோய்ப்பரம்பலின் தாக்கத்தின் மத்தியில் கடன் வகைப்படுத்தல், எதிர்பார்த்த கொடுகடன் நட்டங்கள், ஏற்பாடு, கொடுகடன் இடர்நேர்வு நிறையேற்றல் மற்றும் மூலதனம் போன்றவற்றை முழுமையாக மதிப்பீடு செய்வது வங்கிகளுக்கு சிரமமாகும்.

அரசாங்கம் மற்றும் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபைகளினால் கடன் பெறுநர்களுக்கு வட்டி மற்றும் முதலினைச் செலுத்துவதில் தாமதத்தை வழங்கி ஊக்குவித்ததுடன் அல்லது கொடுப்பனவு விடுமுறைகள் மற்றும் கால தாமதத்தை வழங்கியிருப்பதனால் வங்கிகளின் காசுப்பாய்ச்சல் மற்றும் திரவ நிலைமையில் எதிர்மறையான விளைவினை ஏற்படுத்தியிருக்கின்றன. ஆகையால், குறைந்த வருமானப் பாய்ச்சல்கள் மற்றும் சாத்தியமான உயர் நட்டங்கள் இலாபத்தில் மற்றும் வங்கிகளின் மூலதன விகிதங்களில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றன.

டிஜிட்டல் வங்கித்தொழில்துறை தளங்கள் மற்றும் சேவைகளுக்கு நுகர்வோர்களின் வங்கிச் செயற்பாடுகள் நிலைமாற்றமடைகின்ற வேளை, வங்கிகளுக்கு சட்ட இடர்நேர்வுகளை விளைவிக்கும் மோசடி, ஊழல் மற்றும் ஏனைய சட்ட விரோத நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு வாய்ப்பை எதிர்பார்த்திருக்கின்ற ஏமாற்றுத்தரப்பினர்களின் நிதியியல் குற்றங்கள் அல்லது முறைகேடான நடவடிக்கைகளுக்கு நுகர்வோர் பாதிப்படையக்கூடும். வீட்டிலிருந்து பணிபுரிதல் மற்றும் ஏனைய தொலைவில் பணிபுரியக்கூடிய ஏற்பாடுகள், மற்றும் கடமை நேர மாற்றம், கடமையாற்றுவதற்கான நெகிழ்வான நேரங்கள் போன்ற 'புதிய வாழ்க்கை முறையில்' நெகிழ்வாக பணிபுரியுக்கூடிய ஏற்பாடுகளுக்கு வங்கிகள் உட்பட பல நிறுவனங்கள் நகர்ந்துள்ளன. ஆயினும், தகவல் தொழில்நுட்ப மற்றும் தரவுக்காப்பு, உள்ளக மற்றும் வெளியக மோசடிகள், சைபர்- தாக்குதல்கள், உள்ளக வலையமைப்பு இயலுமை மற்றும் பணத்தூயதாக்கலுக்கு எதிரான மற்றும் உங்கள் வாடிக்கையாளரை தெரிந்து கொள்ளுங்கள் ஆகிய தேவைப்பாடுகள் உள்ளடங்கலாக கட்டுப்பாட்டு பொறிமுறைகள் போன்றன வீட்டிலிருந்து பணிபுரிதல் ஏற்பாடுகளின் மூலம் இடம்பெறுகின்றன என்பதுடன் வங்கிகளின் செயற்பாட்டு நடவடிக்கைகளில் மோசமான தாக்கத்தை விளைவிக்கலாம்.

### புதிய வாழ்க்கை முறைக்கு பொருத்தமான ஒழுங்குபடுத்தல் வழிமுறைகளை பின்பற்றுதல்

வங்கித்தொழில் துறையின் பாதுகாப்பையும் உறுதிப்பாட்டினையும் உறுதி செய்யும் அதேவேளை வங்கிகளுக்கு வசதியளிப்பதன் மூலம் கொவிட்-19 நோய்ப்பரவலினால் பாதிக்கப்பட்ட தனிநபர் மற்றும் வர்த்தக துறையினருக்கு ஆதரவளிப்பதற்கு உலகளாவிய ரீதியில் காணப்படுகின்ற ஒழுங்குபடுத்தல் மற்றும் மேற்பார்வை அதிகாரிகள் பரந்தளவிலான ஒழுங்குபடுத்தல் வழிமுறைகளை பின்பற்றியுள்ளனர். பொருளாதாரத்திற்கான கொடுகடன் வழங்கலை வசதிப்படுத்துவதற்கு பல்வேறு ஒழுங்குபடுத்தல் மற்றும் மேற்பார்வை அதிகாரிகள் பின்பற்றிய வழிமுறைகள் அட்டவணை 1 இல் காட்டப்பட்டுள்ளன.

ஆகையால், பாதிக்கப்பட்ட கடன்பெறுநர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக கொடுகடன் உத்தரவாதத் திட்டங்கள் உள்ளடங்களாக கடன் காலதாமதத்தினை அளிப்பதற்கு ஒழுங்குபடுத்துநர்கள் வங்கிகளுக்கு வசதியளித்துள்ளனர். 'பணம் செலுத்த தவறுதல்' என்ற வகைக்குள் கடன்பெறுநர்களை உடனடி காசுப்பாய்ச்சல் வரையறைகளில் சேர்ப்பதை தடுப்பதற்கும் அவர்களின் வியாபார நடவடிக்கைகளை மீளச்செயற்படுத்துவதற்கும் வங்கிகள் மற்றும் கடன்பெறுநர்கள் போன்ற இரு தரப்பினர்களுக்கும் நன்மையளிக்கும் வகையில் மீள்திட்டமிடப்பட்ட அல்லது மீள்கட்டமைக்கப்பட்ட கடன் வசதிகளை இத்தகைய வழிமுறைகள் அனுமதித்துள்ளன. அதன்படி, மீள் வகைப்படுத்தப்பட்ட கடன்களுக்கான நிபந்தனைகள் மீது அதிகப்படியான நெகிழ்வு விளக்கங்களை வழங்கிய வங்கிகளின் சொத்துத்தரத்தின் மதிப்பீடு தொடர்பான வழிகாட்டலை ஒழுங்குபடுத்துநர்கள் வழங்கியுள்ளனர்.

பொருத்தமான குறைந்தபட்ச ஒழுங்குப்படுத்தல் தேவைப்பாடுகளை முறியடிக்காமல் கொவிட்-19 நோய்ப்பரவலின் மூலம் தோன்றுகின்ற நட்டங்களை உள்ளீர்ப்பதற்கும் கடன் வளர்ச்சிக்கு இடமளிப்பதற்கும்

8

அட்டவணை: சி.கு. 8.1

**பல்வேறு ஒழுங்குபடுத்தல் அதிகாரிகளினால் அமுல்படுத்தப்பட்ட ஒழுங்குபடுத்தல் அளவீடுகள**

| சட்ட அதிகாரம் | அரச உத்தரவாதங்கள் | மூலதன தேவைப்பாடுகள் | சொத்து வகைப்படுத்தல் | எதிர்பார்த்த நட்ட ஏற்பாடு | பங்குலாபங்கள் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் |
|---|---|---|---|---|---|
| அவுஸ்திரேலியா | ஆம் | தாங்கிருப்புக்களை பயன்படுத்துவதற்கு ஊக்குவித்தல் | புதிய வழிகாட்டல் | - | மட்டுப்படுத்துவதற்கு எதிர்பார்த்தல் |
| கனடா | ஆம் | தாழ்ந்த உள்நாட்டு உறுதிப்பாட்டு தாங்கியிருப்புக்களை பயன்படுத்துவதற்கு ஊக்குவிப்பு | புதிய வழிகாட்டல் | புதிய வழிகாட்டல், மாற்றல் ஏற்பாடுகளின் அறிமுகம் | அதிகரிப்புக்களை நிறுத்துவதற்கு எதிர்பார்த்தல் |
| ஐரோப்பிய ஒன்றியம் | ஆம்(*) | எதிர்சூழல் மூலதன தாங்கிருப்பை வெளியிடல் மற்றும் தாங்கிருப்புக்களை பயன்படுத்துவதற்கு ஊக்குவித்தல் | புதிய வழிகாட்டல் | புதிய வழிகாட்டல் | நிறுத்துவதற்கு எதிர்பார்த்தல் |
| இந்தியா | ஆம் | மூலதனப் பேணுகை தாங்கிருப்பின் இறுதி தொகுதியினை நடைமுறைப்படுத்துவதை பிற்போடுதல் | புதிய வழிகாட்டல் | - | நிறுத்துவதற்கு எதிர்பார்த்தல் |
| யப்பான் | ஆம் | தாங்கிருப்புக்களை பயன்படுத்துவதற்கு ஊக்குவித்தல் | குறிப்பிட்ட கடன்களின் நிறையேற்ற இடர்நேர்வுகளை சரிசெய்தல் | - | - |
| மலேசியா | ஆம் | தாங்கிருப்புக்களை பயன்படுத்துவதற்கு ஊக்குவித்தல் | மீள்கொடுப்பனவு உதவி நிகழ்ச்சித்திட்டங்களுக்கான பொருத்தமான மூலதன மற்றும் கணக்கீட்டு விதிகளின் விளக்கம் தொடர்பான தெளிவுபடுத்தல் | புதிய வழிகாட்டல் | - |
| தாய்லாந்து | ஆம் | - | கடன் பெறுநர்களின் வகைப்படுத்தல் தொடர்பான தளர்த்தப்பட்ட ஒழுங்குமுறைகள் | கடன் நட்ட ஒதுக்கீட்டு விதி-களை தளர்த்தல் | நிறுத்துவதற்கு எதிர்பார்த்தல் |
| ஐக்கிய இராச்சியம் | ஆம் | எதிர்சூழல் மூலதன தாங்கிருப்பை வெளியிடல் மற்றும் தாங்கிருப்புக்களை பயன்படுத்துவதற்கு ஊக்குவித்தல் | புதிய வழிகாட்டல் | புதிய வழிகாட்டல் | நிறுத்துவதற்கு எதிர்பார்த்தல் |
| ஐக்கிய அமெரிக்கா | ஆம் | தாங்கிருப்புக்களை பயன்படுத்துவதற்கு ஊக்குவித்தல், குறைநிரப்பி முடுக்கி விகிதத்தை சரிசெய்தல் | புதிய வழிகாட்டல், வரையறுக்கப்பட்ட கடன் விளக்கம் | தெரிவு இடைநீக்கம், மாற்றல் ஏற்பாடுகளின் விரிவாக்கம் | காத்திரமான தீர்மானங்களின் எதிர்பார்ப்பு, தானியங்கி வரையறைகளை சீராக்கல் |

(*) சில நாடுகளுக்கான நிபந்தனைகள் வேறுபடுகின்றன.

மூலம்: நி.உ.நி (Financial Stability Institution) சுருக்கங்கள்: கொவிட்-19 நோய்த்தொற்றுக்கான ஒழுங்குபடுத்தல் பதிலிறுப்புக்கள் மீதான வெளிப்பாடு, நெகரா மலேசியா வங்கியின் வலைத்தளங்கள், தாய்லாந்து வங்கி மற்றும் இந்தியா ரிசவ் வங்கி.

மற்றும் உண்மைப் பொருளாதாரத்திற்கான முக்கிய வங்கித்தொழில்துறை சேவைகளுக்கு வசதியளிப்பதற்குமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் வங்கிகளுக்கு அனுமதி அளிப்பதற்கும் சிறந்த காலப்பகுதியில் கட்டமைத்த கிடைப்பனவு மூலதன தாங்கியிருப்புக்களின் குறைப்பிற்கான பாசல் கட்டமைப்பு III, எதிர்சூழல் மூலதன தாங்கிருப்பு மற்றும் மூலதனக் காப்பு தாங்கிருப்பு போன்ற உலகளாவிய தரப்படுத்தலில் வழங்கப்பட்ட நெகிழ்வுகள் ஒழுங்குபடுத்துநர்களினால் பயன்படுத்தப்பட்டுள்ளன. மேலும், பாசல் கட்டமைப்பு III கீழான வழிகாட்டல்களுக்கமைவாக வங்கிகளுக்கு 100 சதவீதத்திற்குக் குறைவான திரவத்தன்மையினை வழங்குவதற்கு திரவத்தன்மை காப்பு விகிதம் மற்றும் தேறிய நிலையான நிதி விகிதம் போன்ற திரவத்தன்மை கொண்ட தாங்கியிருப்புக்கள் தளர்த்தல்களும் வழங்கப்பட்டுள்ளன.

உண்மைப் பொருளாதாரத்திற்கு ஆதரவளிப்பதற்காக வங்கிகளுக்கு நெகிழ்வுத்தன்மையை வழங்குவதற்கும் மூலதன அளவைப் பாதுகாப்பதற்கு உதவுவதற்காகவும் பல ஒழுங்குபடுத்தல் அதிகாரிகள் மூதலதனப் பங்கீடுகள் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளை தற்காலிகமாக நிறுத்தியுள்ளனர். மேலும் பாசல் கட்டமைப்பு III ஐ செயற்படுத்தல், மூலதனத் தேவைப்பாடுகள் மற்றும் கணக்கீட்டு விதிகள் போன்ற வங்கிகள் மீதான ஒழுங்குபடுத்தல் மற்றும் இணங்குதல் சுமைகளை இலகுபடுத்தல் போன்ற சில ஒழுங்குபடுத்தல் நியமங்கள் மற்றும்/அல்லது நீடித்த மாற்று நடவடிக்கைகளை அமுல்படுத்தலை சில ஒழுங்குபடுத்துநர்கள் பிற்போட்டிருக்கின்றனர்.

**மேற்பார்வை இயலுமை: 'புதிய வாழ்க்கை முறைக்கான' செயல்முறைகளும் நடைமுறைகளும்.**

முடக்கங்கள் காரணமாக மேற்பார்வை இயலுமையில் ஏற்பட்ட அழுத்தங்கள் போக்குவரத்துத் தடைகள் மற்றும் சமூக இடைவேளை பேணவேண்டிய தேவைப்பாடுகள் போன்ற காரணங்களுடன் கொவிட்-19 நோய்ப்பரம்பலினால் எழுகின்ற வங்கித்தொழில் துறை இடர்நேர்வுகளின் அதிகரிப்பானது தள மேற்பார்வைகள் நடாத்தததுதல் மற்றும் வங்கி முகாமைத்துவத்துடன் இணைந்து நேரடி கூட்டங்களை அமைத்தல் என்பனவற்றை கட்டுப்படுத்தியுள்ளன. ஆகவே, தளத்திற்கு அப்பாலான அதி தீவிரமான வங்கிகளின் மேற்பார்வை மற்றும் கண்காணிப்பு போன்ற வரையறைகளை நிவர்த்தி செய்வதற்கு மாற்று முறைகள் பின்பற்றப்பட்டுள்ளன. அதன்படி, தளத்திற்கு அப்பாலான மேற்பார்வை கண்காணிப்பின் தேவைப்பாடுகளை மேம்படுத்துவதற்கு, புதுப்பிக்கப்பட்ட ஏற்கனவேயுள்ள தரவு முன்வடிவங்கள்/ வடிவங்களுடன் கூடிய அதி அதிர்வெண்ணில் உள்ள விஞ்சிய தரவுகளை அறிக்கையிடும் தேவைப்பாடு வங்கிளிற்கு உள்ளதோடு உடனடியடிப்படையில் குறிப்பிடப்பட்ட அறிக்கை வடிவங்களை அபிவிருத்தி செய்யப்படும் தேவைப்பாடுகளுக்கு உதவும் சந்தர்ப்பமும் வங்கிகளுக்கு உள்ளன. மேலும் சொத்தின் தரம், போதியளவு மூலதனம், திரவத்தன்மை வடிவங்கள் மற்றும் வங்கித் தொழிற்பாடுகளில் மீண்டெழும் தன்மை போன்ற கொவிட்-19 நோய்ப்பரவலில் இருந்து வெளிப்படும் இடர்நேர்வினைகளின் அடிப்படையில் மீள் மதிப்பீட்டு மேற்பார்வை முன்னுரிமைகளுக்கு ஒழுங்குபடுத்துநர்கள் தொடர்ந்தும் நடவடிக்கைகளை எடுத்துள்ளனர். அவ்வகையில் இந்த நடவடிக்கைகளானது வங்கிகளின் மீண்டெழும் தன்மையை உறுதி செய்வதற்கான போதுமான பாதுகாப்புகள் மற்றும் தாங்கிருப்புக்களை உறுதி செய்கின்றன. இதனடிப்படையில் கொடுகடன் வெளிக்கொணர்தல், திரவத்தன்மையின் நிலை. மூலதனம் மற்றும் தனிப்பட்ட வங்கிகள் உள்ளிட்ட வங்கித் துறை என்பவற்றை மதிப்பீடு செய்வதற்கும் கொவிட்-19 காலத்திற்கு பிற்பட்ட சாத்தியமான காட்சிகளின் வரையறைகளுக்கு

8

எதிரான வங்கிகளின் தாக்கத்தை மதிப்பீடு செய்வதற்கும் மேற்பார்வை அதிகாரிகளினால் அழுத்தச் சோதனை மேற்கொள்ளப்படுகின்றது. மேலும், தேவைப்படின், மிகவும் விரைவாக அமுல்படுத்தப்படக்கூடிய மீளப் பெற்றுக்கொள்ளக்கூடிய தெரிவினை அனர்த்த முகாமைத்துவத்திற்கான முக்கிய கருவிகளாகப் பயன்படுத்துவதற்காக ஒழுங்குபடுத்துநர்களால் வங்கிகளானது அதனுடைய மீளப்பெற்றுக்கொள்ளும் திட்டத்தை மீளாய்வு செய்து பலப்படுத்துமாறு வேண்டிக்கொள்ளப்பட்டனர்.

முடக்கல் வழிமுறைகள் காரணமாக தள மேற்பார்வைகள் தடை செய்யப்பட்டிருந்தமையினால் போதிய தகவல்களைப் பெறுவதற்கு மெய்நிகர் தொடர்பாடல் முறைகள் மூலம் வங்கிகளின் முகாமைத்துவத்தை பராமரிக்கவும் உரிய அலுவலர்களுடன் இணைந்து தொடர்பாடல் தடங்களை பராமரிப்பதற்கும் ஒழுங்குபடுத்தல் அதிகாரிகள் நடவடிக்கைகள் எடுத்துள்ளனர். மேலும், 'புதிய வாழ்க்கைமுறையில்' சமூக இடைவெளித் தேவைப்பாடுகளைப் பின்பற்றுவதற்கு தேவையானவற்றைக் கருத்தில் கொண்டு, தனிப்பட்ட கூட்டங்களை விட மெய்நிகர் கூட்டங்களை நடாத்துவதற்கு பணிப்பாளர் சபை, சிரேஷ்ட முகாமைத்துவம் மற்றும் வங்கி ஊழியர்களுடன் இணைந்து ஒழுங்குபடுத்தல் அதிகாரிகள் நடவடிக்கைகள் எடுத்துள்ளனர்.

### கொவிட்-19 நோய்ப்பரவலின் மத்தியிலும் இலங்கை மத்திய வங்கியினால் பின்பற்றப்பட்ட ஒழுங்குபடுத்தல் மற்றும் மேற்பார்வைக்கான வழிமுறைகள்

#### பின்பற்றப்பட்ட ஒழுங்குபடுத்தல் வழிமுறைகள்

நாட்டின் முடக்க காலப்பகுதியின் போது முகங்கொடுக்கின்ற சிரமங்களை எதிர்கொள்ள கொவிட்-19 நோய்ப்பரவலினால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட வணிகங்கள் மற்றும் தனிநபருக்கு உதவும் பொருட்டு கடன் கால தாமதம், சலுகை வட்டிவீதத்தில் கொடுகடன் வசதிக்கான ஏற்பாடு மற்றும் கொடுகடன் உத்தரவாதத் திட்டம் போன்ற பல்வேறு நிவாரண வழிமுறைகள் இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்டது. மேலும், நல்ல நேரங்களில் கட்டப்பட்ட மூலதன பாதுகாப்பு தாங்கியிருப்புக்களை குறைப்பதற்கு முறையியல் ரீதியில் முக்கியத்துவமான மற்றும் முறையியல் ரீதியியல் முக்கியத்துவமல்லாத வங்கிகளை அனுமதித்தல், செயற்படாத கடனை வகைப்படுத்துவதில் மறுசீரமைப்பு அனுமதித்தல், சில நிபந்தனைகளின் படி ரூபாய் மூலம் வெளிநாட்டு செலாவணி கடன்களின் மீள் பெறுகையினை அனுமதித்தல், 2020ஆம் ஆண்டின் இறுதி தொடக்கம் 2022 ஆம் ஆண்டின் இறுதி வரை உரிமம் பெற்ற வங்கிகள் குறைந்த பட்ச மூலதன தேவைப்பாடுகளை ஒத்திவைத்தல், சட்டரீதியான திரவச் சொத்துவிகிதத்தினை கணிக்கும் நோக்கத்திற்காக சில நிபந்தனைகளின் படி திரவச் சொத்துக்கள் என கருதப்பட வேண்டிய சில சொத்துக்களை அனுமதித்தல், உட்பட பொருளாதாரத்திற்கு கொடுகடன் பாய்ச்சலை வழங்குகின்ற உரிமம் பெற்ற வங்கிகளிற்கு நெகிழ்வுத்தன்மையை வழங்குவதற்காக பல்வேறு அதியுயர் ஒழுங்குபடுத்தல் வழிமுறைகளை இலங்கை மத்திய வங்கி அமுல்படுத்தியது.

மேலும், திரவத்தன்மை பாதுகாப்பு விகிதம் மற்றும் தேறிய நிலையான நிதி விகிதத்துக்கான குறைந்த பட்ச தேவைப்பாடானது, மேம்பட்ட மேற்பார்வை மற்றும் அடிக்கடி அறிக்கையிடுதலின் மூலம் 2021 ஜுன் 30 வரை 90 சதவீதத்துக்குக் குறைக்கப்பட்டதனை பயன்படுத்துவதற்கு உரிமம் பெற்ற வங்கிகள் அனுமதியளிக்கப்பட்டன. தேவைப்படும் போது ஏற்றுக்கொள்ளப்பட்ட பிணைகள் மற்றும் திரவத்தன்மை எதிர்வுகூறலின் அடிப்படையில் உரிமம்பெற்ற வங்கிக்கு அவசரகாலக் கடன்கள் முற்கொடுப்பனவின் கட்டமைப்பின் கீழ் உரிமம்பெற்ற வங்கிகள் ரூபாயில் திரவத்தன்மை கிடைப்பதற்கு அனுமதியளிக்கப்பட்டன. வங்கிகளின் மூலம் பொருத்தமான திரவத்தன்மை மட்டங்களும் காசுப்பாய்ச்சலின் விவேகமான முகாமைத்துவமும் பராமரித்தலை உறுதி செய்வதற்கு உரிமம்பெற்ற வங்கிகளின் விருப்பமான கொடுப்பனவுகளுக்கு மட்டுப்படுத்துவதற்கு வங்கிக்கட்டளைப் பணிப்புரைகள் தற்காலிகமாக வழங்கப்பட்டன. மேலும், மூலதனச் செலவுகள் ஏற்படும் போதும் தேவையற்ற செலவுகள் ஏற்படும் போதும் அவற்றைத் தவிர்ப்பதற்கு விவேகத்துடனும் தீவிர முயற்சியுடனும் செயற்படுவதற்கு உரிமம்பெற்ற வங்கிகள் வேண்டப்பட்டன. அதன்படி உரிமம்பெற்ற வங்கிகளானது இத்தகைய மீளெழுச்சியை தங்களின் நுகர்வோர் மற்றும் பொருளாதாரத்திற்கு பெரும் உதவி புரிவதுடன், சிறப்பாக மீண்டெலுமென எதிர்பார்க்கப்படுவதுடன், இதன் நன்மைகளானவை வங்கித்துறைக்கு நெகிழ்ச்சியை அளிக்கும்.

கொவிட்-19 நோய்ப்பரவலின் தாக்கத்தினால் ஏற்பட்ட நாணய மாற்றுவீதத்தில் உள்ள அழுத்தத்தினைக் குறைக்கவும் நிதிச்சந்தையில் உள்ள அழுத்தத்தினைக் குறைக்கவும் இலங்கை மத்திய வங்கியானது ஏற்றுமதி காலப்பகுதியிலிருந்து 180 நாட்களுக்கான ஏற்றுமதி வருமானத்திலிருந்து ஏற்றுமதி கொடுகடன் வசதிகளின் தீர்ப்பனவுக்கான கூடிய கால எல்லை நீடிப்பு, இறக்குமதி கட்டுப்பாட்டு வழிமுறைகள் மற்றும் குறிப்பிட்ட வங்கிகளினால் மேற்கொள்ளப்படுகின்ற வெளிநாட்டு செலாவணி முதலீடுகள் போன்ற பணிப்புரைகளை வெளியிட்டது.

கொவிட்-19 நோய்ப்பரவலின் மத்தியிலும் பத்திரிகை மூலம் ஒழுங்குபடுத்தல் வழிமுறைகள் சம்பந்தமாக பொதுமக்களுக்கு தகவல்களை வழங்குவதற்கும், கொவிட்-19 இல் இருந்து மீண்டெழும் வழிமுறைகள் சம்பந்தமான தகவல்களை இலங்கை மத்திய வங்கியின் இணையதளத்தில் அர்ப்பணிப்பான வலையப்பக்கத்தினை வைத்திருக்கவும், மெய்நிகர் கல்விசார் கருத்தரங்குகளை பொதுமக்களுக்கு வழங்குவதற்கும் இலங்கை மத்திய வங்கியானது பல்வேறு நடவடிக்கைகளை எடுத்தது. மேலும், கொவிட்-19 நோய்ப்பரவலின் மத்தியிலும் வங்கி நடவடிக்கைகளை எவ்வாறு பாதுகாப்பாகவும் டிஜிட்டல் முறையிலும் கையாள வேண்டும் என்பது தொடர்பான சுவரொட்டிகளை இலங்கை மத்திய வங்கியானது விருத்தி செய்ததுடன் இச்சுவரொட்டியானது இலங்கை மத்திய வங்கியின் வலைப்பக்கத்திலும் சமூக வலைத்தளங்களிலும் காட்சிப்படுத்தப்பட்டதுடன் உரிமம்பெற்ற வங்கிகளுக்கும் சுற்றறிக்கை விடப்பட்டது. மோசடிகளில் இருந்து விழிப்புணர்வுடன் இருப்பதற்கு இச்சுவரொட்டிகள் பொதுமக்களின் கவனத்தை ஈர்த்தன.

#### தளத்திலான மற்றும் தளத்திற்கு வெளியேயான மேற்பார்வை தொடர்பில் பின்பற்றப்பட்ட மேற்பார்வை சார்ந்த வழிமுறைகள்

கொவிட்- 19 நோய்த் தொற்றின் ஆரம்பத்தினைத் தொடர்ந்து, அதன் தீவிரத்தன்மையினைக் கருதி 2020 மே 31 வரையிருந்த உரிமம்பெற்ற வங்கிகளினால் மேற்பார்வைக் கரிசனைகளை நிவர்த்தி செய்யவிருந்த காலம் நீடிக்கப்பட்டு மீளுருவாக்கப்பட்டது.

8

மேலும் வங்கி மேற்பார்வைத் திணைக்களத்துக்கு நியதிக் கூற்றுக்களினை சமர்ப்பிப்பதற்கான முடிவுத்திகதி இரண்டு வாரங்களினால் நீடிக்கப்பட்டதுடன் காலாண்டு நிதியியல் கூற்றுக்களின் வெளியீடானது ஒரு மாதத்தினால் நீடிக்கப்பட்டது.

முடக்கல் காலப்பகுதியில், உரிமம்பெற்ற வங்கிகளின் தளத்திலான பரீட்சிப்புக்கள் தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டிருந்ததுடன் தளப் பரீட்சிப்புக்கள் மின்னஞ்சல் மற்றும் ஏனைய இலத்திரனியல் சாதனங்களினூடாக பாதுகாப்பான முறையில் (கடவுச்சொல் காப்பளித்தல்) தொலைவிலிருந்து முன்னெடுக்கப்பட்டன. முடக்கல் காலப்பகுதியில் வங்கிகளின் பாதுகாப்பு மற்றும் ஆற்றல்வாய்ந்த தன்மையினை உறுதிப்படுத்துவதற்கு வங்கிகளினால் கூற்றுக்களையும் தகவல்களையும் அறிக்கையிடவும் சமர்ப்பிக்கவும் அடிக்கடி தேவைப்படுமிடத்து உரிமம்பெற்ற வங்கிகளின் தளத்திற்கு வெளியேயான கண்காணிப்பு மற்றும் மேற்பார்வை வலுப்படுத்தப்பட்டன.

ஊரடங்கு தளர்த்தப்பட்ட பின்னர், முன்னைய மேற்பார்வைக் கரிசனைகளின் நிலையை மீளாய்வு செய்தல், உள்ளகக் கட்டுப்பாட்டு மட்டங்கள் மற்றும் உள்ளக மதிப்பீட்டுத் தாக்க விபரங்களை மீளாய்தல் உள்ளடங்கலாக கொவிட்-19 உலகளாவிய தொற்று நோய்க்கு பதிலிறுத்தும் விதத்தில் வங்கியினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் தன்மை என்பனவற்றை வலியுறுத்துவதுடன் தளத்திலான பரீட்சிப்புக்கள் மீளாரம்பிக்கப்பட்டன. வங்கி மேற்பார்வை பரிசோதகர்கள் உரிய அதிகாரிகளால் வெளியிடப்பட்ட சுகாதார வழிகாட்டல்களை முழுமையாகப் பின்பற்றுமாறும் முன்னணி வங்கி ஊழியர்களுடன் பௌதிக இடைத்தொடர்பினை கட்டுப்படுத்துமாறும் ஆலோசனை வழங்கப்பட்டன. சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றும் தேவைப்பாடுகளைக் கருத்திற்கொண்டு கொவிட்-19 தொற்றுக்குள்ளாகும் சாத்தியப்பாடுகளைக் குறைக்கவும் வங்கி முகாமைத்துவம், கணக்காய்வாளர்கள் மற்றும் ஏனையோருடன் நேரடியான கூட்டங்களுக்குப் பதிலாக அதிகளவான மெய்நிகர் கூட்டங்களை நடாத்துவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

**முன்னோக்கிப் பயணித்தல்**

கொவிட்-19 நோய்த்தொற்றின் விளைவாக தோற்றம்பெற்ற செயற்பாட்டுத் தடைகள் மற்றும் உயர் இடர்நேர்வினை மேற்பார்வை மற்றும் ஒழுங்குபடுத்தல் அதிகாரிகள் அதேபோன்று வங்கித்தொழில் துறையிலுள்ளவர்கள் பின்பற்றுவதற்குத் கொவிட்-19 நோய்த்தொற்று தேவைப்படுத்தியது. இதன்விளைவாக, இடர்நேர்வுக் கணிப்பீடுகளின் அடிப்படையிலமைந்த குறித்த வங்கிகளை நோக்கிய மேற்பார்வை நடவடிக்கையானது உத்தரவாதம் அளிக்கப்பட்டிருக்கின்றதா எனக் கணிப்பதற்கும் வங்கிகளின் சிக்கல் தன்மைவாய்ந்த குறைபாடுகளை அடையாளம் காணவும் பரிகாரமளிக்கவும் வங்கிகளின் ஆரம்ப எச்சரிக்கைக் கட்டமைப்புக்களைத் தொடர்ந்தும் பின்பற்றவும் கண்காணிக்கவும் நேரிடலாம். வங்கித்தொழில் துறையின் பாதுகாப்பு மற்றும் ஆற்றல் வாய்ந்த தன்மையினை உறுதிப்படுத்துவதற்கு ஏதேனும் ஆரம்ப எச்சரிக்கை அழுத்தம் மற்றும் உரிமம்பெற்ற வங்கிகளது திரவ மற்றும் மூலதன நிலைகளையும் இலங்கை மத்திய வங்கி தொடர்ந்தும் கண்காணிக்கும். மேலும், தேவையேற்படின் வங்கித்தொழிற் துறைக்கு சாத்தியமான சவால்களை முகங்கொடுப்பதற்கு மேலதிக அதிஉயர் ஒழுங்குபடுத்தல் அளவீட்டை அமுல்படுத்தல் தொடர்பாக இலங்கை மத்திய வங்கி கருத்திற்கொள்ளும். ஆதலால் கொவிட்-19 நோய்ப்பரவலுக்கு மத்தியில் 'புதிய வாழ்க்கைமுறைக்கான' அவ்வாறான மாற்றங்களுக்கு மேற்பார்வை நெகிழ்சித் தன்மை விரைவாகப் பதிலிறுத்துவது அத்தியாவசியமாகின்றது. எனவே, இலங்கை மத்திய வங்கி உட்பட மேற்பார்வை அதிகாரிகள் செயற்கை உளவறிதல், பொறிகள் பயில்தல் மற்றும் தரவுப் பகுப்பாய்வு போன்றவற்றினூடான மேற்பார்வைத் தொழிநுட்பத்தின் பயன்பாட்டினை மேம்படுத்தவும் விரிவாக்கவும் அவசியப்படுகின்றது. மேற்பார்வைத் தொழிநுட்பத்தினைப் பின்பற்றுவதானது கொவிட்-19 நோய்ப்பரவலுக்கு மத்தியில் 'புதிய வாழ்க்கைமுறைக்கான' இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட மேற்பார்வை அணுகுமுறைகள் மற்றும் நடைமுறைகளினால் முன்னோக்கி ஆதரவளிப்பதற்கான நிகழ் நேர இடர்நேர்வுக் குறிகாட்டித் தளங்களை உருவாக்கவும் மேற்பார்வை அதிகாரிகளின் மேற்பார்வை, கண்காணிப்பு மற்றும் பகுப்பாய்வு இயலளவினை மேம்படுத்தவும் துணைபுரியும்.

---

உசாத்துணைகள்


- Borio C & Restoy F, "Financial Stability Institute (FSI) Briefs: Reflections on regulatory responses to the COVID-19 pandamic", (April 2020)
- A Joint IMF-World Bank Staff Position note,"COVID-19: The regulatory and Supervisory Implications for the Banking Sector", (May 2020)
- Toronto Centre, "Guide to Supervision in the COVID-19 World", (September 2020)


**நிறுவுவதற்கான கருதுகோள் பத்திரமொன்றினை மத்திய வங்கி உருவாக்கியுள்ளது.** சொத்து முகாமைத்துவக் கம்பனியொன்றினை நிறுவுவது, செயற்படாக் கடன்களைக் குறைப்பதன் ஊடாகவும் கூடியளவிற்கு உற்பத்தித்தன்மை வாய்ந்த பொருளாதாரத் துறைகளுக்கு கொடுகடன்களை வழிப்படுத்துவதற்கு அவற்றை அனுமதிப்பதனூடாகவும் வங்கிகளினதும் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களினதும் செயலாற்றத்தினை அதிகரிப்பதன் மூலம் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினை வலுப்படுத்துவதற்கு நன்மையளிப்பதாக அமையும்.

## 8.3 வங்கி அல்லாத நிதியியல் நிறுவனங்களின் செயலாற்றம்

### உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளின் துறை

**எதிர்மறையான கொடுகடன் வளர்ச்சி மற்றும் உயர்ந்த செயற்படாக் கடன்கள் என்பனவற்றின் காரணமாக உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் துறையின் செயலாற்றம்**

**இவ்வாண்டுப்பகுதியில் மோசமடைந்தது.** கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றுடன் தொடர்பான வளர்ச்சித் தடைகளுக்குப் புறம்பாக, இத்துறையில் அவதானிக்கப்பட்ட பிரச்சனைகளின் காரணமாக வாடிக்கையாளர் நம்பிக்கை குறைவடைந்தமையும் இம்மந்தமான செயலாற்றத்திற்குப் பங்களித்தன. எனினும், தனிப்பட்ட மட்டமொன்றில் ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்வதில் குறிப்பிட்ட சில நிறுவனங்கள் கடும் போராட்டங்களை நடத்த வேண்டியிருந்த போதும், குறைந்தபட்ச ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளுக்கும் மேலாக ஆரோக்கியமான மட்டங்களிலான மூலதனத்துடனும் திரவத்தன்மையுடனும் இத்துறை தொடர்ந்தும் உறுதியாகக் காணப்பட்டது. 2020 திசெம்பர் இறுதியில் இத்துறையின் மொத்தச் சொத்துக்கள் ரூ.1,401.6 பில்லியனாக அமைந்து இலங்கையின் நிதியியல் முறைமையின் 5.9 சதவீதத்தினை பிரசன்னப்படுத்தியது. துறையின் நிதியிடல் கலப்பில் வைப்புக்கள் ஆதிக்கம் பெற்றிருந்த வேளையில் துறையின் கடன்பாடுகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் வீழ்ச்சியடைந்தன. இத்துறையின் உறுதித்தன்மையினைப் பேணுவதற்காக மத்திய வங்கி தொடர்ந்தும் முன்மதியுடைய வழிமுறைகளை மேற்கொண்டதுடன் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றினால் ஏற்படுத்தப்பட்ட சவால்களை எதிர்கொள்வதற்கு ஆதரவளிக்கும் விதத்தில் ஒழுங்குமுறைப்படுத்தல் வசதிகளையும் வழங்கியது.

## வியாபார விரிவாக்கம்

**விரிவாக்கம்: 2020 இறுதியில் துறையானது, 40 உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளையும்1 3 சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளையும் உள்ளடக்கியிருந்தது.** இத்துறையில் 1,517 கிளைகளும் 460 ஏனைய பணி நிலையங்களும் காணப்பட்டதுடன் இதில் 1,001 கிளைகள் (66.0 சதவீதம்) மேல் மாகாணத்திற்கு வெளியே பரந்து காணப்பட்டன.

**சொத்துக்கள்: இவ்வாண்டுப்பகுதியில் இத்துறையின் சொத்துக்கள் சுருக்கமடைந்து ரூ.1,401.6 பில்லியனை அடைந்ததன் மூலம் 2019இல் அறிவிக்கப்பட்ட 0.1 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2.2 சதவீதம் கொண்ட (ரூ.31.0 பில்லியன்) எதிர்க்கணியமான வளர்ச்சியைப் பதிவுசெய்தன.** கடன்களும் முற்பணங்களும் துறையின் சொத்துக்களில் 74.2 சதவீதத்திற்கு வகைகூறின. நிதிக் குத்தகைகள், கடன்கள் மற்றும் முற்பணங்களின் பெரும் வகைகூறி 53.7 சதவீதத்தினைப் பிரசன்னப்படுத்திய வேளையில் அதனையடுத்துப் பிணையிடப்பட்ட கடன்களும் முற்பணங்களும் (36.2 சதவீதம்) காணப்பட்டன. கொவிட்-19இன் முடக்கம் மற்றும் ஊர்திகளின் இறக்குமதிக் கட்டுப்பாடு என்பனவற்றின் காரணமாக

அட்டவணை 8.9
உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகை கம்பனிகளின் மாகாண ரீதியான கிளைப் பரம்பல்

| மாகாணம் | 2019 முடிவில் | 2020 முடிவில்(அ) | ஆண்டுகாலப் பகுதியின் அசைவு |
|---|---|---|---|
| மத்திய | 160 | 166 | 6 |
| கிழக்கு | 117 | 119 | 2 |
| வட மத்திய | 99 | 107 | 8 |
| வட மேல் | 156 | 165 | 9 |
| வடக்கு | 89 | 96 | 7 |
| சப்ரகமுவ | 113 | 116 | 3 |
| தென் | 151 | 162 | 11 |
| ஊவா | 67 | 70 | 3 |
| மேல் | 480 | 516 | 36 |
| **மொத்தம்** | **1,432** | **1,517** | **85** |

(அ) தற்காலிகமானது *மூலம்:* இலங்கை மத்திய வங்கி

துறையின் கடன்வழங்கல் கணிசமானளவிற்கு மெதுவடைந்து இவ்வாண்டுப்பகுதியில் வியாபார நடவடிக்கைகளை தொடர்ந்தும் சுருக்கமடைந்தன. உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் துறையினால் வழங்கப்பட்ட கொடுகடன் 2019இன் தொடர்பான காலப்பகுதியின் 3.0 சதவீதம் கொண்ட சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் ரூ.1,039.9 பில்லியனுக்கு 5.7 சதவீதத்தினால் (ரூ.62.9 பில்லியன்) சுருக்கமடைந்தன.

**முதலீட்டுச் சொத்துப்பட்டியல் 2019இன் 20.5 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2020இல் ரூ.158.8 பில்லியனுக்கு 20.2 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்தமைக்கு பங்கு விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பு, அதிகரித்த நம்பிக்கை அலகுகளின் முதலீடுகள், வர்த்தகப்படுத்தலுக்காக வைத்திருக்கப்பட்ட படுகடன் பிணையங்கள், 12 மாதங்களுக்குக் குறைவான முதிர்ச்சியைக் கொண்ட அரச பிணையங்கள் என்பன முக்கிய காரணங்களாக அமைந்தன.** ஏனைய சொத்துக்கள், முக்கியமாக, வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களுடனான காசு மீதிகள் மற்றும் நிலையான சொத்துக்கள், இவ்வாண்டுப்பகுதியில் 2.6 சதவீதத்தினால் அதிகரித்தன.

அட்டவணை 8.10
உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகள் துறையின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் உள்ளடக்கம்

| விடயம் | 2019 | | 2020 (அ) | | மாற்றம் (%) | |
|---|---|---|---|---|---|---|
| | ரூ. பில் | பங்கு (%) | ரூ. பில் | பங்கு (%) | 2019 | 2020 (அ) |
| **சொத்துக்கள்** | | | | | | |
| கடன் மற்றும் முற்பணங்கள் (தேறிய) | 1,102.7 | 77.0 | 1,039.9 | 74.2 | -3.0 | -5.7 |
| முதலீடுகள் | 132.2 | 9.2 | 158.8 | 11.3 | 20.5 | 20.2 |
| ஏனையவை | 197.8 | 13.8 | 202.9 | 14.5 | 7.1 | 2.6 |
| **பொறுப்புக்கள்** | | | | | | |
| மொத்த வைப்புக்கள் | 756.7 | 52.8 | 748.6 | 53.4 | 5.6 | -1.1 |
| மொத்த கடன் பெறுகைகள் | 405.6 | 28.3 | 328.0 | 23.4 | -12.6 | -19.1 |
| மூலதன கூறுகள் | 203.2 | 14.2 | 248.0 | 17.7 | 10.6 | 22.1 |
| ஏனையவை | 67.2 | 4.7 | 77.0 | 5.5 | 0.3 | 14.6 |
| **மொத்த சொத்துக்கள்/ பொறுப்புக்கள்** | **1,432.7** | **100.0** | **1,401.6** | **100.0** | **0.1** | **-2.2** |

(அ) தற்காலிகமானது *மூலம்:* இலங்கை மத்திய வங்கி

1 2020 யூலை 13ஆம் நாளிலிருந்து, நாணயச் சபையினால் வியாபாரத் தொழிற்பாடுகள் இடைநிறுத்தப்பட்டுள்ள இரண்டு கம்பனிகள் உட்பட.

8

வரைபடம் 8.9
சாதனங்கள் வாரியான (திரண்ட) கடன்கள் மற்றும் முற்பணங்கள் 2019 மற்றும் 2020




*மூலம் : இலங்கை மத்திய வங்கி*

**பொறுப்புக்கள்: உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் துறையின் பொறுப்புக்களில் வாடிக்கையாளர் வைப்புக்கள் தொடர்ந்தும் முனைப்புப் பெற்றிருந்ததுடன் பொறுப்புக்களில் 53.4 சதவீத பங்கிற்கும் வகைகூறின.** இவ்வாண்டுப்பகுதியில் வைப்புக்கள் 1.1 சதவீதத்தினால் சுருக்கமடைந்து (ரூ.8.1 பில்லியன்) ரூ.748.6 பில்லியனை அடைந்த வேளையில் கடன்பாடுகள் 19.1 சதவீதம் (ரூ.77.6 பில்லியன்) கொண்ட கடுமையான வீழ்ச்சியைப் பதிவுசெய்து ரூ.328.0 பில்லியனை அடைந்தன.

## மூலவளங்கள்

இலாபத்தன்மை: **இவ்வாண்டுப்பகுதியில் துறையின் தேறிய வட்டி வருமானம் ரூ.111.2 பில்லியனாக விளங்கி 2019 உடன் ஒப்பிடுகையில் 5.3 சதவீதத்தினால் (ரூ.6.2 பில்லியன்) வீழ்ச்சியடைந்தது.** இதற்கு கொவிட்-19 உலகளாவிய நோய்த்தோற்றின் காரணமாக பொருளாதார நடவடிக்கைகளில் ஏற்பட்ட வீழ்ச்சி காரணமாகியதுடன் இது வட்டி வருமானம் மற்றும் வட்டிச் செலவு இரண்டிலும் குறைப்புக்களைத் தோற்றுவித்தது. வட்டி வருமானம் 12.0 சதவீதத்தினாலும் (ரூ.31.3 பில்லியன்) வட்டிச் செலவினம் 17.6 சதவீதத்தினாலும் (ரூ.25.0 பில்லியன்) குறைவடைந்தன. துறையின் தேறிய வட்டி இலாபம் (சராசரி சொத்துக்களின் சதவீதமாக தேறிய வட்டி வருமானம்) 2019இன் 7.7 சதவீதத்திலிருந்து 2020இன் 7.3 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தமைக்கு தேறிய வட்டி வருமானத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியும் தேறிய சொத்துக்களில் (மொத்தம்) ஏற்பட்ட சிறிதளவு அதிகரிப்புமே காரணமாகும்.

2020 காலப்பகுதியில் வட்டியல்லா வருமானம் 18.7 சதவீதத்தினால் (ரூ.7.4 பில்லியன்) குறைவடைந்த **வேளையில் வட்டியல்லாச் செலவுகள் 16.4 சதவீதத்தினால் (ரூ.15.4 பில்லியன்) வீழ்ச்சியடைந்தமையின் மூலம் துறையின் இலாபத்தன்மை பாதிக்கப்பட்டது.** வட்டியல்லாச் செலவினங்கள்

அட்டவணை 8.11
உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் துறையின் வைப்புக்களின் உள்ளடக்கம்

| விடயம் | தொகை (ரூ.பில்) | | உள்ளடக்கம் (%) | |
|---|---|---|---|---|
| | 2019 | 2020 (அ) | 2019 | 2020 (அ) |
| தவணை வைப்புக்கள் | 722.2 | 710.5 | 95.4 | 94.9 |
| சேமிப்பு வைப்புக்கள் | 33.5 | 37.3 | 4.4 | 5.0 |
| வைப்புச் சான்றிதழ்கள் | 0.9 | 0.8 | 0.1 | 0.1 |
| மொத்த வைப்புக்கள் | 756.7 | 748.6 | 100.0 | 100.0 |

(அ) தற்காலிகமானது *மூலம்:* இலங்கை மத்திய வங்கி

வீழ்ச்சியடைந்தமைக்கு குறைவடைந்த நிருவாகச் செலவினங்கள் (ரூ.6.0 பில்லியன்) மீள் உடமையிலிருந்த பொருட்களின் பெறுமதி/ அகற்றல் மீதான இழப்பு (ரூ.1.9 பில்லியன்), குறைவடைந்த அலுவலர் செலவுகள் (3.3 பில்லியன்) மற்றும் ஏனைய செலவுகள் (ரூ.2.2 பில்லியன்) என்பன முக்கிய காரணங்களாக அமைந்தன. இவ்வாண்டுப்பகுதியில், செயற்படாக் கடன்களுக்கெதிராக மேற்கொள்ளப்பட்ட கடன் இழப்பு ஏற்பாடுகள் ரூ.38.2 பில்லியனாக விளங்கியதுடன் 2019 மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகளுடன் ஒப்பிடுகையில் 26.4 சதவீதத்தினால் (ரூ.8.0 பில்லியன்) அதிகரித்தன. துறையானது வரிக்குப் பின்னரான இலாபமாக ரூ.13.7 பில்லியனைக் கொண்டிருந்ததுடன் இது 2019ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்டதுடன் ஒப்பிடுகையில் 6.1 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைக் கொண்டிருந்தமைக்கு இவ்வாண்டுப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட வட்டி வருமானத்தில் ஏற்பட்ட கணிசமான வீழ்ச்சியே முக்கிய காரணமாகும்.

மூலதனம்: **இவ்வாண்டுப்பகுதியில் துறையை முழுமையாக நோக்கும் போது மூலதனம் குறைந்தபட்ச தேவைப்பாட்டு மட்டங்களுக்கு மேலே பேணப்பட்டமையின் காரணமாக துறை தொடர்ந்தும் தாக்குப்பிடிக்கக்கூடியதாக இருந்தது.** ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்வதற்காக உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளினால் புதிய மூலதனங்கள் உள்ளீடு செய்யப்பட்டமை, பெருமளவிலான எதிர்க்கணியமான தேறிய செல்வத்தினைக் கொண்டிருந்த உரிமம்பெற்ற நிதிக் கம்பனியொன்றின் உரிமம் இரத்துச் செய்யப்பட்டமை

வரைபடம் 8.10
உரிமம் பெற்ற நிதிக்கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகள் துறையின் இலாபக் குறிகாட்டிகள்




*மூலம் : இலங்கை மத்திய வங்கி*

8

அட்டவணை 8.12
உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகள் துறையின் வருமானம் மற்றும் செலவுகளின் உள்ளடக்கம்

| விடயம் | 2019 | | 2020 (அ) | |
|---|---|---|---|---|
| | தொகை (ரூ.பில்) | சராசரிச் சொத்துக்களின் சதவீதமாக | தொகை (ரூ.பில்) | சராசரிச் சொத்துக்களின் சதவீதமாக |
| வட்டி வருமானம் | 259.8 | 17.0 | 228.5 | 15.0 |
| வட்டிச் செலவினம் | 142.4 | 9.3 | 117.4 | 7.7 |
| **தேறிய வட்டி வருமானம்** | **117.4** | **7.7** | **111.2** | **7.3** |
| வட்டியல்லா வருமானம் | 39.4 | 2.6 | 32.0 | 2.1 |
| வட்டியல்லா செலவினம் | 93.8 | 6.1 | 78.4 | 5.2 |
| கடன் இழப்பீட்டு ஏற்பாடுகள் (தேறிய)) | 30.2 | 2.0 | 38.2 | 2.5 |
| **வரிக்கு முன்னதான இலாபம்** | **32.8** | **2.2** | **26.6** | **1.7** |
| **வரிக்குப் பின்னரான இலாபம்** | **14.5** | **1.0** | **13.7** | **0.9** |

(அ) தற்காலிகமானது	மூலம் : இலங்கை மத்திய வங்கி

என்பனவற்றின் காரணமாக 2020 திசெம்பர் இறுதியில் மூலதனத் தளம் 2019 இறுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூ.182.0 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.218.9 பில்லியனுக்கு மேம்பட்டது. கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் பொருளாதாரத் தாக்கத்தினைப் பரிசீலனையில் கொண்டு குறைந்தபட்ச மைய மூலதனத் தேவைப்பாடுகளுடன் இணங்கிக் கொள்வதற்கான காலக்கெடுவை அடைவதற்கு உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கு 12 மாதங்கள் நீடிப்பு வழங்கப்பட்டது. புதிய இலக்கு 2022 சனவரி 01ஆம் நாளன்று ரூ.2.5 பில்லியனை அடைவதாகும். 2020 திசெம்பர் இறுதியில் துறையின் மைய மூலதனமும் மொத்த இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட மூலதன விகிதமும் 2019 இறுதியில் நிலவிய 11.1 சதவீதம் மற்றும் 12.5 சதவீதம் கொண்ட மட்டங்களிலிருந்து முறையே 14.5 சதவீதத்திற்கும் 15.7 சதவீதத்திற்கும் அதிகரித்தன.

**மேலும், நிதியியல் துறையினை ஒன்றிணைக்கின்ற முதன்மைத் திட்டமானது குறைந்தபட்ச மைய மூலதனத் தேவைப்பாட்டுடனும் அத்துடன்/ அல்லது குறைந்தபட்ச மூலதனப் போதுமாந்தன்மை விகிதத்துடனும் இணங்கியொழுகாத பல உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் இணங்கிக் கொள்ளாமையினைக் கட்டுப்படுத்துவதற்காக அறிமுகப்படுத்தப்பட்டது.** நிதியியல் நிலைமைகள் மேலும் மோசமடைவதனைத் தவிர்ப்பதற்கும் அத்தகைய நிறுவனங்களின் உறுதித்தன்மையினைப் பேணுவதற்கும் வைப்பாளர்களின் நலவுரித்துக்களைப் பாதுகாப்பதற்குமாக, நிதியியல் துறையினை ஒன்றிணைக்கின்ற முதன்மைத் திட்டத்தினை அறிமுகப்படுத்துவதற்குப் புறம்பாக மத்திய வங்கி பல ஒழுங்குமுறைப்படுத்தல் நடவடிக்கைகளையும் மேற்கொண்டது.

## உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள்/ சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் துறையில் காணப்படும் இடர்நேர்வுகள்

8

**கொடுகடன் இடர்நேர்வு: மொத்தக் கடன்கள் மற்றும் முற்பணங்கள் 2020 திசெம்பர் இறுதியில் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில், 2019 திசெம்பர் இறுதியில் பதிவுசெய்யப்பட்ட 0.9 சதவீத வீழ்ச்சியுடன் (ரூ.10.3 பில்லியன்) ஒப்பிடுகையில் 3.0 சதவீதத்தினால் (ரூ.35.9 பில்லியன்) குறைவடைந்தது.** மொத்தச் செயற்படாக் கடன் விகிதம் 2019 திசெம்பர் இறுதியில் பதிவுசெய்யப்பட்ட 10.6 சதவீதத்திலிருந்து 2020 திசெம்பர் இறுதியில் 13.9 சதவீதத்திற்கு அதிகரித்து, இத்துறையின் சொத்துக்களின் தரம் கடுமையாக மோசமடைந்தமையினைக் காட்டியது. தேறிய செயற்படாக் கடன் விகிதமும் 2019 திசெம்பர் இறுதியில் பதிவுசெய்யப்பட்ட 3.4 சதவீதத்திலிருந்து 2020 திசெம்பர் இறுதியில் 4.2 சதவீதத்திற்கு அதிகரித்தது. இதற்கு கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றினைத் தொடர்ந்து பொருளாதார நடவடிக்கைகள் மெதுவடைந்தமை முக்கிய காரணமாக அமைந்தது. 2020 யூன் இறுதியில் 14.1 சதவீதமாகக் காணப்பட்ட அறிக்கையிடப்பட்ட விகிதத்துடன் ஒப்பிடுகையில் மொத்தச் செயற்படாக்கடன் விகிதம் சிறிதளவால் குறைவடைந்தது. துறையின் செயற்படாக் கடன் விகிதம், மற்றைய சலுகைகளுடன் சேர்ந்த படுகடன் சட்ட இசைவுத்தாமதத்தின் காரணமாக குறைத்து மதிப்பிடப்பட்டிருக்கக்கூடும் என்பதுடன் படுகடன் சட்ட இசைவுத்தாமதம் முடிவடைந்ததன் பின்னர் மேலும் அதிகரிக்கக்கூடும். பாதுகாப்பு ஏற்பாட்டு விகிதம் 2019 திசெம்பரில் அறிக்கையிடப்பட்ட 56.6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2020 திசெம்பரில் 58.9 சதவீதத்திற்கு சிறிதளவால் அதிகரித்தது.

**சந்தை இடர்நேர்வு: துறையானது, வட்டி வீத இடர்நேர்வினையும் பங்குச் சந்தை இடர்நேர்வினையும் உள்ளடக்கிய தாழ்ந்த சந்தை இடர்நேர்வினைத் தொடர்ந்தும் கொண்டிருந்தது.**

**வட்டி வீத இடர்நேர்வு: 2020 ஏப்பிறல் மாதத்திலிருந்து கடன்வழங்கல்களுக்கான வட்டி வீதத்தைக் குறைக்கும் நோக்குடன், வைப்புக்கள் மற்றும் கடன் கருவிகளுக்குமான வட்டி வீதங்கள் மேலும் குறைக்கப்பட்டது.** இதற்கமைய, துறையின் வட்டி வீத இடர்நேர்வு வட்டி உழைக்கும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் முதிர்ச்சிப்பட்டியலில் நிலவுகின்ற எதிர்மறையான பொருத்தப்பாடின்மையுடன் வீழ்ச்சியடைந்தது.

**பங்குரிமை இடர்நேர்வு:** ஆய்விற்குரிய காலப்பகுதியில் துறையின் பங்குரிமை இடர்நேர்வு தொடர்ந்தும் குறைவாகக் காணப்பட்டமைக்கு பட்டியலிடப்பட்ட பங்குகளில் மூலதன வடிவங்களில் பங்குரிமைச் சந்தைகளுக்கான வெளிப்படுத்துகைகள் 2020 திசெம்பர் இறுதியில் துறையின் சொத்துக்களில் 1.0 சதவீதமாகக் காணப்பட்டமையே காரணமாகும்.

**திரவத்தன்மை இடர்நேர்வு: துறையானது 2020 திசெம்பர் இறுதியில் குறைந்தபட்ச ஒழுங்குமுறைப்படுத்தல் மட்டங்களுக்கு மிக மேலாக போதுமான திரவத்தன்மை தாங்கிருப்புக்களைப் பேணியது.** இத்துறையில் கிடைக்கத்தக்கதாகவிருந்த ஒட்டுமொத்த ஒழுங்குமுறைப்படுத்தல் திரவச் சொத்துக்கள் குறித்துரைக்கப்பட்ட குறைந்தபட்ச தேவைப்பாடான ரூ.50.7 பில்லியனுக்கெதிராக

வரைபடம் 8.11
உரிமம் பெற்ற நிதிக்கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகை கம்பனிகள் துறையின் செயற்படாகடன்கள் மற்றும் ஏற்பாட்டுக்காப்பு




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

ரூ.89.0 பில்லியன் கொண்ட மிகையினை எடுத்துக்காட்டின. திரவச்சொத்துத் தேவைப்பாடுகளைத் தளர்த்தியதன் மூலம் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட ஒழுங்குமுறைப்படுத்தல் விலக்கல்களும் திரவத்தன்மை மிகைகளை அதிகரிப்பதற்கு துறைக்கு வசதியளித்தது. திரவத்தன்மை விகிதம் (வைப்புக்கள் மற்றும் கடன்பாடுகள் மீதான திரவச் சொத்துக்கள்) 2019 திசெம்பர் இறுதியில் பதிவுசெய்யப்பட்ட 11.3 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2020 திசெம்பர் இறுதியில் 13.0 சதவீதத்திற்கு அதிகரித்தது.

## அரச பிணையங்களின் முதனிலை வணிகர் கம்பனிகள்

**2020 இறுதியில் அரச பிணையங்கள் சந்தையில் 6 உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளும் 7 கம்பனிகளும் முதனிலை வணிகர்களாக நியமிக்கப்பட்டுள்ளன.** 2020 மே 01ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் யூனியன் வங்கி கொழும்பு பிஎல்சி முதனிலை வணிகர் என்ற அதன் தொழிற்பாடுகளை நிறுத்திக் கொண்டதுடன் நட்வெல்த் செக்குறிட்டீஸ் லிமிடெட்டின் நியமனம் 2020 நவெம்பர் 30ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் புறக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. பான் ஏசியா பாங்கிங் கோப்பிரேஷன் பிஎல்சி மற்றும் பேர்ப்பெட்சுவல் ரெஷரீஸ் லிமிடெட் நிறுவனங்களின் முதனிலை வணிகர் வியாபாரங்கள் மற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல் முறையே 2017 ஓகத்து 15 மற்றும் 2017 யூலை 06ஆம் நாளிலிருந்து இடைநிறுத்தப்பட்டன. 2017 யூலை 24ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் முதலாந்தர ஏலங்களில் பங்கேற்பதிலிருந்தும் என்ரஸ்ட் செக்குறிட்டீஸ் பிஎல்சி தடைசெய்யப்பட்டிருக்கிறது. இதன்படி, 5 உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளும் 5 முதனிலை வணிகர் கம்பனிகளும் மட்டும் அரச பிணையங்கள் சந்தையில் முதனிலை வணிகர்களாகத் தொழிற்பட்டு வருகின்றன.

**சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள்: 2020இல் முதனிலை வணிகர் கம்பனிகளின் மொத்தச் சொத்துக்கள் 12.4 சதவீதத்தினால் ரூ.87.2 பில்லியனுக்கு அதிகரித்தன.** வர்த்தகப்படுத்தல், விற்பனைக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ளவை மற்றும் முதிர்ச்சிக்காக வைத்திருக்கப்பட்டவை என்பனவற்றை உள்ளடக்கிய அரச பிணையங்களின் மொத்த முதலீட்டுச் சொத்துப்பட்டியல் 2020 இறுதியில் ரூ.80.1 பில்லியனாக விளங்கி இவ்வாண்டுப்பகுதியில் 15.5 சதவீதம் கொண்ட அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்தது. வர்த்தகப்படுத்தல் சொத்துப்பட்டியல் 2019 இறுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூ.57.5 பில்லியனிலிருந்து 2020 இறுதியில் ரூ.62.6 பில்லியனுக்கு அதிகரித்த வேளையில் முதிர்ச்சிக்காக வைத்திருக்கப்பட்ட சொத்துப்பட்டியல் 2019 இறுதியின் ரூ.8.6 பில்லியனிலிருந்து 2020 இறுதியில் ரூ.14.7 பில்லியனக்கு அதிகரித்தது. விற்பனைக்குக் கிடைக்கத்தக்கதாகவிருந்த சொத்துப்பட்டியல் 2019 இறுதியின் ரூ.3.3 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2020 இறுதியில் ரூ.2.8 பில்லியனுக்குக் குறைவடைந்தது.

**இலாபத்தன்மை: 2020 ஆண்டுப்பகுதியில் முதனிலை வணிகர் கம்பனிகள் வரிக்குப் பின்னரான இலாபமாக 2019ஆம் ஆண்டுப்பகுதியின் ரூ.3.8 பில்லியனுக்கெதிராக ரூ.4.9 பில்லியனைப் பதிவுசெய்து, விளைவு வீதங்களில் ஏற்பட்ட வீழ்ச்சியின் விளைவாக இலாபத்தன்மையில் ஏற்பட்ட கணிசமான முன்னேற்றங்களை எடுத்துக்காட்டியது.** 2020ஆம் ஆண்டில் முதனிலை வணிகர்களின் கம்பனிகளினால் சந்தைப்படியான இழப்பு பதிவுசெய்யப்பட்டமைக்கு மத்தியிலும் 2019 உடன் ஒப்பிடுகையில் 2020இல் மூலதன இலாபங்களில் காணப்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பு, இலாபங்களின் அதிகரிப்பிற்குப் பெருமளவிற்குப் பங்களித்தது. இதன் விளைவாக, 2020 இறுதியில் முதனிலை வணிகர் கம்பனிகளின் சொத்துக்கள் மீதான வருமானமும் பங்குரிமை மீதான வருவாயும் 2019இல் பதிவுசெய்யப்பட்ட முறையே 6.0 சதவீதத்திலிருந்தும் 28.5 சதவீதத்திலிருந்தும் முறையே 7.6 சதவீதத்திற்கும் 30.5 சதவீதத்திற்கும் அதிகரித்தன.

வரைபடம் 8.12
இடர்நேர் நிறையேற்றப்பட்ட சொத்துக்கள் மற்றும் மூலதனப் போதுமாந்தன்மை விகிதம்




மூலம் : இலங்கை மத்திய வங்கி

**மூலதனம்: முதனிலை வணிகர் கம்பனிகளின் பங்குரிமை 11.2 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு இவ்வாண்டுப்பகுதியில் ஒன்றுசேர்ந்த இலாபங்களே பெருமளவிற்குக் காரணமாகும்.** 2019 இறுதியில் பதிவுசெய்யப்பட்ட 27.6 சதவீதத்திலிருந்து 2020 இறுதியில் 27.0 சதவீதத்திற்குச் சிறிதளவு வீழ்ச்சி காணப்பட்ட போதும் முதனிலை வணிகர் கம்பனிகளின் இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட மூலதனப் போதுமை விகிதம் குறைந்தபட்ச தேவைப்பாட்டுத் தொகையான 10.0 சதவீதத்தினை விட மிக உயர்வாகக் காணப்பட்டது.

## இடர்நேர்வுகளுக்கான வெளிப்படுத்துகை

**சந்தை இடர்நேர்வு: முதனிலை வணிகர் கம்பனிகளின் மொத்த முதலீட்டுச் சொத்துப்பட்டியலிலுக்கான வர்த்தகப்படுத்தல் சொத்துப்பட்டியல் விகிதம் சிறிதளவால் வீழ்ச்சியடைந்து 2019 இறுதியில் காணப்பட்டவாறான 82.9 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2020 இறுதியில் 78.2 சதவீதத்தினைப் பதிவுசெய்து இத்தொழில்துறையின் சந்தை இடர்நேர்வு வெளிப்படுத்துகையில் சிறிதளவு வீழ்ச்சியைப் பிரதிபலித்தது.**

**திரவத்தன்மை இடர்நேர்வு: முதனிலை வணிகர் கம்பனிகளின் ஒட்டுமொத்த திரவத்தன்மை இடர்நேர்வு வெளிப்படுத்துகை அதிகரித்தமைக்கு, 2020 இறுதியில் முதனிலை வணிகர் கம்பனிகளின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் முதிர்ச்சிச் தோற்றப்பாட்டிலுள்ள ஓரிரவு எதிர்க்கணிய பொருத்தப்பாடின்மையில் ஏற்பட்ட அதிகரிப்பே காரணமாகும்.** ஓரிரவு எதிர்க்கணிய பொருத்தப்பாடின்மை 2019 இறுதியில் ரூ.11.0 பில்லியன் அல்லது 72.1 சதவீதத்திலிருந்து 2020 இறுதியில் ஓரிரவுப் பொறுப்புக்களில் ரூ.13.1 பில்லியனுக்கு அல்லது 79.5 சதவீதத்திற்கு அதிகரித்தது. முதனிலை வணிகர்கள் வசம் இடர்நேர்வற்ற அரச பிணையங்கள் பெருமளவில் இருந்தமையினையும் எதிர்பார்க்கப்படாத ஏதேனும் திரவத்தன்மை இடைவெளிகளை நிரப்புவதற்கு நிதிகளைப் பெற்றுக்கொள்ள அத்தகைய அரச பிணையங்களை பிணையுறுதியாகப் பயன்படுத்துவதனையும் கருத்திற் கொள்கையில், திரவத்தன்மை பிரச்சனையினை எதிர்நோக்குகின்ற ஒரு முதனிலை வணிகர் கம்பனியினைத் தவிர, மற்றைய முதனிலை வணிகர் கம்பனிகளின் திரவத்தன்மை இடர்நேர்வுத் தோற்றப்பாடு ஆண்டு முழுவதும் குறைவாகவே காணப்பட்டது. பெரும்பாலான முதனிலை வணிகர் கம்பனிகள் எந்தவொரு திரவத்தன்மை இடைவெளிகளையும் நிரப்புவதற்கு எதிர்பாராத துணைநில் நிதியிடல் ஏற்பாடுகளைக் கொண்டிருந்தன.

## சந்தை நடத்தை

**முதலாந்தரச் சந்தை நடவடிக்கைகள்: 2020இல் திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகள் தொடர்பான முதலாந்தரச் சந்தை ஏலங்களில் முதனிலை வணிகர்களின் பங்கேற்பு கலப்பான செயலாற்றமொன்றினைக் காட்டியது.** 2020இல் நடத்தப்பட்ட 53 திறைசேரி உண்டியல் ஏலங்களில் ஏற்றுக்கொள்ளப்பட்ட மொத்த விலைக் குறிப்பீட்டில் முதனிலை வணிகர்களாக நியமிக்கப்பட்ட உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள், முதனிலை வணிகர் கம்பனிகள் மற்றும் ஊழியர் சேமலாப நிதியம் என்பனவற்றின் காத்திரமான பங்கேற்பு முறையே 58.4 சதவீதத்திற்கும் 41.3 சதவீதத்திற்கும் 0.3 சதவீதத்திற்கும் வகைகூறின. 2020இல் நடத்தப்பட்ட 15 திறைசேரி ஏலங்களில் முதனிலை வணிகர்களாக நியமிக்கப்பட்ட உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள், முதனிலை வணிகர் கம்பனிகள் மற்றும் ஊழியர் சேமலாப நிதியத்தின் காத்திரமான பங்கேற்புக்கள் முறையே 31.5 சதவீதத்திற்கும் 35.3 சதவீதத்திற்கம் 33.2 சதவீதத்திற்கும் வகைகூறின.

வரைபடம் 8.13
உரிமம் பெற்ற நிதிக்கம்பனிகள் மற்றும் சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக் கம்பனிகள் துறையின் ஒழுங்குமுறைப்படுத்தல் திரவக் குறிகாட்டிகள்




மூலம் : இலங்கை மத்திய வங்கி

8

முதனிலை வணிகர் கம்பனிகளின் இரண்டாந்தரச் சந்தை நடவடிக்கைகள்: முதனிலை வணிகர் கம்பனிகளினால் மேற்கொள்ளப்பட்ட அரச பிணையங்களின் (பெறுமதி நியதிகளில்) இரண்டாந்தரச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்கள் 2020இல் ரூ.7,576.5 பில்லியனுக்கு 6.6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. இதில், மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்கள் 72.4 சதவீதத்திற்கு வகைகூறின. 2020ஆம் ஆண்டுப்பகுதியில் முதனிலை வணிகர் கம்பனிகளின் உடனடிக் கொள்வனவுகளும் உடனடி விற்பனைகளும் 2019 உடன் ஒப்பிடுகையில் முறையே 12.5 சதவீதத்தினாலும் 35.8 சதவீதத்தினாலும் அதிகரித்தன.

## உரிமம்பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகள்

உரிமம்பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகள் 2020 இறுதியில் ரூ.6.8 பில்லியன் சொத்துக்களை அறிவித்ததுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 16.0 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைக் காட்டின. 2016ஆம் ஆண்டின் 06 இலக்க நுண்பாக நிதிச் சட்டத்தின் கீழ், இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் சேயாய நுண்பாக கொடுகடன் லிமிட்டெட்டிற்கு நான்காவது உரிமம்பெற்ற நுண்பாக நிதிக் கம்பனியாக உரிமம் வழங்கப்பட்டது. மொத்தச் சொத்துக்களில் கடன்களும் முற்பணங்களும் 85.3 சதவீதம் கொண்ட மிகப் பெரும்பங்கிற்கு வகைகூறின. 2020ஆம் ஆண்டு இறுதியில் நுண்பாக நிதிக் கடன்களும் முற்பணங்களும் ரூ.5.8 பில்லியனைப் பதிவுசெய்து 2019ஆம் ஆண்டு இறுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூ.4.7 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 21.5 சதவீதம் கொண்ட வளர்ச்சியைக் காட்டின. கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் மூலம் உரிமம்பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகள் மோசமாகப் பாதிக்கப்பட்டன. இது இத்துறையில் 2020 இறுதியில் ரூ.0.1 பில்லியன் கொண்ட இழப்பினைத் தோற்றுவித்தது. கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றினால் மோசமாகப் பாதிக்கப்பட்ட உரிமம்பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகள் இயலுமைப்படுத்துவதற்காக நாணயச் சபை, தொழிற்பாட்டுச் செலவுகளை ஈடுசெய்வதற்கு நுண்பாக நிதிச் சட்டத்தின்படி கிடைக்கத்தக்க திரவச் சொத்துக்களைப் பயன்படுத்தி திரவச் சொத்துக்களைப் பேணுவதற்கான உரிமம்பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகளுக்கான தேவைப்பாட்டினை புறக்கீடு செய்தது. துறையின் மைய மூலதன மட்டம் ரூ.2.2 பில்லியனாக விளங்கியதுடன் அனைத்து உரிமம்பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகளும் மைய மூலதனம் தொடர்பாக குறைந்தபட்ச முன்மதியுடைய ஒழுங்குவிதிகளுடன் இணங்கிக் காணப்பட்டன.

## காப்புறுதித் துறை

2020 இறுதியில் நாட்டில் 27 காப்புறுதிக் கம்பனிகள் தொழிற்பட்டதுடன் இதில் 13 நீண்ட காலக் காப்புறுதி கம்பனிகளாகவும் 12 பொதுக் காப்புறுதிக் கம்பனிகளாகவும் 2 கம்பனிகள் நீண்ட கால மற்றும் பொதுவான காப்புறுதி வியாபாரங்களுடன் தொடர்புபட்டனவாகவும் காணப்பட்டன.

**2020இல் காப்புறுதித் துறை அதன் சொத்துத் தளத்தின் அடிப்படையில் குறிப்பிடத்தக்கதொரு வளர்ச்சியைப் பதிவுசெய்தது.** காப்புறுதித் துறையின் மொத்தச் சொத்துக்கள் 2020 இறுதியில் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 14.6 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்து ரூ.790.1 பில்லியனை அடைந்தது. நீண்ட காலக் காப்புறுதி துணைத் துறையானது அதன் சொத்துத் தளத்தினை 2019 இறுதியின் ரூ.485.7 பில்லியனிலிருந்து 2020 இறுதியில் ரூ.563.9 பில்லியனுக்கு 16.1 சதவீதத்தினால் அதிகரித்தவிடத்து பொதுக் காப்புறுதித் துணைத் துறை அதன் சொத்துத் தளத்தினை 11.0 சதவீதத்தினால் அதிகரிக்கச் செய்து 2020 இறுதியில் ரூ.226.2 பில்லியனை அடைந்தது. காப்புறுதித் துறையின் மொத்தச் சொத்துக்களில் துணைத் துறையான நீண்ட காலக் காப்புறுதித் துறையின் சொத்துத் தளம் 2019 இறுதியின் 70.4 சதவீதத்திலிருந்து 2020 இறுதியில் 71.4 சதவீதத்திற்கு உயர்வடைந்தது. இவ்வதிகரிப்புடன் தொடர்பான விதத்தில் மொத்தச் சொத்துக்களில் பொதுக் காப்புறுதி துணைத் துறையின் சொத்துக்களின் பங்கு 2019 இறுதியின் 29.6 சதவீதத்திலிருந்து 2020 இறுதியில் 28.6 சதவீதத்திற்கு சிறிதளவில் வீழ்ச்சியடைந்தது.

**காப்புறுதித்துறையின் மொத்தமாக எழுத்தப்பட்ட கட்டுப்பணமானது 2019 இறுதியில் ரூ.190.2 பில்லியனிலிருந்த 2020 இறுதியில் ரூ.208.6 பில்லியனுக்கு 9.7 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது.** பரிசீலனைக்குரிய இக்காலப்பகுதியில்

அட்டவணை 8.13
காப்புறுதித்துறையின் செயலாற்றம்

ரூபா பில்லியன்

| விடயம் | | 2019 (அ) | 2020(ஆ) |
|---|---|---|---|
| மொத்தச் சொத்துக்கள் | | 689.6 | 790.1 |
| அரச பிணையங்கள் | | 248.2 | 291.3 |
| பங்குரிமை மூலதனம் | | 40.9 | 43.5 |
| காசு மற்றும் வைப்புக்கள் | | 107.5 | 131.3 |
| மொத்த கட்டுப்பணம் | | 190.2 | 208.6 |
| மொத்த வருமானம் | | 245.8 | 264.4 |
| கட்டுப்பண வருமானம் | | 190.2 | 208.6 |
| முதலீட்டு வருமானம் | | 55.5 | 55.7 |
| வரிக்கு முன்னரான இலாபம் | | 30.7 | 38.6 |
| மூலதன போதுமாந்தன்மை விகிதம் (%) | - நீண்டகாலக் காப்புறுதி | 298.0 | 352.0 |
| | - பொதுக் காப்புறுதி | 231.0 | 246.0 |
| பிடித்து வைத்தல் விகிதம் (%) | - நீண்டகாலக் காப்புறுதி | 95.8 | 95.4 |
| | - பொதுக் காப்புறுதி | 83.4 | 77.6 |
| கோரல் வீதம் (%) | - நீண்டகாலக் காப்புறுதி | 41.4 | 38.6 |
| | - பொதுக் காப்புறுதி | 66.4 | 49.3 |
| இணைந்த தொழிற்பாட்டு விகிதம் | - நீண்டகாலக் காப்புறுதி | 91.0 | 83.7 |
| | - பொதுக் காப்புறுதி | 104.4 | 88.3 |
| சொத்துக்கள் மீதான வருவாய் (%) | - நீண்டகாலக் காப்புறுதி | 4.3 | 3.0 |
| | - பொதுக் காப்புறுதி | 5.6 | 8.6 |
| பங்குரிமை மூலதனம் மீதான வருவாய் (%) | - நீண்டகாலக் காப்புறுதி | 18.1 | 13.3 |
| | - பொதுக் காப்புறுதி | 5.6 | 17.8 |
| ஒப்புறுதி விகிதம் (%) | - பொதுக் காப்புறுதி | 14.3 | 33.0 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

*மூலம்:* இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு

நீண்ட காலக் காப்புறுதி துணைத் துறையின் மொத்த எழுதப்பட்ட கட்டுப்பணம் 16.0 சதவீதத்தினால் அதிகரித்தவிடத்து, பொதுக் காப்புறுதி துணைத் துறையின் எழுதப்பட்ட கட்டுப்பணம் 4.2 சதவீதத்தினால் அதிகரித்தது. எனினும், பொதுப் காப்புறுதித் துணைத் துறையானது மொத்த எழுதப்பட்ட காப்புறுதிக் கட்டணத் துறையின் பிரதான பங்களிப்பாளராக விளங்கியதுடன் இது 2020 இறுதியில் 50.6 சதவீதம் கொண்ட பங்கினைப் பதிவுசெய்தது. பொதுக் காப்புறுதித் துணைத் துறை முக்கியமாக மோட்டார் காப்புறுதி மீது முக்கிய கவனத்தினைச் செலுத்தியது. மோட்டார் காப்புறுதி துணைத் துறையின் மொத்த எழுதப்பட்ட கட்டுப்பணம் 2020 இறுதியில் 1.9 சதவீதத்தினால் சிறிதளவில் வீழ்ச்சியடைந்தது.

**ஆண்டு காலப்பகுதியில் காப்புறுதித் துறையின் இலாபத்தன்மை 25.9 சதவீதத்தினால் அதிகரித்தது.** இலாபத்தன்மையின் அதிகரிப்பு பொதுக் காப்புறுதித் துணைத் துறையில் அவதானிக்கப்பட்டதுடன், 104.9 சதவீத அதிகரிப்பினையும் பதிவுசெய்ததுடன் நீண்ட காலக் காப்புறுதித் துணைத் துறையில் 19.1 சதவீத வீழ்ச்சியொன்றினையும் 2020இல் அறிக்கையிடப்பட்டது. கொவிட்-19 வைரஸ்சின் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக அரசாங்கத்தினால் விதிக்கப்பட்ட முடக்கத்தின் காரணமாக கோரல்களில் ஏற்பட்ட வீழ்ச்சியே இதற்குக் காரணமாக அமைந்தது. அதேவேளை, துறையின் ஒப்புக் காப்புறுதி இலாபமும் 2020 இறுதியில் 126.6 சதவீதத்தினால் அதிகரித்தது.

**காப்புறுதித் துறை அதன் கோரல்களில், 14.1 சதவீதம் கொண்ட வீழ்ச்சியை அறிவித்ததுடன் 2020 இறுதியில் ரூ.80.5 பில்லியனைப் பதிவுசெய்தது.** பொதுக் காப்புறுதித் துணைத் துறையின் கோரல்கள் 27.1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த வேளையில் நீண்ட கால காப்புறுதி துணைத் துறையின் கோரல்கள் 2020 இறுதியில் 7.5 சதவீதத்தினால் அதிகரித்தன.

**பொதுக் காப்புறுதித் துணைத் துறையின் சொத்துக்கள் மீதான வருவாய் மற்றும் பங்குரிமை மீதான வருவாய் அதிகரித்ததுடன் நீண்ட காலக் காப்புறுதித் துணைத் துறையின் சொத்துக்கள் மீதான வருவாய் மற்றும் பங்குரிமை மீதான வருவாய் 2019ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் குறிப்பிட்ட ஆண்டில் வீழ்ச்சியினைக் காட்டியது.** பொதுக் காப்புறுதித் துணைத் துறையின் சொத்துக்கள் மீதான வருவாய் 8.6 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் நீண்ட காலக் காப்புறுதித் துணைத் துறையின் சொத்துக்கள் மீதான வருவாய் 2020 இறுதியில் 3.0 சதவீதத்திற்கு குறைவடைந்தது. பொதுக் காப்புறுதியின் பங்குரிமை மீதான வருவாய் 2019 இறுதியில் பதிவுசெய்யப்பட்ட 5.6 சதவீதத்திலிருந்து 2020 இறுதியில் 17.8 சதவீதத்திற்கு அதிகரித்தவிடத்து நீண்ட காலக் காப்புறுதித் துணைத் துறைக்கான பங்குரிமை மீதான வருவாய் 2019 இறுதியில் பதிவுசெய்யப்பட்ட 18.1 சதவீதத்திலிருந்து 2020 செத்தெம்பர். இறுதியில் 13.3 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. ஒப்புறுதி விகிதம் 2019 இறுதியில் பதிவுசெய்யப்பட்ட 14.3 சதவீதத்திலிருந்து 2020 இறுதியில் 33.0 சதவீதத்திற்கு அதிகரித்தது.

**நீண்ட காலக் காப்புறுதித் துணைத் துறையின் மொத்தச் சொத்துக்களுக்கான மூலதனம் 2019 இறுதியில் 23.4 சதவீதத்திலிருந்து 2020 இறுதியில் 22.0 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தவிடத்து பொதுக் காப்புறுதி துணைத் துறையின் மொத்தச் சொத்துக்களுக்கான மூலதனம் 2019 இறுதியின் 46.0 சதவீதத்திலிருந்து 2020 இறுதியில் 49.7 சதவீதத்திற்கு அதிகரித்தது.**

**காப்புறுதித் துறையினால் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகள் அரச பிணையங்கள் மீதே தொடர்ந்தும் செறிந்து காணப்பட்டது.** அரச பிணையங்கள் மீதான நீண்ட காலக் காப்புறுதித் துணைத் துறையின் சொத்துக்களினது பங்கு 2019 இறுதியின் 39.8 சதவீதத்திலிருந்து 2020 இறுதியில் 40.4 சதவீதத்தினால் அதிகரித்தது. அதேவேளையில், அரச பிணையங்கள் மீது முதலீடு செய்யப்பட்ட பொதுக் காப்புறுதித் துணைத் துறையின் சொத்துக்கள் 2019 இறுதியில் பதிவுசெய்யப்பட்ட 26.9சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2020 இறுதியில் 28.1 சதவீதத்திற்கு அதிகரித்தது. மறுபுறத்தில், நீண்ட காலக் காப்புறுதித் துணைத் துறையின் பங்குரிமை மீதான முதலீட்டின் பங்கு 2019 இறுதியில் 6.8 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2020 இறுதியில் 6.5 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. மேலும், பங்குரிமை மீதான பொதுக் காப்புறுதி துணைத் துறையின் பங்கு 2019 இறுதியின் 7.7 சதவீதத்திலிருந்து 2020 இறுதியில் 7.4 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்துள்ளது.

## ஓய்வுகால நிதியங்கள்

**ஓய்வுகால நிதியங்களின் மொத்தச் சொத்துக்கள் 2020 இறுதியில் ரூ.3,639.7 பில்லியனாக இருக்குமென அறிக்கையிடப்பட்டதுடன் நிதியியல் துறைச் சொத்துக்களில் 15.4 சதவீதமாக இருக்குமென அறிவிக்கப்பட்டுள்ளது.** இத்துறையில்

வரைபடம் 8.14

காப்புறுதித் துறையின் மொத்த எழுதப்பட்ட கட்டுப்பணம்




*மூலம்* : இலங்கை காப்புறுதித்துறை ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு

8

ஊழியர் சேமலாப நிதியம் ஆதிக்கம் கொண்டிருப்பதுடன் இது ஓய்வுகால நிதித் துறையின் மொத்தச் சொத்துக்களில் 77.6 சதவீதத்திற்கு வகைகூறியது. ஊழியர் சேமலாப நிதியத்திற்குப் புறம்பாக, ஊழியர் நம்பிக்கை நிதியம் மற்றும் அரச துறை அரச பணிகள் சேம நிதியம் என அழைக்கப்படும் வேறு இரண்டு பகிரங்கமாக முகாமைப்படுத்தப்படும் நிதியங்கள் காணப்படுகின்றன.

## ஊழியர் சேமலாப நிதியம்

**1958ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் (ஊ.சே.நி) சட்டத்திற்கமைய நிதியத்தின் கட்டுக்காப்பு இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள வேளையில், நிதியத்தின் பொது நிர்வாகம் தொழில் ஆணையாளரிடம் ஒப்படைக்கப்படுகின்றது.** ஊழியர் சேமலாப நிதியத் திணைக்களம் நாணயச் சபை அதன் அதிகாரங்கள் கடமைகள் மற்றும் தொழிற்பாடுகளை ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க ஆற்றுவதற்கு வசதியளிக்கிறது.

**2020 இறுதியில் நிதியத்தின் மொத்தப் பெறுமதி 2019 இறுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூ.2,540.4 பில்லியனிலிருந்து ரூ.2,824.3 பில்லியனுக்கு ரூ.283.9 பில்லியனால் அதிகரித்து 11.2 சதவீத வளர்ச்சியைப் பதிவுசெய்தது.** இவ்வதிகரிப்பிற்கு உறுப்பினர்களின் தேறிய பங்களிப்புக்கள் (மீளளிப்புக் கொடுப்பனவுகளைக் கழித்த பங்களிப்புக்கள்) மற்றும் நிதியத்தின் முதலீடுகளூடாக உருவாக்கப்பட்ட வருமானம் என்பவற்றின் இணைந்த தாக்கமே காரணமாகும். உறுப்பினர்களுக்கான மொத்தப் பொறுப்பு 2020 இறுதியில் ரூ.2,767.8 பில்லியனாக விளங்கி 2019இன் இறுதியின் ரூ.2,497.6 பில்லியனிலிருந்து 10.8 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பதிவுசெய்தது. 2020ஆம் ஆண்டின் மொத்தப் பங்களிப்பு 4.1 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்து ரூ.150.7 பில்லியனாகக் காணப்பட்டதுடன் 2020ஆம் ஆண்டில் உறுப்பினர்களுக்கும் அவர்களது சட்ட ரீதியான வாரிசுகளுக்கான வழங்கப்பட்ட மீளளிப்புக்களின் மொத்தத் தொகை ரூ.109.7 பில்லியனாகக் காணப்பட்டது. இது, 2019இனை விட 13.1 சதவீதம் கொண்டதொரு வீழ்ச்சியாகும். இதன்படி, நிதியத்திற்கான தேறிய பங்களிப்பு, முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட ரூ.30.9 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.41.0 பில்லியனாகக் காணப்பட்டது. நிதியத்தின் வருடாந்த இலாபம் முன்னைய ஆண்டின் ரூ.222.8 பில்லியனிலிருந்து 2020இல் ரூ.244.9 பில்லியனுக்கு 9.9 சதவீதத்தினால் அதிகரித்தது. வட்டி வருமானத்தால் ஏற்பட்ட ரூ.22.7 பில்லியன் அதிகரிப்பே இதற்குப் பிரதான காரணமாகும்.

**நிதியத்தின் மொத்த முதலீட்டுச் சொத்தப்பட்டியல் (ஏட்டுப் பெறுமதி) 2019 இறுதியின் ரூ.2,548.7 பில்லியனிலிருந்து 2020 இறுதியின் ரூ.2,829.5 பில்லியனுக்கு 11.0 சதவீதத்தினால் அதிகரித்தது.** நிதியத்தின் முதலீட்டுக் கொள்கை உறுப்பினர்களுக்கு நீண்ட கால நேர்க்கணிய உண்மை வருவாய் வீதமொன்றினை வழங்குவதனை முக்கிய கவனத்தில் கொண்டிருந்த வேளையில், நிதியத்தின் பாதுகாப்பினையும் மீளளிப்புக் கொடுப்பனவுகளையும் நிதியத்தின் ஏனைய செலவுகளையும் பூர்த்தி செய்யத்தக்க விதத்தில் திரவத்தன்மை போதுமான மட்டத்தில் கிடைப்பதனையும் உறுதிப்படுத்துவதாகவுள்ளது. இதற்கமைய, 2020 இறுதியில் முதலீட்டுச் சொத்துப்பட்டியல் 93.4 சதவீதமான அரச பிணையங்களையும் 2.8 சதவீதமான பங்குகளையும் 1.2 சதவீதமான கம்பனி தொகுதிக் கடன்களையும் 2.0 சதவீதமான நிலையான வைப்புக்களையும் எஞ்சிய 0.6 சதவீதம் நேர்மாற்று மீள்கொடுப்பனவு உடன்படிக்கையினையும் உள்ளடக்கியிருந்தது.

அட்டவணை 8.14
ஊழியர் சேமலாப நிதியத்தின் ஐந்து ஆண்டுச் செயலாற்ற சுருக்கம்

| விடயம் | 2016 | 2017 | 2018 | 2019 | 2020(அ) |
|---|---|---|---|---|---|
| நிதியத்தின் மொத்தப் பெறுமதி (ரூ.பில்) | 1,841.5 | 2,066.3 | 2,289.4 | 2,540.4 | 2,824.3 |
| உறுப்பினர்களுக்கான மொத்த பொறுப்பு (ரூ.பில்) | 1,810.6 | 2,020.8 | 2,254.2 | 2,497.6 | 2,767.8 |
| மொத்த பங்களிப்புக்கள் (ரூ.பில்) | 118.3 | 133.3 | 145.0 | 157.2 | 150.7 |
| மொத்த மீளளிப்புக்கள் (ரூ.பில்) | 108.4 | 117.5 | 108.0 | 126.3 | 109.7 |
| தேறிய பங்களிப்பு (ரூ.பில்) | 9.9 | 15.8 | 37.0 | 30.9 | 41.0 |
| வட்டிவீதம் (%) | 10.50 | 10.50 | 9.50 | 9.25 | 9.00 |

(அ) தற்காலிகமானது *மூலம்:* இலங்கை மத்திய வங்கி

**முதலீட்டு வருமானம்: நிதியத்தின் மொத்த முதலீட்டு வருமானம் 2020இல் ரூ.285.4 பில்லியனாக விளங்கி, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 10.2 சதவீதமான அதிகரிப்பினைப் பதிவுசெய்தது.** மதிப்பிழப்பு இலாபத்தினை உள்ளடக்கிய வட்டி வருமானமானது நிதியத்திற்கான வருமானத்தின் முக்கிய மூலமாகத் தொடர்ந்தும் விளங்கியதுடன் இது 2019இன் ரூ.254.7 பில்லியனிலிருந்து 2020இல் ரூ.277.4 பில்லியனுக்கு 8.9 சதவீதத்தினால் அதிகரித்தது. பங்கிலாப வருமானம் 2019இன் ரூ.6.2 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2020இல் ரூ.3.0 பில்லியனுக்கு 52.2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இலாபம் அல்லது இழப்பூடாகச் சந்தைப் பெறுமதியில் நிதியியல் சாதனங்கள் மீதான தேறிய இலாபம்/ இழப்பு 2019இன் ரூ.1.9 பில்லியன் கொண்ட தேறிய இழப்புடன் ஒப்பிடுகையில் 2020இல் ரூ.5.0 பில்லியன் கொண்ட தேறிய இலாபத்தினைப் பதிவுசெய்தது.

**நிதியத்தின் முழுமொத்த வருமானம்: 2020இல் நிதியமானது ரூ.285.6 பில்லியன் கொண்ட முழுமொத்த வருமானத்தினை ஈட்டியதன் மூலம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 10.1 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பதிவுசெய்தது.** தொழிற்பாட்டுச் செலவினம் மற்றும் வரிச் செலவினத்திற்காகச் சீராக்கம் செய்த பின்னர் 2020ஆம் ஆண்டிற்கான தேறிய இலாபம் ரூ.244.9 பில்லியனாக அமைந்ததுடன் இது 2019 உடன் ஒப்பிடுகையில்

அட்டவணை 8.15

**ஊழியர் சேம நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் செயலாற்றம்**

| விடயம் | ஊழியர் சேமலாப நிதியம் | | ஊழியர் நம்பிக்கை நிதியம் | |
|---|---|---|---|---|
| | 2019 (அ) | 2020 (ஆ) | 2019 (அ) | 2020 (ஆ) |
| மொத்தச் சொத்துக்கள் (ரூ. பில்) | 2,540.4 | 2,824.3 | 343.3 | 380.4 |
| மொத்த அங்கத்தவர் மீதி (ரூ. பில்) | 2,497.6 | 2,767.8 | 339.2 | 347.6 |
| அங்கத்தவர் கணக்குகளின் எண்ணிக்கை (மில்) | 19.4 | 19.4 | 15.3 | 15.9 |
| இயங்கு நிலையிலுள்ள அங்கத்தவர் கணக்குகளின் எண்ணிக்கை (மில்) | 2.9 | 2.0 | 2.6 | 2.5 |
| பங்களிப்புச் செய்யும் தொழில்தருநர்களின் எண்ணிக்கை | 94,171 | 70,552 | 82,375 | 75,756 |
| மொத்த பங்களிப்புக்கள் (ரூ. பில்) | 157.2 | 150.7 | 27.5 | 27.0 |
| மொத்த மீளளிப்புக்கள் (ரூ. பில்) | 126.3 | 109.7 | 19.8 | 18.6 |
| மொத்த முதலீட்டுப்பட்டியல் (ரூ.பில்) | 2,548.7 | 2,829.5 | 335.2 | 358.4 |
| இதில்: அரச பிணையங்கள் (%) | 93.8 | 93.4 | 77.7 | 81.0 |
| மொத்த வருமானம் (ரூ. பில்) | 259.3 | 285.6 | 32.1 | 34.5 |
| பகிர்ந்தளிப்பிற்காக உள்ள இலாபம் (ரூ. பில்) | 223.0 | 245.1 | 25.5 | 27.8 |
| முதலீடுகளிலிருந்தான வருவாய் (%) | 10.7 | 10.6 | 9.1 | 8.8 |
| அங்கத்தவர் மீதிகளுக்கு வழங்கப்பட்ட வட்டி வீதம் (%) | 9.3 | 9.0 | 8.0 | 8.0 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

*மூலங்கள்:* இலங்கை மத்திய வங்கி
ஊழியர் நம்பிக்கை நிதிச் சபை

9.9 சதவீதம் கொண்ட அதிகரிப்பாகக் காணப்பட்டது. ஊழியர் சேமலாப நிதியம் 2020இல் சராசரி முதலீட்டின் மீது 10.6 சதவீத வருமானத்தினை ஈட்டக்கூடியதாக இருந்த வேளையில் 2020இல் மொத்த வருமானத்திற்கான தொழிற்பாட்டுச் செலவின விகிதம் 0.58 சதவீதத்தில் பேணப்பட்டது. 2019 உடன் ஒப்பிடுகையில் வரிச் செலவினம் ரூ.4.1 பில்லியனால் மேலும் அதிகரித்தது. இருப்பினும் கூட, நிதியியல் சாதனங்களின் வகைப்படுத்தல் மற்றும் அளவுமுறைகளுக்காகப் பிரயோகிக்கப்படுகின்ற இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம்-9, பின்பற்றுதலுடன் இதற்கேற்ப பட்டியலிடப்பட்ட பங்குச் சாதனங்கள் சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்பட்டதுடன் தற்போதைய சந்தை நிலைமைகளின் கீழ், 2020ஆம் ஆண்டிற்கான வருமானமாக ரூ.5.0 பில்லியன் கொண்ட சந்தைப்படியான இலாபமாகப் பதிவுசெய்யப்பட்டது. இதற்கமைய, ஊழியர் சேமலாப நிதியம் இலாபச் சமநிலைப்படுத்தல் ஒதுக்கிற்கு ரூ.13.0 பில்லியனை மாற்றல் செய்த பின்னர் 2020இல் உறுப்பினர் மீதிகளுக்கு 9.0 சதவீதம் கொண்ட வட்டியைப் பிரகடனம் செய்வதற்கான வழிமுறைகளை மேற்கொண்டது.

**இடர்நேர்வு முகாமைத்துவம்: கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றுச் சூழ்நிலையிலும் கூட, முதலீட்டு நடவடிக்கைகள் தற்போதுள்ள இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பிற்கிணங்க மேற்கொள்ளப்பட்ட வேளையில் உள்ளகக் கட்டுப்பாட்டுச் சூழல் பொருத்தமான விதத்தில் பேணப்பட்டது.** இதன்படி, முதலீட்டு நடவடிக்கைகள் ஆண்டு முழுவதும் தொடர்ந்த வேளையில் நிதியத்தின் பாதுகாப்பும் உச்ச இலாபங்களும் உறுதிப்படுத்தப்பட்டன. மேலும், மத்திய வங்கியின் தொடர்பான மேற்பார்வைக் குழுவினூடாக நாணயச் சபைக்கு திணைக்களத்தின் இடர்நேர்வுகளை அறிக்கையிடுகின்ற கிரமமான செய்முறை அத்தகைய நடவடிக்கைகளின் பொறுப்புக்கூறும் தன்மையினையும் வெளிப்படைத் தன்மையினையும் பேணுவதற்காக ஆண்டு முழுவதும் தொடர்ந்தது. எனினும், சந்தை வட்டி வீதங்களில் காணப்பட்ட கடுமையான குறைப்பின் காரணமாக ஆண்டுப்பகுதியில் இடம்பெற்ற குறிப்பிடத்தக்களவான மாற்றங்கள், பங்குச் சந்தையில் காணப்பட்ட எதிர்பாராத தளம்பல்கள், இணைத்தரப்பினர்களின் இடர்நேர்வுத் தரமிடலில் ஏற்பட்ட மாற்றங்கள் என்பன தற்போது நிலவும் இடர்நேர்வுக் கணிப்பு விதிகளை மாற்றியமைக்க வேண்டியதன் அவசியத்திற்கு வழியமைத்தன. இதற்கமைய, சந்தை நிலைமைகளைப் பரிசீலனையில் கொண்டு, வியாபாரப் பிரிவினர் முதலீட்டுத் தீர்மானங்களை மேற்கொள்வதற்கு ஏற்றுக்கொள்ளத்தக்க வழிமுறைகளை வழங்கும் பொருட்டு, தற்போதுள்ள முதலீட்டு வழிகாட்டலினை மீளாய்வு செய்து திருத்துவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

## ஊழியர் நம்பிக்கை நிதியம்

**ஓய்வுகால நிதியத் துறையின் சொத்துத் தளத்தில் 10.5 சதவீதத்தினைப் பங்களிப்புச் செய்த ஊழியர் நம்பிக்கை நிதியமானது அதன் சொத்துத் தளம், அங்கத்தவர்களின் எண்ணிக்கை மற்றும் மொத்தப் பங்களிப்பு என்பனவற்றில் முன்னேற்றத்தினைப் பதிவுசெய்தது.** 2020இல் 15.9 மில்லியன் அங்கத்துவக் கணக்குகளில் 2.5 மில்லியன் கணக்குகள் மட்டுமே செயற்படும் கணக்குகளாகக் காணப்பட்டன. நிதியத்திற்குப் பங்களிக்கின்ற தொழில்தருநர்களின் எண்ணிக்கை 2019 திசெம்பரின் 82,375 இலிருந்து 2020 திசெம்பர் இறுதியில் 75,756 இற்கு வீழ்ச்சியடைந்தது. ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் மொத்த உறுப்பினர் மீதி 2019 திசெம்பர் இறுதியின் ரூ.339.2 பில்லியனிலிருந்து 2020 திசெம்பர் இறுதியில் ரூ.347.6 பில்லியனுக்கு 2.5 சதவீதத்தினால் அதிகரித்தது. 2020இல் ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் மொத்தப் பங்களிப்பு 1.8 சதவீதத்தினால் குறைவடைந்து ரூ.27.0 பில்லியனை அடைந்த வேளையில் மொத்த மீளளிப்பு 6.1 சதவீதத்தினால் குறைடைந்து ரூ.18.6 பில்லியனை அடைந்தது.

**அதேவேளை, 2020 திசெம்பர் இறுதியில் ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் மொத்தச் சொத்துக்கள் 10.8 சதவீதத்தினால் அதிகரித்து ரூ.380.4 பில்லியனை அடைந்தது.** ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் முதலீடானது 2020இல் ரூ.358.4 பில்லியனுக்கு முன்னேறிய அதேவேளை, இது 2019 உடன் ஒப்பிடுகையில் 6.9 சதவீதம் கொண்டதொரு அதிகரிப்பாகும். 2020இல் இம்முதலீடுகளில் 81.0 சதவீதம் அரச பிணையங்களில் முதலீடு செய்யப்பட்டதுடன் இது 2019இல் பதிவுசெய்யப்பட்ட 77.7 சதவீதத்தினை விடவும் கூடுதலானதாகும். நிலையான வைப்புக்களில் முதலீடுகளின் பங்கு 2019இன் 16.7 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2020இல் 13.6 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. எனினும், பங்குரிமைகளில் செய்யப்பட்ட முதலீடுகளின் பங்கு 2019இல் அறிவிக்கப்பட்ட 3.2 சதவீதத்துடன் ஒப்பிடுகையில்

2020இல் 3.3 சதவீதத்திற்கு சற்று அதிகரித்தது. நிதியமானது இவ்வாண்டிற்கான உறுப்பினர் மீதிகளின் மீதான வருமான விகிதத்தினை 8.0 சதவீதத்தில் பேணக்கூடியதாக இருந்தது.

### ஏனைய ஓய்வுகால நிதியங்கள்

**ஓய்வுகால நிதியத் துறையில் 1.9 சதவீதத்திற்கு வகைகூறிய பொதுச் சேவைகள் சேமலாப நிதியம் உறுப்பினர்களின் எண்ணிக்கை மற்றும் தேறிய பங்களிப்பு ஆகிய நியதிகளில் அதிகரித்த வேளையில் 10.1 சதவீதமான வளர்ச்சியை பதிவுசெய்து சொத்துக்களின் நியதிகளில் ரூ.70 பில்லியனை அடைந்தது.** நிதியத்தின் செயற்படுகின்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 2019 திசெம்பர் இறுதியின் 222,739 உடன் ஒப்பிடுகையில் 2020 திசெம்பர் இறுதியில் 235,884 ஆகக் காணப்பட்டது. அதேவேளை, நிதியத்தின் முதலீடுகளும் 11.7 சதவீதத்தினால் அதிகரித்து 2020 திசெம்பர் இறுதியில் ரூ.69.6 பில்லியனை அடைந்தது. தேறிய பங்களிப்பு 2019இல் அறிவிக்கப்பட்ட ரூ.491.0 மில்லியன் கொண்ட தேறிய பங்களிப்புடன் ஒப்பிடுகையில் 2020ஆம் ஆண்டுப்பகுதியில் ரூ.507.0 மில்லியனாகக் காணப்பட்டது. 2020இல் பொதுச் சேவைகள் சேம நிதியம் அதன் மொத்த முதலீட்டில் 40.5 சதவீதத்தினை அரச பிணையங்களில் முதலீடு செய்தது. 2020ஆம் ஆண்டிற்கான உறுப்பினர் நிலுவைகள் மீதான வருவாய் வீதம் 9.8 சதவீதமாகக் காணப்பட்டது.

**2020 இறுதியில் அனுமதிக்கப்பட்ட ஓய்வூதியம் மற்றும் சேமலாப நிதியங்கள் ஓய்வுகால நிதிங்களில் 10.0 சதவீதத்திற்கு வகைகூறுகிறது.** தனிப்பட்ட சேமலாப நிதியத்தில் 2020 இறுதியில் 186,491 உறுப்பினர்களை உள்ளடக்கியதுடன் நிதியத்தின் மொத்தச் சொத்துக்கள் 2020இன் இறுதியில் ரூ.364.9 பில்லியனாகக் கணிப்பிடப்பட்டது.

## 8.4 நிதியியல் சந்தைகளின் செயலாற்றம்

### உள்நாட்டுப் பணச்சந்தை

### சந்தைத் திரவத்தன்மை

**2020ஆம் ஆண்டுப்பகுதியில் உள்நாட்டுப் பணச்சந்தை மிகையான திரவத்தன்மை நிலைமையினைத் தொடர்ச்சியாகப் பதிவுசெய்தது.** இதற்கு, நியதி ஒதுக்கு விகிதத்தில் செய்யப்பட்ட குறைப்பு, முதலாந்தரச் சந்தையில் திறைசேரி உண்டியல்கள் கொள்வனவு செய்யப்படுகின்றமை மற்றும் மத்திய வங்கியினால் கொள்வனவு செய்யப்படுகின்ற வெளிநாட்டுச் செலாவணிகள் போன்ற ஒரு சில காரணிகளின் தூண்டலே முக்கிய காரணமாகும். கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றினைக் கவனத்தினைக் கொண்டு மத்திய வங்கியினால் அறிமுகப்படுத்தப்பட்ட விசேட கடன் திட்டங்களின் கீழ் பகிர்ந்தளிக்கப்படுகின்ற நிதியம் மற்றும் மத்திய வங்கியின் நாணயத் தொழிற்பாடு என்பனவும் மிகையான திரவத்தன்மைக்குப் பங்களிப்புச் செய்தது. மத்திய வங்கி கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் காரணமாகத் தோன்றிய குழப்ப நிலையைக் கருத்திற் கொண்டு தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை நிலையைத் தொடர்ச்சியாக மேற்கொண்டதுடன் 2020ஆம் ஆண்டுப்பகுதியில் மத்திய வங்கியினால் கொள்கை வட்டி வீதங்கள் ஐந்து தடவைகள் மொத்தமாக 250 அடிப்படைப் புள்ளிகளினால் குறைப்பை மேற்கொண்டது. இதன் விளைவாக, துணைநில் வைப்பு வசதி வீதமும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதமும் முறையே மிகக் குறைந்த மட்டமான 4.50 சதவீதத்திற்கும் 5.50 சதவீதத்திற்கும் குறைக்கப்பட்டன. மேலும், 2020இல் மத்திய வங்கி பல்வேறு நாணயக் கொள்கைத் தளர்த்தல் வழிமுறைகளை அறிமுகப்படுத்திய வேளையில், நிதியியல் முறைமைக்கு ஆதரவளிப்பதனையும் பொருளாதார நடவடிக்கைகளுக்கு வசதியளிப்பதனையும் பரிசீலனையில் கொண்டு, பணச் சந்தையில் திரவத்தன்மையின் கிடைப்பனவு உறுதிப்படுத்தப்பட்டது. உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் ரூபா வைப்புப் பொறுப்புக்கள் மீது பிரயோகிக்கத்தக்க நியதி ஒதுக்கு விகிதத்தினை இவ்வாண்டுப்பகுதியில் இரண்டு கட்டங்களாக 2020 மாச்சிலும் யூனிலும் 3.00 சதவீதப் புள்ளியினால் மிகக் குறைந்த மட்டமான 2.00 சதவீதம் கொண்ட தாழ்ந்த மட்டத்திற்குக் குறைக்கப்பட்டது. இதன் மூலம் உள்நாட்டுப் பணச் சந்தைக்கு ஏறத்தாழ ரூ.180 பில்லியன் கொண்ட திரவத்தன்மை உள்ளீடு செய்யப்பட்டது. அதேநேரம், 2020 ஏப்பிறல் நடுப்பகுதியிலிருந்து உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு திரவத்தன்மை முகாமைத்துவத்தில் கூடியளவு நெகிழ்ச்சித்தன்மையினை வழங்கும் பொருட்டு மத்திய வங்கியுடன் உரிமம்பெற்ற வர்த்தக வங்கியொன்றினால் வைத்திருக்கப்பட வேண்டிய குறைந்தபட்ச நாளாந்த ஒதுக்குத் தேவைப்பாடுகள் எந்தவொரு குறிப்பிட்ட நாளன்றும் தேவைப்படுத்தப்பட்ட ஒதுக்குகள் 90 சதவீதத்திலிருந்து 20 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டன. மேலும், நியதி ஒதுக்குத் தேவைப்பாட்டிற்கான திருத்தத்துடன் சேர்த்து உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் நியதி ஒதுக்கு விகிதத்தினைக் கணிப்பதற்காக கருமபீடக் காசுத்தொகை உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் பெட்டகங்களிலுள்ள நாணயத் தாள்களும் குற்றிகளும் 2020 யூன் நடுப்பகுதியிலிருந்து 2.00 சதவீதத்திலிருந்து 1.00 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது. மேலும், குறைக்கப்பட்ட வட்டி வீதங்களில் வங்கித்தொழில் நிறுவனங்களுக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள அவசரகால நிதியிடலை உறுதிப்படுத்துவதற்காக, மத்திய வங்கியினால் நிருவாக ரீதியாகத் தீர்மானிக்கப்படுகின்ற வங்கி வீதத்தினை 2020 ஏப்பிறல் மே மற்றும் யூலையில் 650 அடிப்படைப் புள்ளியினால் 8.5 சதவீதத்திற்குக் குறைத்துக் கொண்ட வேளையில், துணைநில் கடன்வழங்கல் வசதி வீதத்திற்கு மேலாக 300 அடிப்படைப் புள்ளிகளைக் கொண்ட எல்லையுடன் தன்னியக்கமாகவே தீர்மானிக்கப்படுவதற்கு அனுமதிக்கப்பட்டது.

**மத்திய வங்கி, சந்தைத் திரவத்தன்மை மட்டங்களில் ஏற்படும் மாற்றங்களைப் பொறுத்து 2020இன் முதலரைப்பகுதியில், திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் கீழ், மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்கள் இரண்டையும் நடத்தியது.** எனினும், உள்நாட்டுப் பணச் சந்தையில் மிகையான திரவத்தன்மை நிலைமை தொடர்ந்தும் நிலவியதன் காரணமாக, மத்திய வங்கி 2020 யூன் 17ஆம் நாளிலிருந்து 2020 செத்தெம்பர் 24ஆம் நாள் வரையான காலப்பகுதியில் திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் கீழ் ஏலங்களை நடத்துவதனை தவிர்த்துக் கொண்ட வேளையில், மிகையான திரவத்தன்மையினை ஓரிரவு அடிப்படையில் துணைநில் வைப்பு வசதியினூடாகத் தொடர்ந்தும் ஈர்த்துக் கொண்டது. போதுமான திரவத்தன்மையின் கிடைப்பனவினை உறுதிப்படுத்துவதற்கான தேவையினை அங்கீகரிக்கின்ற விதத்தில், முக்கியமாக, நாட்டின் அட்டவணையிடப்பட்ட வெளிநாட்டுக் கடன் மீள்கொடுப்பனவுகள் காரணமாக உள்நாட்டு ரூபாத் திரவத்தன்மையில் குறைப்பு ஏற்படும் என்ற எதிர்பார்ப்பினைக் கருத்திற்கொண்டு, உள்நாட்டுப் பணச் சந்தையில் மிகையான திரவத்தன்மை தொடர்ந்தும் காணப்பட்டமைக்கிடையிலும் 2020 செத்தெம்பர் 25 இலிருந்து திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் கீழ் ஏலங்கள் மீளத் தொடங்கின. இதற்கமைய, மத்திய வங்கி உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும் தனியான துணைநில் வணிகர்களுக்கும் தேவையின் அடிப்படையில் நீண்ட கால மற்றும் குறுங்கால நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்களை நடத்தியது. மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட திறைசேரி உண்டியல்களின் முதலாந்தர கொள்வனவுகளின் காரணமாக உள்நாட்டுப் பணச் சந்தையின் திரவத்தன்மை கணிசமானளவிற்கு அதிகரித்தமையினால் 2020 நவெம்பர் 12 இலிருந்து திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் கீழ் ஏலங்கள் நடத்தப்படவில்லை.

## பணச் சந்தை வட்டி வீதங்கள்

**மத்திய வங்கியின் நாணயக் கொள்கைத் தளர்த்தல் வழிமுறைகளைத் தொடர்ந்து, சந்தை வட்டி வீதங்களின் கீழ் நோக்கிய சீராக்கங்களுக்குத் தூண்டுதலளிக்கும் விதத்தில் மத்திய வங்கியின் தற்போதைய நாணயக் கொள்கைக் கட்டமைப்பின் தொழிற்பாட்டு இலக்காகவுள்ள சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதம், துணைநில் வீத வீச்சின் கீழ்மட்டத்தினை நோக்கி நகர்வதற்கு அனுமதிக்கப்பட்டது.** 2020இன் முதலரைப்பகுதியில், இலங்கை மத்திய வங்கி அதன் நாணயத் தொழிற்பாடுகளூடாக, சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதத்தினை துணைநில் வசதி வீச்சின் ஏறத்தாழ நடுவீதத்தில் பேணக்கூடியதாக இருந்தது. இருப்பினும் கூட, ஆண்டின் பின்னரைப்பகுதியில், பொருளாதார நடவடிக்கைகளுக்கு பாதுகாப்பினை வழங்கும் பொருட்டு சந்தைக் கடன்வழங்கல் வீதங்களை கீழ் நோக்கிக் குறைப்பதனை நோக்கமாகக் கொண்டிருந்த வேளையில், பணச் சந்தையில் தொடர்ந்தும் உயர் திரவத்தன்மை மிகை காணப்படுவதனை அனுமதித்த மத்திய வங்கி சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதமான துணைநில் வீத வீச்சினைக் கீழ் மட்டத்திற்கு அணித்தாக நிலைபெறுவதற்கு வசதியளித்தது. இதன்படி, 2020 திசெம்பர் இறுதியில், சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதம் துணைநில் வீத வீச்சின் கீழ்மட்டத்திற்கு சிறிது மேலே 4.55 சதவீதத்தில் தொடர்ந்தும் காணப்பட்டது. அதேநேரம் சராசரி நிறையேற்றப்பட்ட மீள்கொள்வனவு வீதமும் சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீக்கத்திற்கு இசைவான வீதத்தில் பெருமளவிற்கு நகர்ந்தது. இதன்படி, சராசரி நிறையேற்றப்பட்ட மீள்கொள்வனவு வீதம் 2020 திசெம்பர் இறுதியில் 4.57 சதவீதமாக அமைந்து மீள்கொள்வனவுச் சந்தையில் கணிசமான நிதி கிடைக்கத்தக்கதாக இருந்தமையினை எடுத்துக்காட்டியது.

## ஏனைய அபிவிருத்திகள்

**2020ஆம் ஆண்டுப்பகுதியில் மத்திய வங்கியின் நாணயக் கொள்கை நடைமுறைப்படுத்தல், உள்நாட்டுப் பணச் சந்தையில் போதுமான திரவத்தன்மையின் கிடைப்பனவினை உறுதிப்படுத்துவதன் மீது கவனத்தினைச் செலுத்தியது.** போதுமான திரவத்தன்மையுடன் தாழ்ந்த வட்டி வீதங்களும் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றுக் காலப்பகுதியில் நிதியியல் துறையின் சுமுகமான தொழிற்பாடுகளுக்கு வழிவகுத்தன. 2020இல் மத்திய வங்கி மூன்று மாத காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்ட நீண்ட கால நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்களூடாக உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு நீண்ட கால திரத்தன்மை வசதிகளை வழங்கியது. மேலும், தனியான முதனிலை வணிகர்களுக்கு மத்திய வங்கி, திரவத்தன்மை ஆதரவு வசதியை 15 நாட்கள் வரையிலான காலப்பகுதிக்கு நீடித்தது. கொவிட்-19 நோய்த்தொற்றினால்

அட்டவணை 8.15
பணச்சந்தை திரவத்தன்மையின் நாளாந்த மாற்றங்கள்




*மூலம்* : இலங்கை மத்திய வங்கி

பாதிக்கப்பட்ட வியாபாரங்களுக்கு சலுகை வட்டி வீதங்களில் கொடுகடன் வசதிகளை வழங்குவதற்காக, மத்திய வங்கியின் புதிய கடன் திட்டங்களின் அறிமுகமானது மத்திய வங்கியிலிருந்து நிதிகளைப் பெறுவதற்கான பிணையுறுதிகளை அடிப்படையாகக் கொண்ட தகைமைகளை விரிவுபடுத்தும் கருவியாக விளங்கியது. கொவிட்-19 பெருந்தொற்றுக் காலப்பகுதியில் விசேட திரவத்தன்மை தேவைப்பாடுகளைக் கொண்டிருந்த பொருளாதார ரீதியில் முக்கியத்துவம் பெற்ற துறைகளை நோக்கி போதுமான நிதிகள் வழிப்படுத்தப்படுவதனை உறுதிப்படுத்தும் பொருட்டும் கொடுகடன் பாய்ச்சல்களை உறுதிப்படுத்துவதனூடாக பொருளாதார நடவடிக்கைகளுக்குப் புத்துயிரளிப்பிற்கு ஆதரவளிப்பதற்காகவும் மத்திய வங்கி 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 83(1)இன் ஏற்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு புதிய கொடுகடன் திட்டங்களை அறிமுகப்படுத்தியது. இதற்கமைய, மத்திய வங்கி கட்டடவாக்கத்திலுள்ள அரசாங்கத்தின் ஒப்பந்தக்காரர்களுக்கும் வழங்குநர்களுக்கும் கடன் வழங்கும் நோக்கத்திற்காக, 180 நாட்கள் வரையிலான காலப்பகுதிக்கு ஆண்டொன்றிற்கு 1.00 சலுகை வட்டி வீதத்திலும் மருந்தாக்கல் மற்றும் அது போன்ற ஏனைய அடையாளம் காணப்பட்ட துறைகளுக்கு 4.00 சதவீதத்தினை விஞ்சாத வட்டி வீதத்திலும் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு நிதிகளை வழங்குவதற்காக ஒப்பந்தக்காரர் மற்றும் வழங்குநர்களுக்காக திரவத்தன்மை வசதி என்ற பெயரில் திரவத்தன்மை வசதியொன்றினை அறிமுகப்படுத்தியது. உரிமம்பெற்ற வங்கிகள் அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட வெளிநின்ற உண்டியல் கொடுப்பனவுகளுக்கான ஏற்பாவணக் கடிதம் கிடைக்கப்பெற்றதும் அரசாங்கத்தின் அத்தகைய ஒப்பந்தக்காரர்களுக்கும் வழங்குநர்களுக்கும் கொடுகடன் வசதிகளை வழங்குவதுடன், மத்திய வங்கி, தகைமையுடைய பிணையுறுதிகளாக திறைசேரி உண்டியல் மற்றும் திறைசேரி முறிகளினால் உத்தரவாதப்படுத்தப்பட்ட வாக்குறுதிச் சான்றிதழ்களை அத்தகைய உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளிடமிருந்து பெற்றுக்கொள்வதன் அடிப்படையில், மத்திய வங்கி உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு ஒப்பந்தக்காரர் மற்றும் வழங்குநர்களுக்கான திரவ வசதியின் கீழ் நிதிகளைப் பகிர்ந்தளிக்கும். 2020 திசெம்பர் இறுதியிலுள்ளவாறு, தகைமையுடைய கடன்பாட்டாளர்களுக்கு ஆதரவளிக்கும் பொருட்டு ஒப்பந்தக்காரர் மற்றும் வழங்குநர்களுக்கான திரவ வசதியின் கீழ் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு மத்திய வங்கியினால் ஏறத்தாழ ரூ.7.2 பில்லியன் பகிர்ந்தளிக்கப்பட்டது. மேலும், மாறாக, உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் உள்நாட்டு வியாபாரங்களுக்கு 4.00 சதவீதத்தினை விஞ்சாத வட்டியில் கடன்களை வழங்க வேண்டுமென்ற நிபந்தனைக்குட்பட்டு, மத்திய வங்கி பரந்த வீச்சிலான பிணையுறுதிகளின் வாக்குறுதிப் பத்திரத்திற்கெதிராக 1.00 சதவீதம் கொண்ட சலுகை வீதத்தில் சௌபாக்கியா கொவிட்-19 புத்துயிரளித்தல் வசதியின் கீழ் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு நிதிகளை வழங்கியது.

வரைபடம் 8.16
திறந்த சந்தைத் தொழிற்பாடுகள், துணைநில் வீதம் மற்றும் பணச்சந்தை வட்டி வீதங்கள்




*மூலம்* : இலங்கை மத்திய வங்கி

2020 திசெம்பர் இறுதியில் சௌபாக்கியா கொவிட்-19 புத்துயிரளித்தல் வசதியின் கீழ் ஏறத்தாழ ரூ.83.4 பில்லியன் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டது.

## உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை

**இவ்வாண்டுப்பகுதியில் ஐ.அ.டொலருக்கெதிராக இலங்கை ரூபா 2019 திசெம்பர் இறுதியில் ரூ.181.63 இலிருந்து 2020 திசெம்பர் இறுதியில் ரூ.186.41 இற்கு 2.6 சதவீதத்தினால் தேய்வடைந்தது.** தேர்தலுக்குப் பின்னரான பொருளாதார உறுதிப்பாட்டினைத் தொடர்ந்து 2020ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் நிரந்தரமாக இருக்கக்கூடிய செலாவணி வீதம் ஏறத்தாழ 181 மட்டத்தில் காணப்பட்டதெனினும், இது நீண்ட காலத்திற்கு நிலைபெற்றிருக்கவில்லை. ஏற்றுமதி நாணய மாற்றல்கள், சுற்றுலா தொடர்பான உட்பாய்ச்சல்கள் மற்றும் பணவனுப்பல்களின் குறைந்த மட்டங்கள் அதேபோன்று கொவிட்-19 பெருந்தோற்றினைத் தொடர்ந்து மூலதனச் சந்தைகளிலிருந்து வெளிநாட்டு முதலீடுகள் அதிகரித்தளவில் வெளியில் அனுப்பப்பட்டமை என்பனவற்றின் காரணமாக மாச்சு நடுப்பகுதியிலிருந்து செலாவணி வீதத்தின் மீதான அழுத்தம் அவதானிக்கப்பட்டதுடன் செலாவணி வீதம் ஏப்பிறலில் பெரும்பாலும் ரூ.200 மட்டத்தினை அடைந்தது. எனினும், இவ்வழுத்தமானது சந்தைக்கான புதிய விற்கும் - வாங்கும் வெளிநாட்டுச் செலாவணிப் பரஸ்பர பரிமாற்றல் ஏலங்களின் அறிமுகத்துடன் சேர்ந்து மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட மிதமான வெளிநாட்டுச் செலாவணித் தலையீடுகள் மற்றும் அரசாங்கத்தினாலும் மத்திய வங்கியினாலும் எடுக்கப்பட்ட கொள்கைப் பணிப்புரைகள் என்பனவற்றினூடாக தளர்த்தப்பட்டது. இவ்வழுத்தமானது 2020 செத்தெம்பர் இறுதிப்பகுதியில் படிப்படியாகத் தளர்த்தப்பட்ட போதும் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் இரண்டாவது

8

அலையின் தோற்றத்துடன் செலாவணி வீதத்தின் மீதான அழுத்தம் மீண்டும் அவதானிக்கப்பட்டமைக்கு இறக்குமதிகளின் பேரிலான வெளிநாட்டுச் செலாவணியின் வெளிப்பாய்ச்சல்களுடன் சேர்ந்த சந்தைக்கான வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்கள் குறைந்தமட்டத்தில் காணப்பட்டமை பங்கிலாபங்கள் மற்றும் வெளிநாட்டுச் செலாவணிக் கடன் மீள்கொடுப்பனவுகள் போன்ற வெளிநாட்டுச் செலாவணியின் வெளிநாட்டுப் பணவனுப்பல்களின் கட்டுப்பாடுகள் படிப்படியாகத் தளர்த்தப்பட்டமை போன்றன காரணங்களாக அமைந்தன. இச்சூழ்நிலையானது, உலகளாவிய தரமிடல் முகவர்களினால் இலங்கையின் தரமிடல் தொடர்ந்தும் குறைக்கப்பட்டமையினால் மேலும் தீவிரமடைந்தது. எனினும், வெளிநாட்டுச் செலாவணியின் மத்திய வங்கியின் மிதமான தலையீடுகள் மற்றும் மத்திய வங்கியினால் எடுக்கப்பட்ட பல கொள்கை வழிமுறைகள் என்பனவற்றின் காரணமாக செலாவணி வீதம் 2020 இறுதியில் ஏறத்தாழ 185 மட்டத்தல் காணப்பட்டது. மேலும், ஐ.அ.டொலருக்கெதிராக இலங்கை ரூபாவின் ஒட்டுமொத்தத் தேய்வுடன் இசைந்து செல்லும் விதத்தில் 2020 இறுதியில் தந்தி மாற்றல்களுக்கான வர்த்தக வங்கிகளின் சராசரி ஐக்கிய அமெரிக்க டொலரின் வாங்கும் மற்றும் விற்கும் செலாவணி வீதம் முறையே ரூ.184.12 ஆகவும் ரூ.189.18 ஆகவும் விளங்கிய வேளையில் 2019இல் இது தொடர்பில் ஒப்பிடத்தக்க வீதங்கள் முறையே ரூ.179.66 ஆகவும் ரூ.183.33 ஆகவும் காணப்பட்டன. அதேவேளை, 2020ஆம் ஆண்டுப்பகுதியில் இலங்கை ரூபா, யூரோ, ஸ்ரேலிங்க் பவுண், யப்பானிய யென் மற்றும் அவுஸ்திரேலியா டொலருக்கெதிராக தேய்வடைந்தது.

**2020ஆம் ஆண்டுப்பகுதியில் மத்திய வங்கி உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் தேறிய வாங்குநராகக் காணப்பட்டது.** செலாவணி வீதத்தில் மிகையான தளம்பல்களைக் குறைப்பதற்காக சந்தைக்கான வெளிநாட்டுச் செலாவணியின் விற்பனை மிதமானதாகக் காணப்பட்டமைக்கிடையிலும் நாட்டின் வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்கினைக் கட்டியெழுப்புவதற்காக சந்தையிலிருந்து வெளிநாட்டுச் செலாவணியினைக் கொள்வனவு செய்வதனை மத்திய வங்கி மீண்டும் ஆரம்பிக்கக்கூடியதாக இருந்தது. இதற்கமைய, 2020ஆம் ஆண்டுப்பகுதியில் மத்திய வங்கி ஐ.அ.டொலர் 685.4 மில்லியனை ஈர்த்துக் கொள்ளக்கூடியதாக இருந்ததுடன் ஐ.அ.டொலர் 402.9 மில்லியனை நிரம்பல் வழங்கக்கூடியதாக இருந்தமையின் மூலம் ஐ.அ.டொலர் 282.5 மில்லியன் கொண்ட தேறிய கொள்வனவொன்று உருவானது.

**2020ஆம் ஆண்டுப்பகுதியில், உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணி வங்கிகளுக்கிடையிலான சந்தையில் வர்த்தகப்படுத்தல் அளவுகள் 2019இன் அத்தகைய அளவுகளுடன் ஒப்பிடுகையில் 5.4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன.** வங்கிகளுக்கிடையிலான வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களின் மொத்த அளவு 2019இன் ஐ.அ.டொலர் 19.4 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2020 இறுதியில் ஐ.அ.டொலர் 18.4 பில்லியனாகக் காணப்பட்டது. இதனுடன் இசைந்து செல்லும் விதத்தில் வங்கிகளுக்கிடையிலான வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் நாளாந்த சராசரி அளவுகள் 2019இன் ஐ.அ.டொலர் 80 மில்லியனிலிருந்து 2020இல் ஐ.அ.டொலர் 77 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தன.

8

## அரச பிணையங்கள் சந்தை

**அரச பிணையங்களின் விளைவு வீதங்களில் காணப்பட்ட கீழ் நோக்கிய சீராக்கம் 2020ஆம் ஆண்டு முழுவதும் பொதுவாக அவதானிக்கப்பட்டது.** எதிர்பார்க்கப்பட்ட உபாய வழங்கல் ஏற்பாடுகளுடன் இசைந்து செல்லத்தக்க விதத்தில் வெளியிடப்பட்ட எதிர்வுகூறத்தக்க வழங்கல் நாட்காட்டி, மூலவளங்களின் கிடைப்பனவு, அதிகரித்த பணச் சந்தைத் திரவத்தன்மை என்பன 2020ஆம் ஆண்டின் தொடக்கப்பகுதியில் குறுங்கால அரச பிணையங்களின் விளைவு வீதங்கள் கீழ் நோக்கிச் சீராக்கப்படுவதற்குப் பங்களித்த காரணிகளாக விளங்கின. அதேவேளை, கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் மோசமான பொருளாதார தாக்கங்களை ஒழிப்பதற்காக எடுக்கப்பட்ட வழிமுறைகளை நோக்குகையில், குறிப்பாக, தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை நிலையினைத் தொடர்தல், சந்தையில் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளின் கிடைப்பனவுடன் இசைந்து செல்லும் விதத்தில் எதிர்பார்க்கப்பட்ட வழங்கல் ஏற்பாடுகள், முதலாந்தர ஏலங்களில் முன்வைக்கப்பட்ட திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளுக்கான ஏற்றுக்கொள்ளலுக்கான உயர்ந்தபட்ச விளைவு வீதங்களை வெளியிடுவதற்கான ஏற்பாடுகள் என்பன 2020இன் இரண்டாம் மற்றும் மூன்றாம் காலாண்டுப்பகுதியில் முதலாந்தரச் சந்தை விளைவு வீதங்களில் தொடர்ச்சியாக கீழ் நோக்கிய அசைவுகளைத் தோற்றுவித்தன. எனினும், கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் இரண்டாவது அலையின் தோற்றம் மற்றும்

வரைபடம் 8.17
2020 இல் ஐ.அ.டொலருக்கெதிரான ரூபாவின் அசைவு




மூலம் : இலங்கை மத்திய வங்கி

ஆண்டின் பிற்பகுதியில் காணப்பட்ட எதிர்க்கணியமான தரமிடல் நடவடிக்கைகள் என்பனவற்றின் காரணமாக 2020இன் நான்காம் காலாண்டுப்பகுதியில் விளைவு வீதங்களின் கீழ் நோக்கிய அசைவில் திரும்பலொன்று அரச பிணையங்களின் முதலாந்தர மற்றும் இரண்டாந்தரச் சந்தைகளில் அவதானிக்கப்பட்டது. இதன்படி, அடிப்படை அளவு குறியீடு 364 நாள் திறைசேரி உண்டியலின் முதலாந்தரச் சந்தை நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதம் 2019 திசெம்பர் இறுதியில் பதிவுசெய்யப்பட்ட 8.45 சதவீதத்திலிருந்து 2020 இறுதியில் 5.05 சதவீதத்திற்குக் குறைவடைந்த வேளையில் நடுத்தர காலத்திலிருந்து நீண்ட காலம் வரையிலான திறைசேரி முறிகள் உட்பட, ஏனைய அரச பிணையங்களின் முதலாந்தர சந்தை விளைவு வீதங்கள் 2020 இறுதியில் விளைவுகளில் கணிசமான குறைப்பினைப் பதிவுசெய்தன.

**இலங்கையின் நாட்டிற்கான பன்னாட்டு முறிகளுக்கான அதிகரித்த இரண்டாந்தரச் சந்தை விளைவுகளுடன் சேர்ந்து காணப்பட்ட சாதகமற்ற பன்னாட்டு மூலதனச் சந்தை நிலைமைகள் நாட்டிற்கான தரமிடல் நடவடிக்கைகள் தொடர்பில் தொடர்ச்சியாகக் காணப்படும் பதற்றங்கள், முன்னேற்பாட்டாளர்களினாலும் அபிவிருத்தியடைந்துவரும் பொருளாதாரங்களினாலும் வழங்கப்பட்ட பத்திரங்களுக்கு முதலீட்டாளர்களின் பொதுவான இடர்நேர்வு வெறுப்புத்தன்மை என்பன 2020இல் மரபுவழி மூலதனச் சந்தைகளிலிருந்து புதிய நிதிகளைத் திரட்டுவதனைக் கட்டுப்படுத்தின.** இதன் விளைவாக, கலப்பான நிதியிடல், வெளிநாட்டு ஒதுக்குகளைத் திரளவிடுதல் மற்றும் வெளிநாட்டுச் செலாவணியின் வெளிப்பாய்ச்சல்களை முகாமைப்படுத்தல் என்பனவற்றினூடாக வெளிநாட்டுப் பொறுப்புக்களைக் குறைப்பதற்கான உபாய நோக்குடன் 2020 ஒத்தோபரில் நாட்டிற்கான முதிர்ச்சியடைந்த பன்னாட்டு முறிகள் புதிய நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் வழங்கலை நாடாமல் தீர்ப்பனவு செய்யப்பட்டன. உள்நாட்டு வெளிநாட்டு நாணய நிதியிடல் துறையில், கணிசமானளவிற்குக் குறைவடைந்த கேள்வி இலங்கை அபிவிருத்தி முறிகளுக்கான திரவத்தன்மை அவதானிக்கப்பட்டதுடன், 2020இல் முதிர்ச்சியடைந்த ஐ.அ.டொலர் 952.8 மில்லியனுக்கெதிராக ஐ.அ.டொலர் 507.0 மில்லியன் மட்டுமே திரட்டப்பட்டன.

**நோய்த்தொற்று மற்றும் இலங்கையின் குறித்துரைக்கப்பட்ட கொடுகடன் தரமிடல் குறைக்கப்பட்டமை என்பனவற்றின் காரணமாக முன்னணி மற்றும் அபிவிருத்தியடைந்துவரும் பொருளாதாரங்களிலிருந்து வெளிநாட்டு முதலீடுகள் எடுப்பனவு செய்யப்படுகின்றமையினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் இலங்கை அரச பிணையங்கள் சந்தையிலிருந்து வெளிநாட்டு முதலீடுகளின் தேறிய வெளிப்பாய்ச்சல்கள் 2020இல் அவதானிக்கப்பட்டன.** இவ்வாண்டுப்பகுதியில் திறைசேரி முறிகள் மற்றும் திறைசேரி உண்டியல்களில் காணப்பட்ட வெளிநாட்டு முதலீடுகளின் மொத்தத் தேறிய வெளிப்பாய்ச்சல் ஐ.அ.டொலர் 552.7 மில்லியனாகக் காணப்பட்டது. 2020 இறுதியில் திறைசேரி முறிகள் மற்றும் திறைசேரி உண்டியல்களின் வெளிநின்ற வெளிநாட்டு உடமைகள் 2019 இறுதியின் ரூ.103.9 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.6.7 பில்லியனாக அமைந்து குறிப்பிடத்தக்கதொரு வீழ்ச்சியைப் பதிவுசெய்தது.

**அரசாங்கத்தின் நடுத்தரகாலப் படுகடன் முகாமைத்துவ உபாயத்தின் முக்கிய அம்சங்களில் ஒன்றான உள்நாட்டுப் படுகடனுக்கு வெளிநாட்டுப் படுகடனின் ஒரு பகுதியை மாற்றியதன் மூலம் மொத்தப் படுகடனுக்கான வெளிநாட்டுப் படுகடனின் பங்கின் குறைப்பு 2020இல் வெற்றிகரமானதாகக் காணப்பட்டது.** இதற்கமைய 2020இல் வெளிநாட்டுப் படுகடனின் பங்கு, 2019 திசெம்பர் இறுதியில் பதிவுசெய்யப்பட்ட 49.1 சதவீதத்திலிருந்த 2020 திசெம்பர் இறுதியில் 42.8 சதவீதத்திற்கு குறைவடைந்ததுடன், நடுத்தர காலத்தில் மொத்தப் பொதுப் படுகடன் ஏறத்தாழ மூன்றிலொரு பங்கிற்கு மேலும் குறைவடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. எனினும் நோய்த்தொற்றுக் காலப்பகுதியில் அரசாங்கத்தின் காசுப்பாய்ச்சல் தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்வதற்காக புதிய திறைசேரி உண்டியல்களையும் குறுங்கால திறைசேரி முறிகளையும் வழங்கியதன் முக்கிய காரணமாக நீண்ட காலப் படுகடனுடன் ஒப்பிடுகையில் குறுங்கால உள்நாட்டுப் படுகடன் இருப்பின் வெளிநின்ற தொகை பகுதியளவிற்கு அதிகரித்தது. இதன்படி, வெளிநின்ற மத்திய அரசாங்க உள்நாட்டு நாணயப் படுகடன் இருப்பின் முதிர்ச்சிக்கான சராசரிக் காலம் 2019 இறுதியின் 5.78 ஆண்டுகளிலிருந்து 2020 இறுதியில் 4.71 ஆண்டுகளுக்குக் குறைவடைந்தது.

**உயர்ந்தபட்ச விளைவு வீதத்தினை அறிவிப்புச் செய்வது அறிமுகப்படுத்தப்பட்டமையுடன் தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை நிலைமை சேர்ந்து கொண்டமையின் விளைவாக 2020 காலப்பகுதியில், உள்நாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட படுகடனை முன்னெப்பொழுதுமில்லாத குறைந்த விளைவுகளில் திரட்டுவது சாத்தியமாக இருந்தமையினால், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில், அரசாங்கம் கணிசமான தொகையினைச் சேமிப்பதற்கு வழிவகுத்தது.** திறைசேரி உண்டியல்களினதும் திறைசேரி முறிகளினதும் நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதம் 2019 உடன் ஒப்பிடுகையில் 2020இல் ஏறத்தாழ 300 அடிப்படைப் புள்ளிகளினால் குறைவடைந்தமையினை அவதானிக்க முடிந்தது. 2019இன் 10.74 சதவீதம் கொண்ட நிறையேற்றப்பட்ட சராசரி வீதத்தில் வழங்கப்பட்ட ரூ.798.0 பில்லியன் கொண்ட திறைசேரி முறிகளுடன் ஒப்பிடுகையில் 2020இல் 7.39 சதவீதம் கொண்ட நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதத்தில் ரூ.1,332.1 பில்லியன் தொகை கொண்ட

8

அட்டவணை 8.16
அரச பிணையங்களின் விளைவு வீதங்கள்

ஆண்டுக்கான சதவீதம்

| விடயம் | முதலாந்தரச் சந்தை | | இரண்டாந்தரச் சந்தை | |
|---|---|---|---|---|
| | 2019 | 2020 | 2019 | 2020 |
| திறைசேரி உண்டியல்கள் | | | | |
| 91 நாட்கள் | 7.45 - 9.55 | 4.51 - 7.55 | 7.40 - 9.79 | 4.50 - 7.54 |
| 182 நாட்கள் | 7.58 - 9.95 | 3.87 - 8.15 | 7.55 - 9.96 | 4.61 - 8.12 |
| 364 நாட்கள் | 8.11 - 10.99 | 4.13 - 8.61 | 8.04 - 10.91 | 4.80 - 8.57 |
| திறைசேரி முறிகள் | | | | |
| 2 ஆண்டுகள் | 9.79 - 10.85 | 5.47 - 5.86 | 8.46 - 11.16 | 5.16 - 8.94 |
| 3 ஆண்டுகள் | 9.65 - 10.72 | 5.72 - 9.33 | 8.86 - 11.42 | 5.59 - 9.38 |
| 4 ஆண்டுகள் | - | 6.32 - 9.39 | 9.37 - 11.53 | 6.02 - 9.59 |
| 5 ஆண்டுகள் | 9.83 - 11.58 | 6.50 - 9.81 | 9.56 - 11.58 | 6.30 - 9.81 |
| 6 ஆண்டுகள் | - | 6.57 - 8.59 | 9.79 - 11.64 | 6.37 - 9.89 |
| 8 ஆண்டுகள் | 10.24 - 11.30 | 7.07 - 9.99 | 9.85 - 11.69 | 6.63 - 9.99 |
| 10 ஆண்டுகள் | 10.23 - 11.73 | 9.99 | 9.94 - 11.87 | 6.84 - 10.05 |
| 15 ஆண்டுகள் | 10.59 | 7.84 | 10.11 - 12.01 | 7.13 - 10.18 |
| 20 ஆண்டுகள் | 10.29 - 10.68 | - | 10.23 - 12.12 | 7.15 - 10.25 |
| 30 ஆண்டுகள் | - | - | 10.36 - 12.15 | 7.61 - 10.52 |

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

திறைசேரி முறிகள் வழங்கப்பட்டன. மேலும், 2020இல் 5.82 சதவீதம் கொண்ட ஒட்டுமொத்த நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதத்துடன் ரூ.2,590.5 பில்லியன் கொண்ட திறைசேரி உண்டியல் வழங்கப்பட்டது. ஒப்பிடுகையில் 2019இல் 8.92 சதவீதம் கொண்ட ஒட்டுமொத்த நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதத்துடன் ரூ.1,719.3 பில்லியன் திறைசேரி முறிகள் வழங்கப்பட்டன.[2]

## பங்குரிமைச் சந்தை

**கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றினால் உருவாக்கப்பட்ட முன்னெப்பொழுதுமில்லாத சவால்களின் காரணமான கொழும்புப் பங்குச் சந்தை ஆண்டு முழுவதும் குறுங்கால தளம்பல்களை அனுபவித்தது.** சந்தையில் காணப்பட்ட மிகையான தளம்பல்களின் காரணமாக

அட்டவணை 8.17
திறைசேரி உண்டியல்களின் முதன்மைச் சந்தையின் (ஏலம்) நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதங்கள்

ஓராண்டுக்கான சதவீதம்

| ஆண்டு | முதிர்ச்சி | | | திரண்ட ஆண்டுச் சராசரி |
|---|---|---|---|---|
| | 91-நாட்கள் | 182-நாட்கள் | 364-நாட்கள் | |
| 2016 | 8.26 | 9.23 | 10.20 | 9.38 |
| 2017 | 9.01 | 9.80 | 10.07 | 9.77 |
| 2018 | 8.40 | 8.58 | 9.68 | 9.36 |
| 2019 | 8.15 | 8.44 | 9.40 | 9.06 |
| 2020 | 5.93 | 5.72 | 6.37 | 6.09 |

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

2 ஒட்டுமொத்த நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதமானது நிருவாக ரீதியாக அறிவுறுத்தப்பட்ட வழங்கல் செலவு உட்பட, மொத்தச் சராசரி கடன்பாட்டுச் செலவினையும் உள்ளடக்குகிறது.

சுட்டெண்ணினை அடிப்படையாகக் கொண்ட சுற்றோட்ட நிறுத்தி பல தடவைகள் செயற்படுத்தப்பட்டது. 2020 மே 12ஆம் நாளன்று அனைத்துப் பங்கு விலைச் சுட்டெண் கடந்த ஒரு தசாப்த காலத்தில் மிகக் குறைந்த புள்ளியினை பதிவுசெய்ததெனினும், 2020 இறுதியில் 10.5 சதவீதம் கொண்ட முன்னெப்பொழுதுமில்லாத வளர்ச்சியைப் பதிவுசெய்ததுடன் 2014இற்குப் பின்னர் ஏற்பட்ட மிக உயர்ந்த வருடாந்த அதிகரிப்பு இதுவாகும். ஸ்டான்டட் அன்ட் புவர் இலங்கை 20 சுட்டெண் இதையொத்த போக்கினைக் காட்டியதுடன், மே நடுப்பகுதியிலிருந்து மீட்சியடைந்திருந்தாலும் இது இவ்வாண்டுப்பகுதியில் 10.2 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைப் பதிவுசெய்தது.

**பங்குச் சந்தைக் குறிகாட்டிகளில் பெரும்பாலானவை 2020 மே நடுப்பகுதியிலிருந்து மேம்பாடொன்றினைக் காட்டின.** 2020ஆம் ஆண்டுப்பகுதியில் சந்தை மூலதனமயமாக்கல் 2019 உடன் ஒப்பிடுகையில் 3.8 சதவீதத்தினால் அதிகரித்து ரூ.2,960.6 பில்லியனாக விளங்கியது. 2020ஆம் ஆண்டுப்பகுதியில் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை அதிவிசேடமான சராசரி நாளாந்த மொத்தப் புரள்வொன்றினைப் பதிவுசெய்தது. இது 2019இல் ரூ.711.2 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.3.2 பில்லியனாக விளங்கியது. 2020இல் பதிவுசெய்யப்பட்ட நாளாந்தச் சராசரிப் புரள்வு, 2011இற்குப் பின்னர் ஓராண்டில் பதிவுசெய்யப்பட்ட மிக உயர்ந்த புரள்வாகக் காணப்படுகின்றது. இதற்கு, தற்பொழுது காணப்படுகின்ற தாழ்ந்த வட்டி வீத அமைப்பின் விளைவாக உள்நாட்டு முதலீட்டாளர்களின் முன்னுரிமை பங்குரிமை முதலீடுகளை நோக்கிப் பெயர்ந்தமையும் கவர்ச்சிகரமான சந்தை மதிப்பீடுகளுமே காரணமாகும். இலங்கை அதன் பிராந்திய நாடுகளிடையே மிகக் குறைந்த விலை வருவாய் விகிதத்தினைப் பதிவுசெய்யும் ஒரு நாடாகும். விலை வருவாய் விகிதமும் ஏட்டுப்பெறுமதிக்கான விலையும் 2020 இறுதியில் முறையே 11.3 ஆகவும் 1.1 விளங்கின.

**எனினும், தேறிய வெளிநாட்டு வெளிப்பாய்ச்சல்கள் தொடர்ந்தும் கரிசனைக்குரியனவாகவே காணப்படுகின்றன.** மொத்தப் புரள்வு தொடர்பான வெளிநாட்டுப் பங்களிப்புக்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் குறைவாகவே காணப்படுகின்றன. மொத்தப் புரள்வில் முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட 36.4 சதவீதத்திற்கெதிராக 19.8 சதவீதம் மாத்திரமே வெளிநாட்டுக் கொள்வனவுகளிலிருந்து உருவாக்கப்பட்டது. 2020ஆம் ஆண்டுப்பகுதியில் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை இரண்டாந்தரச் சந்தைகளிலிருந்து 2019ஆம் ஆண்டுப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூ.11.7 பில்லியன் கொண்ட வெளிப்பாய்ச்சல்களுடன் ஒப்பிடுகையில் ரூ.51.3 பில்லியன் கொண்ட வெளிநாட்டு வெளிப்பாய்ச்சல்களைப் பதிவுசெய்தது.

8

வரைபடம் 8.18
திறைசேரி முறிகள் மற்றும் திறைசேரி உண்டியல்களின் ஆரம்ப சந்தையின் நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதங்கள் (ஆண்டுக்கான சதவீதம்)




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 8.19
விலைச்சுட்டிகளின் அசைவும் சந்தை மூலதனமாக்கலும்




*மூலம்:* கொழும்பு பங்குச் சந்தை

**பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு, கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையுடன் சேர்ந்து இவ்வாண்டுப்பகுதியில் பல்வேறு முன்னேற்றகரமான வழிமுறைகளை அறிமுகப்படுத்தியது.** பட்டியலிடல் விதிகளுக்கான திருத்தங்கள், மூன்று அடுக்கப்படுத்தப்பட்ட சுற்றோட்ட நிறுத்தி அமைப்பு, எண்ணிம மயப்படுத்தல் மற்றும் உண்மைச் சொத்து முதலீட்டு நம்பிக்கைகள் போன்ற புதிய சாதனங்கள் ஆரம்பிக்கப்பட்டமை போன்றவை சந்தையின் அபிவிருத்தியினையம் சுமுகமான தொழிற்பாடுகளையும் உறுதிப்படுத்துவதற்காக நடைமுறைப்படுத்தப்பட்ட சில புதிய வழிமுறைகளாகும்.

### கூட்டாண்மைப் படுகடன் பிணையங்கள் சந்தை

**வர்த்தகப் பத்திரங்கள் சந்தை 2019 உடன் ஒப்பிடுகையில் 2020இல் செயற்பாடு நிறைந்ததாகக் காணப்பட்டது.** 2020ஆம் ஆண்டுப்பகுதியில் உரிமம்பெற்ற வங்கிகளின் ஆதரவுடன் வர்த்தகப் பத்திரங்களின் வழங்கலூடாகத் திரட்டப்பட்ட தொகை 2019இன் வழங்கலூடாகத் திரட்டப்பட்ட ரூ.4.2 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.4.5 பில்லியனாகக் காணப்பட்டது. இவ்வாண்டுப்பகுதியில் வர்த்தகப் பத்திரங்களின் வட்டி வீதங்கள் முன்னைய ஆண்டில் அறிவிக்கப்பட்ட 13.00 - 16.25 சதவீத வீச்சுடன் ஒப்பிடுகையில் 6.50 - 15.50 சதவீதம் வரையான வீச்சில் வேறுபட்டன.

**கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்று மற்றும் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை ஏழு வார காலப்பகுதிக்குத் தற்காலிகமாக மூடப்பட்டிருந்தமை என்பனவற்றின் காரணமாக கூட்டாண்மை முறிச் சந்தையின் நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டன.** 2020இல் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் 8 கம்பனிகளினால் வழங்கப்பட்ட கூட்டாண்மைத் தொகுதிக் கடன்களின் 16 ஆரம்பப் பங்கு வழங்கல்களினூடாக 2019இன் திரட்டப்பட்ட ரூ.57.9 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.21.9 பில்லியன் திரட்டப்பட்டது. நிலையான வட்டி வீதங்களுடன் கூடிய தொகுதிக்கடன்கள் முன்னைய ஆண்டின் 12.30 - 15.50 சதவீத வீச்சுக்களுடன் ஒப்பிடுகையில் 9.00 - 13.25 சதவீத வீச்சிற்கிடையில் காணப்பட்டன.

## 8.5 அபிவிருத்தி நிதி மற்றும் நிதியினைப் பெறுவதற்கான அணுகுவழிகள்

மத்திய வங்கி பல்வேறு மீள்நிதியிடல், வட்டி உதவுதொகை மற்றும் கொடுகடன் உத்தரவாதத் திட்டங்களைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றமைக்கும் புறம்பாக, **இலங்கை அரசாங்கத்தின் ஆலோசனையுடன் கொவிட்-19 இனால் பாதிக்கப்பட்ட நுண்பாக சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதற்காக பல்வேறுபட்ட தொழிற்படு மூலதனக் கடன் திட்டங்களை 2020இல் நடைமுறைப்படுத்தியது.**

***கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றினால் ஏற்பட்ட நிலைமைகளைச் சமாளிக்க இலங்கை மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட அதிவிசேட நடவடிக்கைகள்:*** இலங்கை மத்திய வங்கி, சுயதொழில் புரியும் தனிப்பட்டவர்கள் உட்பட, கொவிட்-19இனால் பாதிக்கப்பட்ட நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கு 6 மாத காலச் சலுகைக் காலம் உட்பட, 24 மாதங்களில் மீளச் செலுத்தப்பட வேண்டிய ஆண்டிற்கு 4.00 சதவீத வட்டியில் தொழிற்படு மூலதனக் கடன்களை வழங்கும் பொருட்டு சௌபாக்கியா கொவிட்-19 புத்தியிரளித்தல் வசதியை மூன்று கட்டங்களில் நடைமுறைப்படுத்தியது.

**சௌபாக்கியா கொவிட்-19 புத்துயிரளித்தல் வசதியின் கட்டம் - I இன் கீழ், மத்திய வங்கி நாணய விதிச் சட்டத்தின் 88ஆம் பிரிவின் நியதிகளில் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு மீள்நிதியிடல் வசதிகளை வழங்கியது.** சௌபாக்கியா கொவிட்-19 புத்துயிரளித்தல்

8

வரைபடம் 8.20
கொழும்புப் பங்கு பரிவர்த்தனையில் வெளிநாட்டுப் பங்கேற்பு




*மூலம்* : கொழும்பு பங்குப் பரிவர்த்தனை

வசதியின் கட்டம் - II இன் கீழ் மத்திய வங்கி, நாணய விதிச் சட்டத்தின் 83ஆம் பிரிவின் நியதிகளின் நாணயச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட பிணையுறுதிகளுக்கெதிராக பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு கடன்களை வழங்கியது. சௌபாக்கியா கொவிட்-19 புத்துயிரளித்தல் வசதியின் கட்டம் - III இன் கீழ் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் வியாபாரங்களுக்கும் அத்துடன்/ அல்லது தனிப்பட்டவர்களுக்கும் அவற்றின் சொந்த நிதிகளைப் பயன்படுத்தி 4.00 சதவீத வட்டியில் கடன்களை வழங்க வேண்டுமென எதிர்பாக்கப்படுகின்றதுடன் மத்திய வங்கி வழங்கப்பட்ட கடன்கள் மீது 50 - 80 சதவீத வீச்சில் கொடுகடன் உத்தரவாதங்களை வழங்குவதுடன் நாணய விதிச் சட்டத்தின் 108ஆம் பிரிவின் நியதிகளில் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் அவற்றின் கொடுகடன் இடர்நேர்வுகளை உள்ளடக்கும் விதத்திலும் நிதியத்தின் செலவுகளையும் பெற்றுக்கொள்ளும் விதத்தில் ஆண்டொன்றிற்கு 5.00 சதவீத வட்டி உதவுதொகையினையும் வழங்கும்.

**சௌபாக்கியா கொவிட்-19 புத்துயிரளித்தல் வசதியின் கீழ் 2020 திசெம்பர் இறுதியில் 62,573 நன்மைபெறுநர்களுக்காக மத்திய வங்கியினால் ஒப்புதலளிக்கப்பட்ட தொழிற்படு மூலதனக் கடன்களின் மொத்தப் பெறுமதி ரூ.179.3 பில்லியனாகக் காணப்பட்டது.** மத்திய வங்கியினால் ஒப்புதலளிக்கப்பட்ட மொத்தத் தொழிற்படு மூலதனக் கடனில் ஏறத்தாழ 52 சதவீதம் பணிகள் துறைக்கு வழங்கப்பட்ட வேளையில் ஏறத்தாழ 33 சதவீதமும் 15 சதவீதமும் கைத்தொழில் துறையிலும் வேளாண்மைத் துறையிலுமுள்ள சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கும் தனிப்பட்டவர்களுக்கும் வழங்கப்பட்டன.

**நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கு உதவியளிக்க மேற்கொள்ளப்பட்ட வேறு நடவடிக்கைகள்:** மத்திய வங்கி பெருந்தோட்ட அமைச்சு மற்றும் இலங்கை தேயிலைச் சபை என்பனவற்றின் ஒத்துழைப்புடன் தேயிலைத் துறைக்காக வழங்கல் சங்கிலி மீள்வலுவூட்டல் திட்டமான தொழிற்படு மூலதனக் கடன் திட்டத்தினை நடைமுறைப்படுத்தியது. மேலும், மத்திய வங்கி, உயிர்த்த ஞாயிறு தாக்குதலினால் பாதிக்கப்பட்ட நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்காக, நிதி அமைச்சின் ஒத்துழைப்புடன் தொழிற்படு மூலதனத் தேவைப்பாடுகளுக்காக கொடுகடன் உத்தரவாதக் கடன் திட்டமொன்றினை நடைமுறைப்படுத்தியது.

**புதிய அனைத்தையுமுள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டம் மற்றும் சௌபாக்கியா கடன் திட்டங்களின் கீழ் வழங்கப்பட்ட கடன்கள் மீது விதிக்கப்படட வருடாந்த வட்டி வீதங்கள் 4.00 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டன.** சுயதொழில் வாய்ப்பு ஊக்குவிப்பு முன்னெடுப்புக் கடன் திட்டம் மற்றும் சுவசக்தி கடன் திட்டம் என்பனவற்றின் கடன்பாட்டாளரொருவருக்கு வழங்கப்படட உயர்ந்தபட்ச கடன்தொகைகளும் அதிகரிக்கப்பட்டன.

**நிதியியல் வசதிக்குட்படுத்துதல்:** உலக வங்கிக் குழுமத்தின் பன்னாட்டு நிதிக் கூட்டுத்தாபனத்தின் உதவியுடன் அபிவிருத்தி செய்யப்பட்ட தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயம் உத்தியோகபூர்வமாக 2021 மாச்சு 04ஆம் திகதியன்று வெளியிடப்பட்டுள்ளதுடன், நாட்டின் நிதியியல் வசதிக்குட்படுத்தல் முயற்சிகளை இணைப்பதற்காக தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்திற்கான செயலகமும் நிறுவப்பட்டுள்ளது. மத்திய வங்கியின் நிதியியல் வசதிக்குட்படுத்தல் குறிக்கோள்களுடன் இசைந்துசெல்லும் விதத்தில் பிரதேச அலுவலகங்களின் நடவடிக்கைகளை வலுப்படுத்தும் நோக்குடன் 2020 யூலையில் மத்திய வங்கியின் ஆறு பிரதேச அலுவலகங்களும் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தின் கீழ் கொண்டு வரப்பட்டன.

**நிதியியல் எழுத்தறிவு:** இலங்கை மத்திய வங்கி வழமையான நிதியியல் துறைக்கு வெளியே இருக்கின்றவர்களை இலக்காகக் கொண்டு நிதியியல் அறிவினை மேம்படுத்துவதற்காக தொடர்ந்தும் பல நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொண்டது. 2020ஆம் ஆண்டுப்பகுதியில் நிதியியல் அறிவு, தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி மற்றும் தேர்ச்சி அபிவிருத்தி, நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுடன் தொடர்பான பிரச்சனைகள் என்பன மீது 183 நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன. 183 விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களில் ஆறு பிரதேச அலுவலகங்கள் மொத்தமாக 157 நிகழ்ச்சித்திட்டங்களை நடத்திய வேளையில், பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் 3 பயிற்சியாளர் பயிற்சியளித்தல் திட்டம் உட்பட 26 நிகழ்ச்சிதிட்டங்களை நடத்தியது.

## 8.6 நிதியியல் உட்கட்டமைப்பு

### கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் முறைமை

மத்திய வங்கியானது மிகச் சிறந்த முறையில் தொழிற்படுகின்ற தேசிய கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமையொன்றினூடாகத் தனிப்பட்டவர்களினதும் நிறுவனங்களினதும் கொடுப்பனவுத் தேவைகளுக்கும் நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளுக்கும் வெற்றிகரமாக வசதியளிக்கும் பொருட்டு நாட்டில் காத்திரமான கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு உட்கட்டமைப்பினைத் தொடர்ந்தும் பேணியது. கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றுக்கு மத்தியிலும் மத்திய வங்கி இடர்நேர்வுகளை வினைத்திறனாகக் கட்டுப்படுத்தி நாட்டில் தடங்கலற்ற சுமுகமான கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுப் பணிகளைத் தொடர்ந்தும் உறுதிப்படுத்தியது.

நாட்டில் ஒரேயொரு பாரிய பெறுமதிகளுக்கான இலத்திரனியல் கொடுப்பனவு முறைமையாகவும் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையாகவும் விளங்கும் லங்காசெட்டில் முறைமை மற்றும் லங்காசெகுயர் முறைமை பரிசீலனைக்குரிய காலப்பகுதியில் காத்திரமான விதத்திலும் வினைத்திறனுடனும் செயற்பட்டது. மீளாய்வுக்குரிய ஆண்டில் அதேநேர மொத்தத் தீர்ப்பனவுக் கொடுக்கல்வாங்கல்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 28.1 சதவீதமான அதிகரிப்பினைப் பதிவுசெய்தது. பெறுமதி நியதிகளில், மொத்தக் காசல்லாக் கொடுப்பனவுகளில் அதேநேர மொத்தத் தீர்ப்பனவுக் கொடுப்பனவகள் 2020இல் 90.9 சதவீதத்திற்கு வகைகூறின. மத்திய வங்கி, திரவத்தன்மைப் பிரச்சனைகளை அனுபவிக்கின்ற பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு அரச பிணையங்களின் பிணையுறுதிக்கெதிராக வட்டியற்ற ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதியைத் தொடர்ந்தும் வழங்கியது. ஆய்விற்குரிய காலப்பகுதியில், அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையின் பங்கேற்பாளர்களினால் பயன்படுத்தப்பட்ட ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதியின் நாளாந்தச் சராசரி ரூ.66.0 பில்லியன் கொண்ட சராசரிப் பெறுமதியில் பதிவுசெய்யப்பட்டது. ஆய்விற்குரிய ஆண்டில் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையின் கொடுக்கல்வாங்கலொன்றிற்கான உயர்ந்தபட்சக் கட்டணம் ரூ.1,000.00 இலிருந்து ரூ.400.00 இற்குக் குறைக்கப்பட்டது. அதே காலத்தில், அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையின் தொழிற்பாட்டாளர் என்ற ரீதியில் இலங்கை மத்திய வங்கியினால் விதிக்கப்பட்ட தொழிற்பாட்டாளர் கட்டண கொடுக்கல்வாங்கலொன்றிற்கு ரூ.450.00 இலிருந்து ரூ.200.00 இற்குக் குறைக்கப்பட்டது.

**2020 இறுதியில், லங்காசெகுயரில் வைத்திருக்கப்பட்ட பத்திரங்களற்ற பிணையங்களின் மொத்தப் பெறுமதி ரூ.7,340.9 பில்லியனாக (முகப்புப் பெறுமதி) விளங்கியது.** இது, திறைசேரி உண்டியல்கள் ரூ.1,621.4 பில்லியனையும் ரூ.5,719.5 பில்லியன் கொண்ட திறைசேரி முறிகளையும் உள்ளடக்கியிருந்தது.

**2020ஆம் ஆண்டுப்பகுதியில், லங்காகிளியர் (பிறைவேற்) லிமிடெட்டினால் தொழிற்படுத்தப்படும் நாட்டின் காசோலைத் தீர்ப்பனவு முறைமை சுமுகமாகத் தொழிற்பட்டது.** 2019 உடன் ஒப்பிடுகையில் காசோலைத் தீர்ப்பனவு முறைமையூடாகத் தீர்ப்பனவு செய்யப்பட்ட காசோலைகளின் மொத்த அளவு 28.1 சதவீத எதிர்க்கணிய வளர்ச்சியைப் பதிவுசெய்த வேளையில் மொத்தப் பெறுமதி 2020இல் 24.0 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

**ஆய்விற்குரிய காலப்பகுதியில் குறைந்த பெறுமதியினைக் கொண்ட தொகை வடிவிலான கொடுப்பனவுகளுக்கு முக்கியமாக வசதியளிக்கின்ற இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமையானது கொடுப்பனவுகளின் அளவு மற்றும் பெறுமதி ஆகிய இரண்டு நியதிகளிலும் முறையே 0.6 சதவீதத்தினையும் 7.2 சதவீதத்தினையம் பதிவுசெய்தது.**

**பொதுவான அட்டை மற்றும் கொடுப்பனவு ஆளியின் முதற் கட்டமான பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆளி, பொதுவான தன்னியக்கக்க கூற்றுப் பொறி ஆளியின் வலையமைப்புடன் இணைக்கப்பட்டுள்ள எந்தவொரு தன்னியக்கக் கூற்றுப் பொறியிலிருந்தும் காசினை எடுப்பனவு செய்வதனையும் நிலுவை விசாரணை செய்வதனையும் இயலுமைப்படுத்தியது.** 2020இல் பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆளியின் கொடுக்கல்வாங்கல்களின் அளவும் பெறுமதியும் முறையே 48.9 மில்லியனுக்கு 3.2 சதவீதத்தினாலும் முறையே 19.2 சதவீதத்தினால் ரூ.506.9 பில்லியனுக்கும் அதிகரித்தன. 2020 இறுதியிலுள்ளவாறு 30 நிதியியல் நிறுவனங்கள் பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆளியுடன் ஒருங்கிணைக்கப்பட்டிருந்தன. தமது சொந்த அட்டை முகாமைத்துவ முறைமையினைத் தொழிற்படுத்துவதற்கான இயலாற்றலைக் கொண்டிராத நிதியியல் நிறுவனங்களுக்குப் பணிகளை வழங்குவதற்காக 2015இல் ஆரம்பமான பகிரப்பட்ட தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆளி இரண்டு உறுப்பினர்களைக் கொண்டிருந்ததுடன் ஆய்விற்குரிய காலப்பகுதியில் அதன் தொழிற்பாடுகளைத் தொடர்ந்தும் சுமுகமாக மேற்கொண்டது.

**பொதுவான அட்டை மற்றும் கொடுப்பனவு ஆளியின் மற்றொரு கட்டமான பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி அதேநேர அடிப்படையில் உறுப்பினர் நிறுவனங்களிடையே சில்லறை நிதிய மாற்றல்களை வசதிப்படுத்துவதற்காக 2015இல் நடைமுறைப்படுத்தப்பட்டது.** பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியின் கொடுக்கல்வாங்கல் அளவு 86.8 சதவீதத்தினால் 27.6 மில்லியனுக்கு அதிகரித்த வேளையில், பொதுவான

சிறப்புக்குறிப்பு 09

## தொழில்நுட்பத்தினைத் பின்பற்றுதல் மற்றும் இணையப் பாதுகாப்பு மீது கொவிட்-19இன் தாக்கங்கள்

### அறிமுகம்

கடந்த ஆண்டுகாலப்பகுதியில் கொவிட்-19 உலகம் முழுவதிலுமுள்ள மக்களின் வாழ்வியல் முறையில் முன்னொருபோதுமில்லாத மாற்றத்தினைத் தோற்றுவித்திருக்கிறது. தகவல் தொழில்நுட்பம் போன்ற சேவைகளுக்கான கேள்வி துரிதமாக அதிகரித்தமையின் காரணமாக மரபுரீதியான பொருட்களுக்கும் சேவைகளுக்குமான கேள்வி குறிப்பிடத்தக்களவு மாற்றமடைந்தது. இப்புதிய மாற்றங்களுக்கு ஏற்பிசைந்ததன் மூலம் சாதகமான, பாதகமான தாக்கங்கள் இரண்டினையும் கொண்ட புதிய சந்தைகளும் வாய்ப்புகளும் உருவாகுவதற்கு வழியமைக்கப்பட்டது. இதற்குச் சிறந்த உதாரணங்களாக இணையப் பாதுகாப்பும் , இணையக் குற்றங்களும் அமையக்கூடும். இவ்விரு முக்கிய விடங்களும் அநேகமான நிறுவனங்களின் கவனத்தினை மாத்திரமின்றி பொதுமக்களின் கவனத்தையும் ஈர்த்துள்ளன.

### புதிய தகவல் தொழில்நுட்பவியலை அடிப்படையாகக் கொண்ட பொருளாதார நடவடிக்கைகள்

உலகளாவிய நோய்த்தொற்றின் காரணமாக நாடுகளினால் பின்பற்றப்பட்ட பயணக் கட்டுப்பாடுகள் மரபுவழி பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்வதில் பல புதிய போக்குகள் தோற்றம்பெறுவதற்கு வழியமைத்திருக்கின்றன. தகவல் தொழில்நுட்பத்தின் மீதும் அதனுடன் தொடர்பான பணிகள் மீதும் பெருமளவிற்குத் தங்கியுள்ள முக்கிய போக்குகளில் சில கீழே பட்டியலிடப்பட்டுள்ளன.

### அ) வீட்டிலிருந்து பணியாற்றுதல்

உலகளாவிய நோய்த்தொற்றின் முதல் அலையின் போது, அதிலிருந்து தோன்றுகின்ற புதிய சூழ்நிலைகளை எதிர்கொள்வதற்கு அநேகமான நாடுகள் முன் அனுபவத்தினையோ அல்லது தயார்நிலையினையோ கொண்டிருக்கவில்லை. வைரஸின் பரவலைக் கட்டுப்படுத்தும் பொருட்டு, நாடுகளிடையே உடனடியான பதிலிறுப்பு நடவடிக்கையாக வேறுபட்ட அளவிலான பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. அவசரமானதொரு வழிமுறையாக பணியிடங்களிலிருந்து ‘ வீடுகளிலிருந்து பணியாற்றும்’ ஏற்பாடுகளுக்கு அவசரமாக மாறவேண்டிய விதத்தில் நடவடிக்கைகளை மேற்கொள்வது அவசியமாயிற்று. இத்தகைய பணி ஏற்பாடுகளுக்கு பொருத்தமான உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய விதத்தில் பணியாளர்களோ அல்லது நிறுவனங்களோ போதுமான வசதிகளைக் கொண்டிருக்கவில்லை. இத்தகைய அருமைத் தன்மை மடிக்கணனி போன்ற கருவிகளைப் பொருத்தவரையில் மட்டுமன்றி அமைப்பியல் முறைமைகள் மற்றும் வலையமைப்புக்களை அனுகுவதிலும் அவதானிக்கப்பட்டன. மின்னஞ்சல் மற்றும் இணையத்தளங்களின் அதிகரித்த பயன்பாட்டிற்குப் புறம்பாக, அநேகமான நிறுவனங்கள் இந்நோக்கத்திற்காக தனிப்பட்ட மெய்நிகர் வலையமைப்பினை உடனடியாகப் பின்பற்றத் தொடங்கின. மேலும், அலுவலகப் பணிக்காக தனிப்பட்ட சாதனங்களும் மிகவும் குறுகிய நேரத்தினுள் பாரியளவில் பயன்படுத்தப்பட்டு வந்தன. இத்தனிப்பட்ட சாதனங்களில் அநேகமானவை தொழில்துறையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தர நியமங்களுக்கமைவாக போதியளவு பாதுகாப்புமிக்கனவாக இருக்கவில்லை.

### ஆ) இணையவழிக் கற்றல்

கல்வி நிறுவனங்கள் தற்காலிகமாக மூடப்பட்டிருந்தன. அதற்கமைவாக அனைத்துக் கல்வி நடவடிக்கைகளும் கல்வி, ஷூம் மற்றும் மைக்ரோசொவ்ற் டீம்ஸ் போன்ற பல்வேறு இணையவழி கற்றல் தளங்களூடாக ஆசிரியர்களும் விரிவுரையாளர்களும் வகுப்புக்களை நடாத்திய இணையவழி ஊடகமொன்றிற்கு இடம்மாறியது. ஒப்படைகளும் ஏனைய கற்கைநெறி சார்ந்த பயிற்சிகளும் மாணவர்களுக்கு கிடைக்கத்தக்கதாகவிருந்த இணையவழி கற்றல் தளங்களை அல்லது அதனையொத்த வழிவகைகளைப் பயன்படுத்தி பகிரப்பட்டன. முன்பள்ளி மாணவர்களும் கூட 30 நிமிடங்கள் தொடக்கம் 1 மணித்தியாலம் கொண்ட இணையவழி கற்றல் வகுப்புக்களில் கற்கத் தொடங்கினர். இது அவர்களது பெற்றோரின் அதிக கட்டுப்பாடு, மேற்பார்வையின் கீழ் முன்னரைவிட நீண்ட நேரங்களுக்கு இணையம் இயலச்செய்யப்பட்ட செல்லிடத் தொலைபேசி சாதனங்களைப் பயன்படுத்துவதற்கான வாய்ப்பினையும் மாணவர்களுக்கு அளித்தது.

### இ) இ-வணிகம்

மரபு ரீதியான விற்பனைகளில் தங்கியிருந்த பல வணிகர்கள் இணையவழி விற்பனைத் தளங்களைத் தேர்ந்தெடுத்தனர். அதேவேளை, வாடிக்கையாளர்களும் இணையவழிக் கொள்வனவுகளை நாடி விரைவாக நகர்ந்தனர். முடக்கலுடன் கொவிட்-19இன் துரிதப் பரவலைத் தடுப்பதற்கு பொதுமக்களின் பயணங்கள் கட்டுப்படுத்தப்பட்டதனால் வெளியிடங்களுக்குச் செல்வது கட்டுப்படுத்தப்பட்டதனால் இணையவழிக் கொள்வனவுகளுக்கு மக்கள் அதிகளவில் மாறிக்கொண்டனர். இவ்வாறு திடீரென உயர்வடைந்த கேள்வியினை சமாளிப்பதற்கு முறைமைகள் தயாரக இருக்கவில்லை என்பதுடன் இது, பல முறைமைகள் முறிவடைவதற்கு அல்லது செயலற்றுப்போவதற்கு வழிவகுத்து வாடிக்கையாளர் மத்தியில் அதிக ஏமாற்றத்தினையும் ஏற்படுத்தியது. மேலும், நோய்த்தொற்று பரவல் அச்சத்தினைக் கருத்திற்கொண்டு பௌதீக ரீதியாக பணத்தைப் பயன்படுத்தலில் குறைப்பொன்று காணப்பட்டதுடன் ஊக்கமிழந்திருந்ததுடன் இதன் காரணமாக இணையவழிக் கொடுக்கல்வாங்கல்களை நோக்கி நகரும் தன்மையும் காணப்பட்டது.

### ஈ) இணையவழி நிதியியல் பணிகள்

அநேகமான வங்கிகளும் நிதியியல் நிறுவனங்களும் வங்கிக் கிளைகளுக்கு அவர்களது வாடிக்கையாளர்கள் வருகைதருவதைக் குறைப்பதற்கு இணையவழி நிதியியல் பணிகளை பயன்படுத்துவதற்கு தமது வாடிக்கையாளர்களை ஊக்குவித்தன. இது, இணையவழி வங்கித்தொழில் வலைத்தளங்களினதும் செல்லிடத் தொலைபேசி செயலிகளினதும் அதிகரித்த உபயோகத்தினைத் தோற்றுவித்திருந்தது. குறைந்தளவான

8

தகவல் தொழில்நுட்ப அறிவுடன் கூடிய மக்களும் கூட அவர்களது நாளாந்தத் தேவைகளுக்கு இவ்விணையவழி நிதியியல் பணிகளைப் பயன்படுத்த வேண்டியிருந்ததுடன் நிதியியல் சேவைகளின் பரந்தளவிலான அடைவிற்கு நிதியியல் நிறுவனங்கள் சில கட்டுப்பாடுகளைத் தளர்த்தவேண்டியிருந்தது.

**உ) பயணக் கட்டுப்பாடுகளின் காரணமாக மெய்நிகர் கூட்டங்கள் மற்றும் மாநாடுகள்**

நோய்த்தொற்று பயணக் கட்டுப்பாடுகளையும் சமூக இடைவெளி விதந்துரைப்புக்களையும் தூண்டியமையின் காரணமாக, அநேக நிதி நிறுவனங்கள் தடங்கலற்ற தன்மை அதிகரித்த அனுகும் தன்மை மற்றும் வசதிக்குட்படுத்தல் என்பனவற்றை உறுதிப்படுத்துவதற்காக நேரடியாகப் பங்குபற்றும் கூட்டங்கள் மற்றும் மாநாடுகளுக்குப் பதிலாக மெய்நிகர் தளங்களுக்கு மாறிக்கொண்டன. இணையவழிக் கூட்டங்கள் முற்றுமுழுதாக புதியதொரு கோட்பாடாக இல்லாதபோதும் ஒப்பீட்டு ரீதியில் இது பணியாளர்களில் கணிசமான பிரிவினருக்கு புதியதொரு அனுபவமேயாகும். இந்நோக்கத்திற்காக, வேறுபட்ட நிறுவனங்கள் வேறுபட்ட கருவிகளைப் பயன்படுத்தின. இது தரவுப் பாதுகாப்பிற்கு பல்வேறு சவால்களைத் தோற்றுவித்தது. புலமைச்சொத்து மற்றும் வர்த்தக இரகசியங்கள் உட்பட பரந்தளவிலான இரகசியத் தகவல்களை இணையவழியில் பகிரவேண்டி இருந்ததுடன் பெரும்பாலான கூட்டங்களை நடத்துவோரும் பங்கேற்பாளர்களும் கூட்ட நடைமுறைகளில் இரகசியத்தன்மையினைப் பேணுவதற்கு அவசியமான பாதுகாப்பு வழிமுறைகளைப் பற்றி அறியாதவர்களாகவே இருந்தனர்.

**உலகளாவிய நோய்த்தொற்றினால் தூண்டப்பட்ட இணையவழி நடவடிக்கைகளுக்கு மத்தியிலும் இணையக் குற்றவாளிகளின் நடவடிக்கைகள்**

**அ) மோசடியான மின்னஞ்சல்கள்**

வீட்டிலிருந்து பணியாற்றும் சூழலானது பல்வேறு வகையான இணையத் தாக்குதல்களைத் தொடங்குவதற்கு இணையக் குற்றவாளிகளுக்கு முழுமையான வாய்ப்பொன்றினைத் பெற்றுத்தந்தது. இத்தாக்குதல்களில் அநேகமானவை பயன்படுத்துநர் தெரியாத அறிமுகமில்லாத மூன்றாம் தரப்பினர் ஒருவருக்கு அவர்களது நுண்மையான அத்துடன் இரகசியமான தகவல்களை வெளியிடுவதற்கு அவர்களை வசப்படுத்துவதற்கு மோசடியான.'. வேண்டாத மின்னஞ்சல்களை அனுப்புவதன் மூலம் தொடங்கப்பட்டிருந்தது. சில மோசடியான மின்னஞ்சல்கள் குறித்த மக்கள் குழுவொன்றினை அல்லது நிறுவனங்களை இலக்காகக் கொண்டு உருவாக்கப்பட்டிருந்தன. இம்மோசடியான மின்னஞ்சல்களை பயன்படுத்துநரின் அஞ்சல் பெட்டிக்கு வெளியில் பேணுவதற்கு அல்லது பயன்படுத்துநரின் அஞ்சல் பெட்டியினை வந்தடைவதற்குப் பயன்படுத்தப்படுகின்ற வேண்டாத வடிப்பான்களை அவை தவிர்த்து மிகவும் நவீனமிக்கவையாகத் தோற்றம்பெற்றிருந்தன. அனைத்து இரகசியமான தகவல்களையும் சேகரிப்பதன் மூலம் தொழிலுக்கு முக்கியத்துவமிக்க முறைமைகளுக்கு இணையத் தாக்குதல்களைத் திட்டமிட்டு நிறைவேற்றுவதற்கு அவர்களுக்கு இயலுமாக இருந்ததுடன் நிதியியல் நன்மைகளையும் பெறக்கூடியதாகவிருந்தது.

**ஆ) சாதனங்களைப் பகிர்ந்துகொள்ளுதலும் இலவச/ திருட்டு மென்பொருட்களும்**

அநேகமான மாணவர்கள் அவர்களது கற்கைகளுக்காக தங்களது பெற்றோரின் சாதனங்களை பகிரவேண்டியிருந்ததுடன் இணையத் தாக்குதல்காரர்கள் இம்மாணவர்களைக் குறிப்பாக இலக்கு வைத்து தாக்குதல்களைத் தொடங்கினர். அவர்கள் வன்மமான வலைத்தளங்களை தரவிறக்கம் செய்ய முற்பட்டதுடன் இச்சாதனங்களுக்கு இலவச மென்பொருட்களையும் இணைய விளையாட்டுக்களையும் தரவிறக்கம் செய்து நிறுவுவதற்கு முனைந்தனர். இவ்விலவச மென்பொருட்களில் அநேகமானவை தகவல்களைத் திருடுதல், தட்டப்படும் சாவிகளைப் பதிவுசெய்தல் மற்றும் வேறுபட்ட நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படுகின்ற தீங்குநிரல்களுடன் கூடியவையாக இருந்ததுடன் இணையத்தளத்திற்கு இணைக்கப்பட்டுள்ள வேறு சாதனங்களுக்கு இணையத் தாக்குதல்களைத் தொடங்குகின்ற ரோபோ செய்நிரலாக செயற்பட்டன.

**இ) போலி இணையத்தளங்கள்/ செயலிகள்**

இ-வணிகம் செழிப்படைந்தமையானது வேண்டாத மின்னஞ்சல்களை அனுப்புதல் அல்லது இணையவழி விற்பனை நிலையமொன்றாக, வங்கித்தொழில் வலைத்தளங்களாக பாசாங்கு செய்கின்ற போலியான வலைத்தளங்களை உருவாக்குதல், செல்லிடத் தொலைபேசி செயலிகள் போன்றனவூடாக கடனட்டை விபரங்கள் போன்ற வாடிக்கையாளர்களின் நுண்மமான தரவுகளை திருடுவதற்கு இணையத்தளக் குற்றவாளிகளுக்கு இலகுவாக அமைந்தது. சில ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிகள் பாதிக்கப்படுவர்களிடமிருந்து நுண்மமான தரவுகளைத் திருடி பாதிக்கப்படுபவர்களுக்கு உரித்தான கணக்குகளுக்கான இணையவழி வங்கிச் சேவை முகக்குறிப்பினை தோற்றுவித்து இக்கணக்குகளிலுள்ள பணத்தினைத் திருடுகின்றனர்.

**ஈ) தகவல் பாதுகாப்பு பற்றி கவனமிழத்தல்**

வீட்டிலிருந்து பணியாற்றுதல், தொலைவிலிருந்தான அணுகுவழி மற்றும் ஏனைய தேவைகளுக்கான அதிகரித்த கேள்வியினால் பல நிறுவனங்கள் தகவல் பாதுகாப்பு பற்றிய கவனத்தினை இழந்துள்ளன. தகவல் பாதுகாப்பு தொழில்சார் நிபுணர்கள் வீட்டிலிருந்து பணியாற்றுகின்ற போது அவர்களது கவனம் ஏனைய சவால்களை நோக்கி திசைதிருப்பப்படுகின்றதுடன் இணையப் பாதுகாப்பு தொடர்பிலான பொதுவான பணி (கணனி இற்றைப்படுத்தல், மென்பொருட்களை இற்றைப்படுத்தலை பகிர்ந்து பிரயோகிக்கும் செயன்முறை, உட்புகுகைக் கண்காணித்தல், பாதுகாப்பு நிகழ்வுகள் பற்றிய தடயவியல் புலனாய்வு) கவனிக்காது விடப்பட்டதுடன் இச்சூழ்நிலைகளும் இணையத் தாக்குதல்காரர்களுக்கு சிறந்த வாய்ப்பொன்றினை வழங்குகின்றது.

**முன்நோக்கிப் பயணித்தல்**

உலகளாவிய நோய்த்தொற்று குறிப்பிட்ட காலப்பகுதிக்கே நிலவுமென நம்பப்படுகின்றதாயினும், உலகளாவிய நோய்த்தொற்றின் தாக்கங்கள் நீண்ட காலத்திற்கு நிலைத்திருக்கும். எனவே, புதிய விதிகளுடன் முன்னேறுவதற்கான குறுகியகால, நடுத்தரகால மற்றும் நீண்டகாலத் திட்டங்களைக்

கொண்டிருப்பதும் இணையப் பாதுகாப்பினையும் இணையத் தாக்குப்பிடிக்கும் தன்மையினை அதிகரிப்பதும் நிறுவனங்களுக்கு மிக இன்றியமையாததாக காணப்படுகின்றது.

### அ) இணைய தாக்குப்பிடிக்கும்தன்மையினை வலுப்படுத்தல்

இணையக் குற்றங்கள் நவீனமடைதல் மிகவும் துரிதமாக அதிகரிப்பதுடன் உயர் மட்டத்திலான இணையப் பாதுகாப்பு வழிமுறைகளைப் பின்பற்றுகின்ற நிறுவனங்கள் கூட ஏதேனும் இணையத் தாக்குதலிலிருந்து அவை முழுமையாகப் பாதுகாக்கப்படுகின்றன என உறுதிசெய்யமுடியாதுள்ளன. சில வகையான தீங்குநிரல் உண்மையான தாக்குதலினை அவை செயலாற்றுவதற்கு முன்னர் 240 நாட்கள் வரை நீண்ட காலங்களுக்கு நிறுவனமொன்றின் வலையமைப்பினுள் கண்டுபிடிக்கப்படாது இருக்கக்கூடியன என நம்பப்படுகின்றது. எனவே, அநேகமான நிறுவனங்கள் இணையத் தாக்குப்பிடிக்கும் தன்மையினை அடைவதன் மீது கரிசனை செலுத்த முனைகின்றன. இது, இணையத் தாக்குதல் ஒன்று முறைமைகளுக்கு இடையூறு விளைவிக்குமாயின் குறைந்தபட்சத் தடங்கலுடன் அதன் சாதாரண தொழிற்பாட்டினை நிறுவனம் மீளத்தொடங்கக்கூடியதா என்பதனை உறுதிசெய்கின்றது. கோரிக்கையின் மீது கணனி முறைமை மூலவளங்கள் கிடைக்கப்பெறுதல் உள்ளடங்கலாக (ஊடமுரன ஊழஅிரவபைெ) தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்புத் தொழிற்துறையில் காணப்படும் முன்னேற்றங்கள், வேண்டப்பட்ட தொழில் தாக்குப்பிடிக்கும் தன்மையினை அடைந்துகொள்வதற்கு தொழில்களை இயலச்செய்துள்ளன.

### ஆ) உலகளாவிய நோய்த்தொற்று தொடர்பான சூழ்நிலைகளுக்காக தடங்கலற்ற வியாபாரத் திட்டமிடல்

நிதியியல் துறை உள்ளடங்கலாக பல தொழிற்துறைகள், தொழில் தொடர்ச்சி நிகழ்ச்சித்திட்டங்களைத் திட்டமிட்டு பரிசோதித்து நடைமுறைப்படுத்துவது கட்டாயமானதாக விளங்குகிறது. இத்தடங்கலற்ற வியாபாரத் திட்டங்களில் பல இயற்கை அல்லது மனிதனால் ஆக்கப்பட்ட அனர்த்தங்கள், தொழில்நுட்பம் சாந்த செயலிழப்புகள் போன்ற சூழ்நிலைகளை பரிசோதிப்பதனை உள்ளடக்குகின்றன. எவ்வாறாயினும், உலகளாவிய நோய்த்தொற்றுடன் தொடர்புடைய தொழில் தொடர்ச்சித் திட்டங்கள் பல நிறுவனங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்க அல்லது பரிசோதனை செய்யப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. உலகளாவிய நோய்த்தொற்று என்பது முடக்கல்கள் காரணமாக தகவல் முறைமைக்கான நேரடியான அணுகுவழி சாத்தியமற்ற அதே சந்தர்ப்பத்தில் முக்கிய வகிபாகங்களைக் கையாளுகின்றவர்கள் கிடைக்கத்தக்கதாகவிருக்காத விசேட சூழ்நிலையொன்றாகும். நிறுவனங்கள் அவற்றின் வகிபாகங்களை நிகரொத்ததாக்குவதற்கு அல்லது பகிர்ந்துகொள்வதற்கு போதிய தகவல் பாதுகாப்பு தொழில்சார் நிபுணர்களைக் கொண்டிருக்காது இருக்கலாம். இவ்வூழியர்கள் உலகளாவிய நோய்த்தொற்று ஒன்றின் மூலம் பாதிக்கப்படுவார்களாயின் அது, குறித்த விடயப்பரப்பினுள் இடைவெளியொன்றினைத் தோற்றுவிக்கும். எனவே, நிறுவனங்களது தடங்கலற்ற வியாபாரத் திட்டமிடலில் தொலைவிலிருந்து பணியாற்றும் ஒழுங்குகளையும் போதிய மனித வளங்களையும் அவை உள்ளடக்குவது நிறுவனங்களுக்கு அத்தியாவசியமிக்கதாகத் தோற்றம்பெற்றுள்ளது.

### இ) போதிய வரவுசெலவினை ஒதுக்கீடு செய்தல்

மட்டுப்படுத்தப்பட்ட அணுகுவழி மற்றும் ஏனைய கண்டிப்பான கட்டுப்பாடுகளுடன் பாதுகாக்கப்படவேண்டிய அவற்றின் தகவல் முறைமைகளைப் பாதுகாப்பது வீட்டிலிருந்து பணியாற்றும் புதிய இயல்புகளுடன் நிறுவனங்களுக்கு மிகவும் கடினமானதாக தோற்றம்பெற்றுள்ளது. இப்புதிய வசதிகளை அனுமதிக்கின்ற அதேவேளை நிறுவனங்கள் தமது தகவல் தொழில்நுட்பச் சொத்துக்களைப் பாதுகாப்பதற்கு உடனடியான மற்றும் நீண்டகால திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும். இணையப் பாதுகாப்பு என்பது தகவல் பாதுகாப்பிற்கான வரவுசெலவுத் திட்டமொன்றினை ஒதுக்கீடு செய்வது பற்றி தீர்மானிக்கின்ற போது பாரியளவிலான நிறுவனங்கள் கூட போராடுகின்ற மிதமிஞ்சிய செலவினைக் கொண்டதாகும். நிறுவனமொன்று குறைந்தது துறைவாரியாக (நிதியியல், மருத்துவ, கல்வி) ஒன்றிணைத்து தகவல் பாதுகாப்பு வளங்களை பகிர்ந்துகொள்வதற்கு திட்டமிடக்கூடியதாகவிருப்பின் நீண்டகாலத்தில் அது அனைவருக்கும் நன்மைபயக்கக்கூடியதாக அமையும். குறுகிய காலத்தில், நிறுவனங்கள் அவற்றின் தகவல் தொழில்நுட்பச் சொத்துக்களைப் பாதுகாப்பதற்கு கிடைக்கத்தக்க இணையப் பாதுகாப்பு மூலவளங்களின் உபயோகத்தினை உச்சப்படுத்திக்கொள்வதன் மீது அதிக கவனம் செலுத்த வேண்டும்.

### ஈ) பயன்படுத்துநர் விழிப்புணர்வு

நிறுவனங்களினுள் இணையக் குற்றவாளிகள் நுழைவதற்கான வாயிலை பயன்படுத்துநர் திறந்துவிடுவதனால் அநேகமான சந்தர்ப்பங்களில் பயன்படுத்துநர் விழிப்புணர்வு என்பது இணையப் பாதுகாப்பின் மிகவும் முக்கியத்துவமிக்க பாகமொன்றாக கருதக்கூடியதாகவுள்ளது. அலுவலகப் பணியினையும் தனிப்பட்ட பணியினையும் வேறுபடுத்துகின்ற எல்லைக்கோடு இனிமேலும் காணப்படவில்லை என்பதுடன் இவ்விரு பணி நோக்குகளையும் மக்கள் ஏற்கனவே கலந்துவிட்டதாகத் தோன்றுகின்றது. அலுவலகப் பணிக்காக தனிப்பட்ட சாதனங்களைப் பயன்படுத்தல் அத்துடன் தனிப்பட்ட பணிக்காக அலுவலக சாதனங்களைப் பயன்படுத்தலானது சாதனங்கள் வேண்டப்பட்ட பாதுகாப்பு அம்சங்களுடன் முறையாகப் பயன்படுத்தப்படவில்லையாயின் அதே அளவில் ஒரே மாதிரியாக இடர்நேர்வினைக் கொண்டுள்ளது. இவ்விடர்நேர்வுகள் பற்றி பயனர் அநேகமாக அறியாமலேயே உள்ளனர். ஊழியர்கள் மத்தியில் பயனர் விழிப்புணர்வினைத் தோற்றுவித்தல் மீது நிறுவனங்கள் அதிக கவனம் செலுத்த வேண்டும். பாடசாலைகளும் பல்கலைக்கழகங்களும் கூட இதனையே பின்பற்ற வேண்டும்.

### (உ) தேசிய கணனி நிகழ்வுகள் பதிலிறுப்புக் குழுக்களுடன் நெருக்கமாகப் பணியாற்றுதல்

நாட்டிற்குள் இணையத் தாக்குதல்களுக்குப் பதிலிறுத்துகின்ற இணையப் பாதுகாப்பு நிகழ்வினை இணைப்பதற்கான தேசிய கவனத்திற்குரிய மையமாக பணியாற்றுகின்ற, தேசிய கணனி நிகழ்வு பதிலிறுப்புக் குழுக்களை பெரும்பாலான நாடுகள் நிறுவியிருக்கின்றன. இலங்கை கணனி அவசரகால ஆயத்தக் குழு இணைப்பு மையம் இலங்கைக்கான தேசிய கணனி அவசரகால ஆயத்தக்குழுவாக இருப்பதுடன் அவர்களது பணி, சாத்தியமான அச்சுறுத்தல் மற்றும் பாதிக்கப்படும் தன்மை மீதான இற்றைப்படுத்தப்பட்ட தகவல்களை வழங்குவதன்

8

மூலம் அரச மற்றும் தனியார் துறை நிறுவனங்களிலுள்ள தகவல்களைப் பயன்படுத்துகின்றவர்களையும் பொதுமக்களையும் பாதுகாப்பதும் கணனி அவசரகால பதிலிறுப்புக் கையாளல் பணிகளை மேற்கொள்வதுமேயாகும். ஆகவே, தேவையான போது கணனி பாதுகாப்பு தொடர்பில் அவர்களது பணிகளையும் ஆலோசனைகளையும் எந்தவொரு தனிப்பட்டவரும் அல்லது நிறுவனமும் பெற்றுக்கொள்ள முடியும்.

**முடிவுரை**

உலகளாவிய நோய்த்தொற்றுக் காலப்பகுதியில் வளர்ந்துவருகின்ற அச்சுறுத்தல்களைக் கருத்திற்கொண்டு இணையப் பாதுகாப்பு என்பது சபை அறைகளில் முக்கிய தலைப்பாக ஆக்கப்படவேண்டியதுடன் மேலதிக கவனம் செலுத்தப்பட வேண்டும். கொரோனா வைரஸின் இரண்டாம் அலையினூடாக பயணிக்கின்ற அதேவேளை சாத்தியமான மூன்றாம் அலை பற்றிய கரிசனைகளுடன் ஒவ்வொரு நிறுவனமும் இணையத் தாக்குதலுக்கான காப்பு வழிமுறைகளை நடைமுறைப்படுத்தி இணையத் தாக்குதலைக் கண்டுபிடித்தல் மற்றும் பதிலிறுத்தல் அத்துடன் மீட்டெடுக்கும் இயலளவுகளை வலுப்படுத்தவும் வேண்டும். தற்கால இணைக்கப்பெற்ற உலகில் இணையக் குற்றங்களிலிருந்து தாமாகவும் தமது பணி இடங்களையும் பாதுகாத்துக்கொள்வது ஒவ்வொரு தனிப்பட்டவரினதும் முகாமைத்துவத்தினதும் பொறுப்பாகும். அதே சந்தர்ப்பத்தில் இணையக் குற்றங்களுக்கெதிராகப் போராடுவதற்கும் தற்கால அதேபோன்று அடுத்த தலைமுறையினருக்காக பாதுகாப்புமிக்க உலகமொன்றைக் கட்டியெழுப்புவதற்கும் நிறுவனசார், துறைசார் மற்றும் தேசியளவிலான அத்துடன் சர்வதேச மட்டங்களில் கூட்டான அணுகுமுறையொன்று தேவைப்படுகின்றது.

இலத்திரனியல் நிதிய மாற்றல் கொடுக்கல்வாங்கல்களின் பெறுமதி 74.7 சதவீதத்தினால் ரூ.2,415.3 பில்லியனுக்கு 2020இல் அதிகரித்தது. மத்திய வங்கி பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் கொடுக்கல்வாங்கல் கட்டணத்தினைக் கொடுக்கல்வாங்கலொன்றிற்கு ரூ.50.00 இலிருந்து ரூ.30.00 இற்குக் குறைத்ததுடன் பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றலிலுள்ள குறைந்தபட்ச பொறுப்பு முகாமையாளர் வரையறையினை திருத்தியமைத்தது. இதன் மூலம் இலத்திரனியல் கொடுப்பனவு முறைமையின் மிகையான இயலாற்றலின் பயன்பாடு அதிகரித்தது.

**அரச நிறுவனங்களுக்கான இணையவழி அதேநேரக் கொடுப்பனவுகளுக்கு வசதியளிக்கும் பொருட்டு 2017ஆம் ஆண்டில் லங்காபே இணையவழி கொடுப்பனவுத் தளமொன்று உருவாக்கப்பட்டது.** லங்காபே இணையவழி கொடுப்பனவுத் தளம் தற்பொழுது மூன்று அரச நிறுவனங்களுக்கு இணையவழி அதேநேரக் கொடுப்பனவு வசதிகளை வழங்குவதுடன் ஆய்விற்குரிய ஆண்டுப்பகுதியில் லங்காபே, நிகழ்நிலை அதேநேரக் கொடுப்பனவுத் தளத்தினூடாக ரூ.66.9 பில்லியன் தொகை கொண்ட 85,010 கொடுக்கல்வாங்கல்களைச் செய்முறைப்படுத்தியிருக்கிறது.

அட்டவணை 8.18

கொடுப்பனவு முறைமையின் ஊடான கொடுக்கல்வாங்கல்கள்

| கொடுப்பனவு முறைமை | 2019 (அ) | | 2020 (ஆ) | |
|---|---|---|---|---|
| | தொகை ('000) | பெறுமதி (ரூ.பில்.) | தொகை ('000) | பெறுமதி (ரூ.பில்.) |
| **பாரிய பெறுமதி கொடுப்பனவு முறைமைகள்** | | | | |
| அதேநேர மொத்த கொடுப்பனவு முறைமை | 428 | 117,151 | 397 | 150,051 |
| **சில்லறை பெறுமதி கொடுப்பனவு முறைமைகள்** | | | | |
| பிரதான காசோலை தீர்ப்பனவு முறைமை | 46,802 | 9,863 | 33,631 | 7,491 |
| இலங்கை வங்கிகளுக் கிடையிலான கொடுப்பனவு முறைமை | 36,612 | 2,104 | 36,830 | 2,257 |
| கொடுகடன் அட்டைகள் | 50,969 | 277 | 44,692 | 222 |
| படுகடன் அட்டைகள் | 71,096 | 195 | 75,094 | 210 |
| இணைய வங்கித்தொழில் | 36,483 | 3,875 | 57,215 | 4,436 |
| தொலைபேசி வங்கித்தொழில் | 17,630 | 339 | 27,350 | 491 |
| தபால் சாதனங்கள் | 906 | 6 | 646 | 5 |
| **மொத்தம்** | 260,926 | 133,809 | 275,856 | 165,162 |
| ஐ.அமெ.டொலர் காசோலை தீர்ப்பனவு முறைமை | 50 | 49 | 32 | 48 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

**மத்திய வங்கி தேசிய விரைவு பதில் நியமத்தை உள்நாட்டு நாணயக் கொடுப்பனவுகளை மேற்கொள்ள "லங்காகியூஆர்" இனை 2018இல் ஆரம்பித்தது.** ஆய்விற்குரிய ஆண்டில் லங்காகியூஆர் கொடுக்கல்வாங்கல்களில் மொத்த அளவும் பெறுமதியும் முறையே 159,218 ஆகவும் ரூ.539.2 மில்லியனாகவும் விளங்கியது. 2020 இறுதியில் 169,214 பதிவுசெய்யப்பட்ட வணிகர்களைக் கொண்டிருந்தது. மத்திய வங்கி நிதியியல் நிறுவனங்களுடன் சேர்த்து லங்காகியூஆர் இயலுமைப்படுத்தப்பட்ட கொடுப்பனவுச் செயலியை "நாடு முழுவதற்குமான லங்காகியூஆர்" இனை ஆய்விற்குரிய ஆண்டில் நடைமுறைப்படுத்தியது.

**மத்திய வங்கி, 2013ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க கொடுப்பனவு அட்டைகள் மற்றும் செல்லிடத் தொலைபேசி கொடுப்பனவு முறைமைகள் ஒழுங்குவிதிகளின் (ஒழுங்குவிதிகள்) ஏற்பாடுகளினது நியதிகளில், கொடுப்பனவு அட்டைகள் மற்றும் செல்லிடத் தொலைபேசி கொடுப்பனவு முறைகள் தொடர்பில் அதன் ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டது.** இதற்கமைய, 2020 காலப்பகுதியில் ஒழுங்குவிதிகளின் நியதிகளில் தேசிய அட்டைத் திட்டத்தின் கீழ் இரண்டு நிதியியல் நிறுவனங்கள் பற்று அட்டை வழங்குநர்களாகத் தொழிற்படுவதற்கு உரிமங்களைப் பெற்ற வேளையில், மற்றொரு நிதியியல் நிறுவனத்திற்கு ஒழுங்குவிதிகளின் நியதிகளில் கொடுப்பனவு அட்டைகளின் நிதியியல் கையேற்பாளராகத் தொழிற்படுவதற்கு உரிமம் வழங்கப்பட்டது. மேலும், செல்லிடத் தொலைபேசிக் கொடுப்பனவு முறைமைகளின் பணி வழங்குவோருக்கு

விதிக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுடன் இணங்கிச் செல்வதனைக் கண்காணிப்பதன் மூலம் செல்லிடத் தொலைபேசியினை அடிப்படையாகக் கொண்ட இ-பண முறைமைகளின் சுமுகமான தொழிற்பாடுகளை உறுதிப்படுத்துவதற்காக தலத்திலான மற்றும் தலத்திற்கு வெளியேயான மேற்பார்வைகள் மேற்கொள்ளப்பட்டன.

**நாட்டின் கொவிட்-19 நோய்ப்பரவலின் காரணமாக பொதுமக்களின் கொடுப்பனவுத் தேவைகளை நிறைவு செய்வதற்காக பல வழிமுறைகளை மத்திய வங்கி கையாண்டது.** அவ்வழிமுறைகளில் இணையவழிப் பதிவுசெய்தல் வசதிகளை இயலுமைப்படுத்தல் மற்றும் உங்கள் வாடிக்கையாளர்களைத் தெரிந்துகொள்ளும் தேவைப்பாடுகளுக்கு வசதியளித்தல் போன்றவற்றிற்கு அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளுக்கும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கும் வசதிகளை அளித்த வேளையில் அதிகரிக்கப்பட்ட இணையவழிக் கொடுக்கல்வாங்கல்களுக்கு வசதியளிப்பதற்காக பல கொடுப்பனவு தீர்வுகளின் மீது விதிக்கப்பட்ட வரையறைகள் அதிகரிக்கப்பட்டமை போன்றன உள்ளடங்குகின்றன.

**மத்திய வங்கி 2020ஆம் ஆண்டினை எண்ணிம கொடுக்கல்வாங்கல்களுக்கான ஆண்டாக அறிவித்ததுடன் இவ்வாண்டுப்பகுதியில் எண்ணிம கொடுப்பனவுப் பொறிமுறை தொடர்பான வாடிக்கையாளர் விழிப்புணர்வினை அதிகரிப்பதற்காக பல எண்ணிக்கையான நிகழ்ச்சித்திட்டங்களை நடத்தியது.**

**2020ஆம் ஆண்டு நிறுவப்பட்ட பின்டெக் ஒழுங்குமுறைப்படுத்தல் பரிசோதனைக் கட்டமைப்பு புத்தாக்கங்களை புனைவோரிடமிருந்து 2020ஆம் ஆண்டுப்பகுதியில் ஒழுங்குமுறைகளை மீறாது தயாரிப்புக்களைப் பரிசோதிக்க பல விண்ணப்பங்களைப் பெற்றுக்கொண்டது.** மத்திய வங்கி பேரேட்டுத் தொழில்நுட்பத்தினை அடிப்படையாகக் கொண்ட பகிரப்பட்ட உங்கள் வாடிக்கையாளர்களைத் தெரிந்துகொள்ளுங்கள் வசதிக்காக கருதுகோள்களை நிரூபிக்கும் பணிகளுக்கும் பரீட்சிப்புக்களுக்குமாக பல வழிமுறைகளை மேற்கொண்ட வேளையில் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் மீதான தொழில்துறை ஆலோசனை மற்றும் கண்காணிப்புக் குழுவான தேசியக் கொடுப்பனவுச் சபையானது ஆய்விற்குரிய காலப்பகுதியில் திறந்த வங்கித்தொழில் மற்றும் டிஜிட்டல் கொடுப்பனவுத் தளங்கள் பற்றி ஆய்வுசெய்வதற்காக இரண்டு தொழிற்பாட்டுக் குழுக்களை நியமித்தது. தடங்கலற்ற கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் தொழிற்பாடுகளை வழங்குவதற்காகவும் நிதியியல் துறையின் வினைத்திறனை அதிகரிப்பதற்காகவும் வழிகாட்டல் கண்காணிப்புக் குழுவினூடாக 2020 - 2022இற்கான கொடுப்பனவு முறைமை வழிகாட்டலை மேலும் கண்காணித்த வேளையில் இடர்நேர்வுகளையும் தொடர்ந்தும் கண்காணித்தது.

8

இது, கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு உட்கட்டமைப்பினை வலுப்படுத்திய வேளையில் இலங்கையில் நிதியியல் வசதிக்குட்படுத்தலை அதிகரித்தது.

## பணம் தூயதாக்கலைத் தடுத்தல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல்

**நாட்டிற்காக பணம் தூயதாக்கலைத் தடுத்தல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் என்பனவற்றின் மையப் புள்ளியாக நிதியியல் உளவறிதல் பிரிவு 2020ஆம் ஆண்டுப்பகுதியில் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்று உட்பட அநேக சவால்களுக்கு மத்தியில் பன்னாட்டு நியமங்களுடன் இசைந்து ஒழுகும் விதத்தில் அதன் மையத் தொழிற்பாடுகளைத் தொடர்ந்தும் ஆற்றியது.** 2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் நியதிகளில், நிதியியல் உளவறிதல் பிரிவு பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் தொடர்பான சந்தேகத்திற்குரிய நிதியியல் கொடுக்கல்வாங்கல்கள் அல்லது வேறு ஏதேனும் சட்டத்திற்கு மாறான நடவடிக்கைகள் தொடர்பில் மீதான தகவல்களை பெறுதல், பகுப்பாய்வு செய்தல் மற்றும் பரப்புதல் என அதன் முக்கிய வகிபாகத்தினை ஆற்றியிருக்கிறது. 2020ஆம் ஆண்டுப்பகுதியில் நிதியியல் உளவறிதல் பிரிவு அறிக்கையிடுகின்ற நிறுவனங்கள், சட்டத்தை நடைமுறைப்படுத்தும் முகவர்கள், ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகாரசபைகள் மற்றும் பொதுமக்களிடமிருந்து 3,665 சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல்கள் அறிக்கைகளைப் பெற்றுக்கொண்டது. இவ்வாண்டுப்பகுதியில் பல்வேறு மூலங்களிலிருந்து பெறப்பட்ட ஏனைய தொடர்பான தகவல்களுடன் சேர்த்து சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடலினூடாகப் பெறப்பட்ட தகவல்களின் பகுப்பாய்வுகளைத் தொடர்ந்து, தேவையானவிடத்து தொடர்பான சட்ட நடைமுறைப்படுத்தல் முகவர்கள் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகாரிகளுக்கும் மேலதிக விசாரணைகளுக்காக அல்லது ஒழுங்குமுறைப்படுத்தல் நடவடிக்கைகளுக்காக 2,825 சந்தேகத்திற்குரிய அறிக்கைகள் பாரப்படுத்தப்பட்டன. மேலும், நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் 6ஆம் பிரிவின் நியதிகளுக்கிணங்க நிதியியல் உளவறிதல் பிரிவு, அறிக்கையிடும் ஆரம்ப மட்டமான ரூ.1.0 மில்லியனை அல்லது அதற்குச் சமனான வேறு ஏதேனும் வெளிநாட்டு நாணயத்தினை அறிக்கையிடும் நிறுவனத்திலிருந்து தொடர்ந்தும் காசுக் கொடுக்கல்வாங்கல் அறிக்கைகளையும் இலத்திரனியல் நிதியியல் மாற்றல் (இலத்திரனியல் நிதிய மாற்றல் உள்முகம் மற்றும் வெளிமுகம்) அறிக்கைகளைத் தொடர்ந்தும் பெற்றுக்கொள்கிறது. இதன்படி, இவ்வாண்டுப்பகுதியில் 4.6 மில்லியன் காசுக் கொடுக்கல்வாங்கல் அறிக்கைகளும் 7.3 மில்லியன் இலத்திரனியல் நிதிய மாற்றல் அறிக்கைகளும் நிதியியல் உளவறிதல் பிரிவிற்கு அறிவிக்கப்பட்டன.

அட்டவணை 8.19
வெளிநாட்டு நாணய கணக்குகளின் கொடுக்கல்வாங்கல்களின் சுருக்கம்

ஐ.அ.டொ. மில்லியன்

| கணக்கின் வகை | உள்முக பண அனுப்பல் | | வெளிமுக பண அனுப்பல் | | திசெம்பர் 31இல் உள்ளவாறான இறுதி மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | 2020 | 2019 | 2020 | 2019 | 2020 | 2019 |
| தனிப்பட்ட வெளிநாட்டு நாணய கணக்குகள் | 755.9 | 841.6 | 200.4 | 279.1 | 2,713.4 | 2,528.7 |
| வியாபார வெளிநாட்டு நாணய கணக்குகள் | 6,796.7 | 7,660.9 | 2,805.7 | 3,174.1 | 1,951.0 | 1,335.0 |
| உள்முக முதலீட்டுக் கணக்குகள் | 1,382.9 | 2,033.9 | 1,901.1 | 2,070.8 | 1,861.1 | 1,748.7 |
| சிறப்பியல்புவாய்ந்த வைப்புக் கணக்குகள்[1] | 214.9 [2] | வி.கி | 3.2 [3] | வி.கி | 290.0 [4] | வி.கி |
| வெளிமுக முதலீட்டுக் கணக்குகள் | 138.2 | 8.0 | 8.4 | 54.0 | வி.கி | வி.கி |

1 சிறப்பியல்புவாய்ந்த வைப்பு கணக்குகளின் ஒழுங்குமுறைகள் 2020 ஏப்பிறல் 08ஆம் திகதி அறிமுகப்படுத்தப்பட்டன. எனவே 2019ஆம் ஆண்டிற்கான தரவு ஒப்பீட்டிற்காக கிடைக்கப்பெறவில்லை.
2 கரைகடந்த வங்கியலகின் கணக்குகள், வெளிநாட்டு நாணய வைப்புகள் மற்றும் உள்முக முதலீடு கணக்குகளின் மூலம் கிடைக்கப்பெறும் நிதியைத் தவிர
3 சிறப்பியல்புவாய்ந்த வைப்புக் கணக்குகளின் கீழான வைப்புகள் முதிர்வடைந்த 2020 அக்டோபர் 07 முதல் வெளிமுக பணவனுப்பல் நிகழத் தொடங்கின.
4 சனவரி 01 2021இல் உள்ளவாறான மீதி (தோராயமாக)

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

**2020ஆம் ஆண்டுப்பகுதியில் நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டம், 2016ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க நிதியியல் நிறுவனங்கள் (வாடிக்கையாளர் உரிய விழிப்புக் கவனம்) விதிகள் மற்றும் நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் கீழ் விடுக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் என்பனவற்றில் எடுத்துக்காட்டப்பட்டுள்ள பணம் தூயதாக்கலைத் தடுத்தல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் தேவைப்பாடுகளுடன் நிறுவனங்கள் இணங்கிச் செல்வதனை உறுதிப்படுத்தும் விதத்தில் நிதியியல் உளவறிதல் பிரிவு நிதியியல் நிறுவனங்கள் மற்றும் குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்கள் மற்றும் தொழில்சார் நடவடிக்கைகளை மேற்கொள்வோர் மீது இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட தலத்திலான பரீட்சிப்புக்களை மேற்கொண்டது.** நிதியியல் உளவறிதல் பிரிவு நிதியியல் நிறுவனங்கள் தொடர்பில் துறைசார்ந்த குறித்துரைக்கப்பட்ட ஒழுங்குமுறைப்படுத்துநர்களுடன் மேற்கொள்ளப்பட்ட கூட்டுப் பரீட்சிப்புக்கள் உட்பட 11 இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட தலத்திலான பரீட்சிப்புக்களையும் 7 பின்தொடர் பரீட்சிப்புக்களையும் 16 தலத்திலான உடன் பரீட்சிப்புக்களையும் மேற்கொண்டது. மேலும், உயர் இடர்நேர்வுகளைக் கொண்ட குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்கள் மற்றும் தொழில்களின் மீது அதாவது உண்மைச் சொத்து முகவர்கள் மற்றும் இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரண வணிகர்கள் போன்றவர்களின் மீது 11 இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட தலத்திலான பரீட்சிப்புக்களும் 7 பின்தொடர் பரீட்சிப்புக்களும் மேற்கொள்ளப்பட்டன. 2020இல் மேற்கொள்ளப்பட்ட பரீட்சிப்புகளின் அடிப்படையில் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் தீர்மானங்களினது நுண்ணாய்வு தொடர்பில் வாடிக்கையாளர்களின் உரிய விழிப்புக் கவன விதிகளை மீறியமைக்காக 3 நிதியியல் நிறுவனங்கள் மீது மொத்தமாக ரூ.2.3 மில்லியன் கொண்ட தொகை தண்டமாக விதிக்கப்பட்டது. அத்துடன், நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் வாடிக்கையாளர் உரிய விழிப்புக் கவன விதிகள் மற்றும் அவற்றின் கீழ் விடுக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் என்பனவற்றிற்கு இணங்கியொழுகாத நிதியியல் நிறுவனங்களுக்கு, அடையாளம் காணப்பட்ட குறைபாடுகளை அறிவிக்கின்ற 14 கடிதங்களும் காரணங்களைக் கோருகின்ற 8 கடிதங்களும் வழங்கப்பட்டன. நிதியியல் உளவறிதல் பிரிவு 15 குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்கள் மற்றும் தொழில்களுக்கு அடையாளம் காணப்பட்ட குறைபாடுகளை அறிவிக்கின்ற கடிதங்களையும் வழங்கியது. மேலும், கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் காரணமாக குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்கள் மற்றும் தொழில்களின் வியாபாரத் தொழிற்பாடுகளின் மீது ஏற்பட்ட தாக்கத்தினை அடையாளம் காண்பதற்காக 2020 யூலை காலப்பகுதியில் குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்கள் மற்றும் தொழில்கள் மீது பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியிடல் இடர்நேர்வுகளை மதிப்பிடுவதற்கான இடைக்கால தலத்திற்கு வெளியேயான பரீட்சிப்பொன்று நடாத்தப்பட்டது.

**நிதியியல் உளவறிதல் பிரிவு தொடர்புபட்ட அனைத்து ஆர்வலர்களிடையேயும் விழிப்புணர்வினை அதிகரிப்பதற்காக பல்வேறு நடவடிக்கைகளையும் முன்னெடுத்தது.** 2020ஆம் ஆண்டுப்பகுதியில் பணம் தூயதாக்கலைத் தடைசெய்தல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் தொடர்பான மேற்பார்வைச் செய்முறைகளுக்கும் நிறுவன ரீதியான இணங்குவிப்புக்களுக்கும் வலுவூட்டும் பொருட்டு நிதியியல் உளவறிதல் பிரிவு பல்வேறு வழிகாட்டல்களையும் சுற்றறிக்கைகளையும் வெளியிட்டதுடன் அதேபோன்று விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களையும் நடாத்தியது. சட்டத்திற்கு மாறான போதைப்பொருள் வர்த்தகம் தொடர்பில் பணம் தூயதாக்கலைத் தடைசெய்தல் முயற்சியில் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் அதிகாரசபைகளுக்கு மேலும் வலுவூட்டும் பொருட்டு நிதியியல் உளவறிதல் பிரிவு மூத்த முகாமைத்துவத்தினர் மற்றும் பணிப்பாளர் சபையினர் உள்ளடங்கலாக நிதியியல் நிறுவனங்களுக்கும் புலனாய்வாளர்களுக்கும் விழிப்புணர்வு அமர்வுகளை நடாத்தியது.

8

பணம் தூயதாக்கலைத் தடைசெய்தல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் மற்றும் அதனுடன் தொடர்பான குற்றங்கள் தொடர்பில் புலனாய்வுகளைப் பரிமாறுவதற்காக தேசிய புலனாய்வுப் பிரிவின் தலைவருடன் நிதியியல் உளவறிதல் பிரிவு புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றினைச் செய்துகொண்டமையின் மூலம் 2020 இறுதியில் நிதியியல் உளவறிதல் பிரிவு உள்நாட்டு முகவர்களுடன் கையொப்பமிடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் எண்ணிக்கை 12 இற்கு அதிகரித்தது.

**2020 மேயில் ஐரோப்பிய ஆணைக்குழு பணம் தூயதாக்கலைத் தடைசெய்தல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் அமைப்பில் குறைபாடுகளைக் கொண்டிருக்கும் உயர் இடர்நேர்வினைக் கொண்ட மூன்றாந்தர நாடுகளின் பட்டியலிலிருந்து இலங்கையை விலக்கிக் கொண்டது.** இலங்கை 2018 பெப்புருவரியில் ஐரோப்பிய ஆணைக்குழுவினால் உயர் இடர்நேர்வினைக் கொண்ட மூன்றாந்தரப்பு நாடாக பட்டியிடப்பட்டமை இலங்கை நிதியியல் நடவடிக்கைச் செயலணிக் குழுவினால் 2017 ஒத்தோபரில் அதன் இணங்குவிப்பு ஆவணமான அதாவது "சாம்பல நிறப்பட்டியலில்" பணம் தூயதாக்கலைத் தடைசெய்தல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் குறைபாடுகளைக் கொண்ட நியாயாதிக்கமாக இலங்கையினை அடையாளப்படுத்திமையால் ஆகும். நிதியியல் நடவடிக்கைச் செயலணிக் குழுவினால் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டதனைத் தொடர்ந்து ஐரோப்பிய ஆணைக்குழுவும் 2020 மேயில் உயர் இடர்நேர்வினைக் கொண்ட மூன்றாந்தர நாடுகளிலிருந்து இலங்கையை நீக்கிக் கொண்டது. நிதியியல் நடவடிக்கைச் செயலணிக்குழுவினாலும் ஐரோப்பிய ஆணைக்குழுவினாலும் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டமை முன்னைய ஆண்டுகளில் நிலவிய மோசமான எதிர்க்கணிய விளைவுகளை நீக்கிவிடும் எனவும் நேர்க்கணியமான பொருளாதாரத் தோற்றப்பாட்டினையும் பொருளாதாரத்தின் நிதியியல் ஒருங்கிணைப்பினையும் மேலும் வலுப்படுத்துமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

## நிதியியல் துறை தொடர்பான சட்ட சீர்திருத்தங்கள்

**2020ஆம் ஆண்டுப்பகுதியில், வழங்கப்பட்ட ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை அதிகாரங்களை வலுப்படுத்தி அதிகரிக்கும் நோக்குடன் வங்கித்தொழில் சட்டம், நிதி வியாபாரச் சட்டம் மற்றும் பதிவுசெய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டம் போன்ற மத்திய வங்கியினால் நிருவகிக்கப்படும் முக்கிய சட்டவாக்கங்களுக்கு சட்டச் சீர்திருத்தங்களைத் தொடர்ந்தும் அறிமுகப்படுத்தியது.** புதிய வங்கித்தொழில் சட்டம் உரிமம்பெற்ற வங்கிகளின் ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வைக்கான வலுவான சட்ட அத்திவாரங்களையும் வழங்குவதுடன் நிருவாகத் தேவைப்பாடுகளை உயர்த்தியதுடன் உரிமம்பெற்ற வங்கிகளுக்கான காத்திரமான தீர்மான அமைப்பினையும்

அட்டவணை 8.20
ரூபா கணக்கிலான மூலதன கொடுக்கல்வாங்கல் மீதான பண அனுப்புதல்கள் மற்றும் இலங்கை ரூபாவிற்கு எதிரான வெளிநாட்டு செலாவணி விற்பனையும் கொள்வனவும்

| புலம்பெயர் நிதி மாற்றம் | 2020 | 2019 |
|---|---|---|
| புலம்பெயர்வதற்கான கொடுப்பனவை அனுப்புவதற்காக வெளிநாட்டு செலாவணித் திணைக்களத்துடன் பதியப்பட்ட ரூபா கணக்கிலான மூலதன கொடுக்கல் வாங்கல் மீதான பண அனுப்புதல்களின் எண்ணிக்கை | 742 | 1,353 |
| ரூபா கணக்கிலான மூலதன கொடுக்கல் வாங்கல் மீதான பண அனுப்புதல்கள் ஊடாக அனுப்பப்பட்ட வெளிச் செல்லுகை | 12.7 | 40.7 |
| **வெளிநாட்டு செலாவணி விற்பனைகள் மற்றும் கொள்வனவுகள் (ஐ.அ.டொ. மில்)** | | |
| வெளிநாட்டு செலாவணி விற்பனைகள் (படிவம் 1) | 11,564.4 | 13,438.9 |
| வெளிநாட்டுச் செலாவணி கொள்வனவுகள் (படிவம் 2) | 16,813.5 | 17,546.3[1] |

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

1. புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட படிவம் I மற்றும் படிவம் II நிகழ்நிலை அறிக்கையிடல் முறைமையை 2019ஆம் ஆண்டின் 2ஆம் காலாண்டில் செயற்படுத்தும்போது ஏற்பட்ட பிரச்சனைகள் காரணமாக இடம்பெற்ற தாமதிக்கப்பட்ட சமர்ப்பிப்புக்களால் திருத்தப்பட்டது.

வழங்குகின்ற வேளையில் நிதி வியாபாரச் சட்டத்திற்கு அறிமுகப்படுத்தப்பட்ட திருத்தங்கள் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் மீதான ஒழுங்குமுறைப்படுத்தலினையும் மேற்பார்வை அதிகாரங்களினையும் அதிகரிக்கும். மேலும், மத்திய வங்கி பதிவுசெய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டத்திற்கும் நிதிக் குத்தகைக்குவிடும் சட்டத்திற்கும் திருத்தங்களை வரைவதில் ஈடுபட்டிருந்தது. மேலும், மீளாய்விற்குரிய ஆண்டுப்பகுதியில் தேறல் செய்தல் மற்றும் தீர்ப்பனவு செய்தல் மற்றும் கடன்தீராற்றலற்ற தன்மை, பிணையங்களின் வர்த்தகப்படுத்தலுக்காக மத்திய இணைத்தரப்பு மற்றும் இலத்திரனியல் வர்த்தகப்படுத்தல் தளம்களை நிறுவுதல் என்பன மீது புதிய சட்டங்களை அறிமுகப்படுத்துவதனை நோக்கமாகக் கொண்ட மூலதனச் சந்தை அபிவிருத்திச் செயற்றிட்டங்களின் கீழ் மத்திய வங்கியினால் பல்வேறு முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. இது, மூலதனச் சந்தைக்கான ஏற்புடைத்தான தற்போதுள்ள சட்டக் கட்டமைப்பிற்கு குறிப்பிடத்தக்க மாற்றங்கள் செய்யப்படுவதனை உறுதிப்படுத்தும்.

## நிதியியல் நுகர்வோர் பாதுகாப்பு

**இலங்கை மத்திய வங்கியினால் ஒழுங்குமுறைப்படுத்தப்படும் நிறுவனங்களுக்குள் நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்புக் கட்டமைப்பொன்றினை வலுப்படுத்தும் நோக்குடன் நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்புத் திணைக்களம் 2020 ஓகத்தில் நிறுவப்பட்டது.**

திணைக்களம் புதிய வழிமுறைகளை முன்னெடுப்பதற்கு எதிர்பார்க்கிறது. இவை முறைப்பாடுகளையும் மனக்குறைகளையும் ஒழுங்குமுறைப்படுத்துகின்ற செய்முறைகள், ஒன்றில் புதிய சட்டவாக்கங்கள் மூலமாக அல்லது ஏற்கனவேயுள்ள சட்டவாக்கங்களுக்குத் திருத்தங்களைச் செய்வதன் மூலமாக நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்புக் கட்டமைப்பிற்கு

**வசதியளிக்கும் விதத்தில் பொருத்தமான சட்டவாக்க ஏற்பாடுகளை அறிமுகப்படுத்தல் மற்றும் குறித்துரைக்கப்பட்ட முறைப்பாடுகள் மீது பரீட்சிப்புக்களை/ புலனாய்வுகளை நடாத்துதல் போன்றவற்றை உள்ளடக்கியிக்கின்றதெனினும் அவற்றிற்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டதாக இருக்கவில்லை.** இவ்வழிமுறைகள் நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பு தொடர்பான பிரச்சனைகளின் மீது அதிகாரிகள் சரியான நடவடிக்கைகளை எடுப்பதற்கு வலுவளிக்கும். இது, நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினை வலுப்படுத்துவதற்கு ஆதரவளிக்கும்.

**2020 ஓகத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்ட நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்புத் திணைக்களம் 22,000 மேற்பட்ட அழைப்புக்களையும் முறைப்பாடுகள்/ மனக்குறைகள் தொடர்பில் இதே காலப்பகுதியில் 3,500 இற்கு மேற்பட்ட தொலைநகல், மின்னஞ்சல் மற்றும் கடிதங்களையும் பெற்றுக்கொண்டது.** மேற்குறிப்பிட்ட முறைப்பாடுகள்/ மனக்குறைகளில் ஏறத்தாழ 44 சதவீதம் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் தொடர்பானவையாகக் காணப்பட்ட வேளையில் ஏறத்தாழ 35 சதவீதமானவை உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் தொடர்பிலானவையாகும். மேலும், நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்புத் திணைக்களத்தினால் பெறப்பட்ட முறைப்பாடுகள்/ மனக்குறைகளில் ஏறத்தாழ 13 சதவீதமானவை மத்திய வங்கியினால் ஒழுங்குமுறைப்படுத்தப்படாத நிறுவனங்கள் தொடர்பானவையாகவும் மொத்த முறைப்பாடுகளில் ஏறத்தாழ 5 சதவீதமானவை, மத்திய வங்கியினால் உரிமங்கள் இடைநிறுத்தப்பட்ட அல்லது இரத்துச் செய்யப்பட்ட 6 நிதிக் கம்பனிகள் தொடர்பானவையாகவும் காணப்பட்டன. முறைப்பாடுகளில் ஏறத்தாழ 2 சதவீதமானவை இலங்கையில் தொழிற்படுகின்ற அதிகாரமளிக்கப்படாத நிதியியல் நிறுவனங்கள் தொடர்பிலானவையாகும். நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்புத் திணைக்களத்திற்கு நெறிப்படுத்தப்பட்ட முறைப்பாடுகள் மற்றும் மனக்குறைகளின் தன்மை முக்கியமாக நிதியியல் வசதிகளுக்கு உயர்ந்த வட்டி வீதங்கள் விதிக்கப்படுகின்றமை, உயர் தண்ட வட்டி வீதங்கள், நேரகாலத்துடனான தீர்ப்பனவிற்கு ஏற்படும் உயர்ந்த செலவுகள், வேறுபட்ட கட்டணங்கள் மற்றும் விதிப்புக்கள், கொடுகடன் தகவல் பணியகத்துடன் தொடர்பான பிரச்சனைகள், உத்தரவாதமளிப்போரின் கடப்பாடுகள், வாடிக்கையாளர்களுக்கு தகவல்களை வெளிப்படுத்தாமை, அதிகாரமளிக்கப்படாத நிதி வியாபாரங்கள், மீள்கொடுப்பனவு வசதிகள் மீதான சலுகைகளுக்கான கோரிக்கை மற்றும் குத்தகைக்குவிடப்பட்ட ஊர்திகளை மீண்டும் உடமைப்படுத்தல் போன்ற முக்கிய துறைகளை உள்ளடக்கியிருந்தன.

## நலிவடைந்த நிதியியல் நிறுவனங்கள் மீதான தீர்மானம் மற்றும் நடைமுறைப்படுத்தல் நடவடிக்கை

**தொடர்பான காலப்பகுதியில் மத்திய வங்கி தீர்மானம் மற்றும் நடைமுறைப்படுத்தல் நடவடிக்கைகள் இரண்டினையும் தொடர்ந்த வேளையில் இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத் திட்டத்தினை முகாமைப்படுத்தியது.** சென்றல் இன்வெஸ்ட்மன்ற் அன்ட் பினான்ஸ் பிஎல்சி, ஸ்ரான்டட் கிறெடிட் பினான்ஸ் லிமிடெட் மற்றும் ரிகேஎஸ் பினான்ஸ் லிமிடெட் என அழைக்கப்படும் உரிமம் இரத்துச் செய்யப்பட்ட மூன்று நிதிக் கம்பனிகளின் வைப்பாளர்களுக்கான இழப்பீட்டுக் கொடுப்பனவுகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றமைக்குப் புறம்பாக, இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் இலங்கை திரவத்தன்மை ஆதரவுத்திட்டத்தினூடாக த பினான்ஸ் கம்பனி பிஎல்சி, ஈரிஜ பினான்ஸ் லிமிடெட் மற்றும் சுவர்ணமாகால் பினான்ஸ்சியல் சேர்விஸஸ் பிஎல்சி என அறியப்படும் உரிமம் இரத்துச்செய்யப்பட்ட/ இடைநிறுத்தப்பட்ட நிதிக் கம்பனிகளின் வைப்பாளர்களுக்கான இழப்பீட்டுக் கொடுப்பனவுகள் 2020ஆம் ஆண்டுப்பகுதியில் தொடங்கின. தற்போதுள்ள இழப்பீடு மற்றும் கொடுப்பனவு நடைமுறைகளை விரிவாக்குவதற்காக சரியான நேரத்தில் வினைத்திறன் மிக்க முறையிலும் இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் இலங்கை திரவத்தன்மை ஆதரவுத்திட்டத்தினூடாக காப்புறுதி செய்யப்பட்ட வைப்பாளர்களுக்காக இழப்பீடு வழங்கும் நோக்கத்திற்காக ஆய்விற்குரிய ஆண்டுப்பகுதியில் முகவர் வங்கித்தொழில் கருதுகோளொன்று அறிமுகப்படுத்தப்பட்டது. இதற்கமைவாக, த பினான்ஸ் கம்பனி பிஎல்சி, ஈரிஜ பினான்ஸ் லிமிடெட் மற்றும் சுவர்ணமாகால் பினான்ஸ்சியல் சேர்விஸஸ் பிஎல்சி என்பனவற்றின் வைப்பாளர்களுக்கான இழப்பீட்டுக் கொடுப்பனவுகளுக்கான முகவர் வங்கியாக மக்கள் வங்கி நியமிக்கப்பட்டது. மத்திய வங்கி 2020 இறுதியில் உள்ளவாறு மேற்குறிப்பிட்ட ஆறு கம்பனிகள் தொடர்பில் 66,731 வைப்பாளர்களுக்கு ரூ.21,114.9 மில்லியனை இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் இலங்கை திரவத்தன்மை ஆதரவுத்திட்டத்தினூடாக இழப்பீடாகச் செலுத்தியிருக்கிறது.

**சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் இலங்கை பொலிசின் குற்றவியல் புலனாய்வுத் திணைக்களம் என்பனவற்றின் ஒத்துழைப்புடன் நடைமுறைப்படுத்தல் நடவடிக்கைகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டன.** 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் தொடர்பான ஏற்பாடுகளின் கீழ் தடைசெய்யப்பட்ட திட்டங்கள் தொடர்பில் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட முறைப்பாடுகள் பற்றி பல்வேறு புலன்விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும், மத்திய வங்கியின் சட்ட மற்றும் இணங்குவிப்புத் திணைக்களத்தின் ஆதரவுடன் வழக்குகளைத் தொடர்வதற்கு சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு ஏற்கனவே பாரப்படுத்தப்பட்ட

புலனாய்வுகள் தொடர்பில் இணைப்புக்களும் பின்தொடர் நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன. மேலும், தடைசெய்யப்பட்ட பல்வேறு வகையான திட்டங்களில் இணைந்து கொள்வதனால் ஏற்படும் பாதகமான விளைவுகள் பற்றி பொதுமக்களின் பல்வேறு பிரிவினரினதும் நிதியியல் அறிவினை மேம்படுத்தும் நோக்குடன் நாடளாவிய ரீதியில் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன.

**தீர்மான அதிகாரசபைகள் மற்றும் அதனுடைய தீர்மான அதிகாரங்களைக் குறித்துரைக்கின்ற தற்போதுள்ள ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பொன்றிற்குள் பன்னாட்டு ஆலோசனையாளர்களின் உதவியுடன் வங்கிகள் மற்றும் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களுக்கான தீர்மானக் கட்டமைப்பினை உருவாக்கும் செய்முறையில் மத்திய வங்கி ஈடுபட்டிருக்கிறது.** மேலும், உத்தேச புதிய வங்கித்தொழில் சட்டத்தில் தீர்மான நடைமுறைகள் மற்றும் வங்கிகளுக்கான வைப்புக் காப்புறுதி மீதான ஏற்பாடுகளை உள்ளடக்குவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ள.

## வெளிநாட்டுச் செலாவணியினை ஒழுங்குபடுத்தல் மற்றும் மேற்பார்வை செய்தல்

**இவ்வாண்டுப்பகுதியில் மத்திய வங்கி வெளிநாட்டுச் செலாவணித் தொழிற்பாடுகளுக்கு வசதியளிப்பதில் தொடர்ந்தும் ஈடுபட்டிருந்தது.** நலிவடைந்த வெளிநாட்டு ஒதுக்குகள் உட்பட உலகளாவிய நோய்த்தொற்றின் காரணமாக உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் அண்மையில் ஏற்பட்ட அபிவிருத்திகளைப் பரிசீலனையில் கொண்டு 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் பல்வேறு வழிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. இதற்கமைவாக, குறிப்பிட்ட நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்களுக்காக வெளிநாட்டுச் செலாவணியினை விடுவிப்பதனை மட்டுப்படுத்துவதற்காக அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு பணிப்புரைகள் விடுக்கப்பட்டன. நாட்டின் வெளிநாட்டு நாணய ஒதுக்குநிலைமைக்கு ஆதரவளிப்பதற்காக புலம்பெயர்ந்தோர் நிதிய மாற்றல் உட்பட குறிப்பிட்ட மூலதனக் கொடுக்கல்வாங்கல்களின் வெளிமுகப் பணவனுப்பல்களைக் கட்டுப்படுத்தும் விதத்தில் வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 22ஆம் பிரிவின் கீழ் கட்டளையொன்று பிறப்பிக்கப்பட்டது.

**மேலும், நாட்டிற்குள் வெளிநாட்டு நாணய உட்பாய்ச்சல்களைக் கவர்வதற்காக, அரசாங்கத்தின் மேலதிக வட்டிக் கொடுப்பனவுடன் விசேட வைப்புக் கணக்குகள் 2020 ஏப்பிறல் தொடக்கப்பகுதியில் அறிமுகப்படுத்தப்பட்டது.** வெளிநாட்டு நாணயங்களின் வடிவில் கூடியளவு சிறப்பு வைப்புக் கணக்கு வைப்புக்களை அதிகரிக்கும் நோக்குடன் ஆட்களின் அல்லது இலங்கையில் வதிபவரின் உடைமையிலுள்ள வெளிநாட்டு நாணயங்களை ஐ.அ.டொலர் 15,000 வரை அதிகரிப்பதற்கு வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 8ஆம் பிரிவின் கீழ் மற்றொரு கட்டளை பிறப்பிக்கப்பட்டது. வெளிநாட்டு நாணயக் கடன்பாட்டாளர்களினால் எதிர்நோக்கப்படும் இடர்ப்பாடுகளைப் பரிசீலனையில் கொண்டு, அத்தகைய வெளிநாட்டுச் செலாவணி உழைப்பாளர்களுக்கும் புலம்பெயர் வேலையாட்களுக்கும் வழங்கப்பட்ட தற்போதைய வெளிநாட்டு நாணயக் கடன்களை, இறுதி நடவடிக்கையொன்றாக இலங்கை ரூபாவில் அறவிடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களை அனுமதிக்கின்ற விதத்தில் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன. வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இசைந்து செல்லும் விதத்தில், மத்திய வங்கி வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களைத் தொடர்ந்தும் கண்காணித்து வருகிறது.

**நாணய மாற்று வியாபாரத்தில் ஈடுபடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ள மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்களின் நடவடிக்கைகள், உள்நாட்டு, வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையினை மேலும் அபிவிருத்தி செய்வதற்காகக் கண்காணிக்கப்பட்டன.** இவ்வாண்டுப்பகுதியில், மட்டுப் படுத்தப்பட்ட வணிகர்கள் வங்கித்தொழில் முறைமைக்கு ஐ.அ.டொலர் 132.71 மில்லியனை வைப்புச் செய்துள்ளதுடன் ஐ.அ.டொலர் 3.64 மில்லியனை விற்பனை செய்துமுள்ளனர். 2019ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது முறையே 51 சதவீதம் மற்றும் 83 சதவீத வீழ்ச்சியினைப் பதிவுசெய்தது. ஒட்டுமொத்தமாக, மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்கள் வீழ்ச்சியடைந்த செயலாற்றத்தினைக் காட்டியமைக்கு, மற்றைய விடயங்களுடன், நோய்த்தொற்றின் காரணமாக பொருளாதார நடவடிக்கைகள் குறைவடைந்தமையே காரணமாகும். உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் உட்பாய்ச்சல்கள்/ வெளிப்பாய்ச்சல்கள் உட்பட, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் விடுக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் மற்றும் பணிப்புரைகளின் நியதிகளில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களிடமிருந்து தரவுகளைச் சேகரிப்பதற்காக அனைத்தையுமுள்ளடக்கிய எல்லை கடந்த மற்றும் வெளிநாட்டு நாணயக் கொடுக்கல்வாங்கல்களைக் கண்காணிக்கின்ற முறைமையொன்றினை நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் வெளிநாட்டுச் செலாவணித் தொழிற்பாடுகள் மீது பேரண்டப் பொருளாதாரத் தீர்மானங்களை எடுப்பதற்கும் ஆதரவளிக்கப்பட்டது.

## கொடுகடன் தகவல்

**2020இன் கொடுகடன் தகவல் பணியகம் தொழில்துறைக்கு 8.6 மில்லியன் கடன் தகவல் அறிக்கைகளை வழங்கியதுடன் (இதில் 8.3 மில்லியன் கடன்வழங்கல் நிறுவனங்களினால் பெறப்பட்டவையாகும்) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 17.0 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைப் பதிவுசெய்தது.** 2020இல் சுயவிசாரணை கொடுகடன் அறிக்கைகளுக்கான கேள்வி 2019

8

உடன் ஒப்பிடுகையில் 43.0 சதவீத வீழ்ச்சியைப் பதிவுசெய்தது. 2020ஆம் ஆண்டுப்பகுதியில் 10,724 வாடிக்கையாளர்கள் அவர்களது சுயவிசாரணை கொடுகடன் அறிக்கைகளைப் பெறுவதற்காக பணியகத்தினை நாடியிருந்ததுடன் 1,903 வாடிக்கையாளர்கள் தமது சுயவிசாரணை அறிக்கைகளைப் பெற்றுக்கொள்வதற்காக வங்கிகளூடாக விண்ணப்பத்திருந்தனர். 2020ஆம் ஆண்டில் 225 புதிய நபர்கள் இணைவழி விசாரணைக் கொடுகடன் பணிகளுக்காக தம்மைப் பதிவுசெய்திருந்ததுடன் 1,336 பாவனையாளர்கள் தமது சுயவிசாரணை கொடுகடன் அறிக்கைகளை இணையத்தளத்தினூடாகப் பெற்றுக்கொண்டுமிருந்தனர். இவ்வீழ்ச்சிக்கு நாட்டில் காணப்பட்ட கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றுச் சூழ்நிலைகளின் காரணமாக விதிக்கப்பட்ட நடமாடல் கட்டுப்பாடுகளும் வங்கியின் கடன்வழங்கல்கள் இடையூறுகளுக்குட்பட்டமையுமே காரணங்களாகும்.

**கொடுகடன் தகவல் பணியத்தினால் வழங்கப்பட்ட வசதிகளை மேம்படுத்துவதற்காக 2020இல் பல்வேறு அபிவிருத்திகள் மேற்கொள்ளப்பட்டன.** அத்தகைய அபிவிருத்திகளிலொன்று 2020 திசெம்பரில் “நிகழ்நிலை சுயவிசாரணை” பணிகள் தொடங்கப்பட்டமையாகும். இது பணியகத்தின் வலைத்தளமூடாக பொதுமக்கள் அவர்களது சுயவிசாரணை அறிக்கை/ கொடுகடன் தகவல் பணியக மதிப்பெண் அறிக்கைகளுக்கு விண்ணப்பிப்பதனையும் பெற்றுக்கொள்வதனையும் இயலுமைப்படுத்தியது. மேலும், சட்ட இசைவுத்தாமத காலப்பகுதியில் அங்கத்துவ கடன்வழங்கல் நிறுவனங்களுக்கு தரவுகளை அறிக்கையிடுவது பற்றித் தேவையான தரவு அறிக்கையிடல் வழிகாட்டல்களை கொடுகடன் தகவல் பணியகம் வழங்கியதுடன் இதன் காரணமாக இத்திட்டத்திலுள்ள தகைமையுடைய கடன்பாட்டாளர்கள் அவர்களது கொடுகடன் மதிப்பெண் தொடர்பில் எதிர்காலத்தில் பாதிப்பெதனையும் கொண்டிருக்கமாட்டார்கள். கொடுகடன் தகவல் பணியகம் புதிய உரியவரிடமிருந்து உரியவருக்கான மாதிரிப்படுத்தலினூடாக அனைத்து உறுப்பினர் கடன்வழங்கல் நிறுவனங்களும் கொடுகடன் தகவல்களை அணுகுவதனை இயலுமைப்படுத்தும் விதத்தில் வசதிகளை வழங்கியதுடன் 2020 யூனிலிருந்து இது நிறுவனங்களை பணியக முறைமையுடன் மைய வங்கித்தொழில் முறைமையுடன் நேரடியாக இணைப்பதற்கு நிறுவனங்களை இயலுமைப்படுத்தியது. மேலும், கொடுகடன் மதிப்பெண்ணான “கொடுகடன் தகவல் பணியக மதிப்பெண்” கொடுகடன் தகவல் பன்னாட்டு கிறடிட் இன்வோ இன்ரநஷனல் ஜிஎம்பிச் இன் பங்குடமைகளூடாக அபிவிருத்தி செய்யப்பட்டதுடன் 2020 சனவரியில் உத்தியோகபூர்வமாக தொடங்கி வைக்கப்பட்டது. மேலும், அங்கத்துவ கடன்வழங்கல் நிறுவனங்கள் இடர்நேர்வு மதிப்பீட்டு நோக்கங்களுக்காக தமது தற்போதுள்ள வாடிக்கையாளர்களுக்கான கொடுகடன் தகவல் பணியகத்தின் மதிப்பெண்களைப் பெறுவதற்கு இயலுமை கொண்டனவாக இருந்தன. மேலும், எதிர்காலத்தினை ஊகித்துக்கொள்வதற்குப் பயன்படுத்தக்கூடிய கொடுகடன் சொத்துப்பட்டியலின் கடந்தகால நடத்தையின் அடிப்படையில் “பின்னோக்கிய கொடுகடன் தகவல் பணியக மதிப்பெண் பகுப்பாய்வு அறிக்கை” 2020 பெப்புருவரியில் அங்கத்துவ கடன்வழங்கல் நிறுவனங்களுக்கு வெளியிடப்பட்டது. பணியகத்தின் சாதனங்கள் தாங்கிக் கொள்ளக்கூடிய விலைகளில் கிடைக்கச் செய்யப்பட்டதுடன், குறிப்பாக, நுண்பாக நிதிப் பணிகளை வழங்குவோருக்கும் எண்ணிம கடன்வழங்குவோருக்கும் குறைந்த விலைகளில் இவற்றை வழங்குவதற்கு மேலும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.